பக்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 04 ஞாயிற்றுக்கிழமை (16-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 82

# கிளாலியில் புலிகளின் பகுதிக்குள் ஊடுருவிய சிப்பாய் சூட்டுக்குப் பலி!

## பெண் புலிகள் மீது கிரனேட் வீச முற்பட்டவேளை சம்பவம்

கிளிநொச்சி,பெப்ரவரி16

**கிளாலிப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் ஊடுருவி மறைந்திருந்த மூன்று இராணுவ சிப்பாய்களில் ஒருவர் பெண் புலிகளின் துப்பாக்கிச் சூட்டில் சிக்கிப் பலியானார். பெண்புலிகளை நோக்கி இவர் கிரனேட்டை வீச முற்பட்ட சமயம் அவர்களின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாகத் தெரிகிறது.**

**நேற்று பகல் 2.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறை கிளிநொச்சியில் இருந்து நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

15.02.2003 அன்று பிற்பகல் 2.15 மணியளவில் கிளாலிப்பகுதிக்கு அண்மையாக அமைந்துள்ள புலிகளின் முன்னணிக் காப்பரண் பகுதியில் உள்ள தமது காப்பரணுக்கு பெண் போராளிகள் திரும்பிக்கொண்டிருந்தனர். அப்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியினுள் உள் நுழைந்து மறைந்திருந்த மூன்று இராணுவத்தினர் பெண் போராளிகளைக் கண்டவுடன் சூனியப்பிரதேசத்தை நோக்கி ஓடத்தொடங்கினர்.

தொடர்ந்து அவர்களை ஓடவேண்டாம் எனவும், அவர்களது கைகளை உயர்த்துமாறும் பெண்போராளிகள் சைகைசெய்தபோதும் அதனை பொருட்படுத்தாது முன்னே ஆயுதங்களுடன் சென்ற இரு இராணுவத்தினரும் சூனியப்பிரதேசத்துக்குள் ஓடி மறைந்தனர்.

கைக்குண்டினை வைத்திருந்த மூன்றாவது இராணுவச்சிப்பாய் பெண்போராளிகளை நோக்கி கைக்குண்டை வீச முற்பட்டபோது போராளிகள் திருப்பித்தாக்கியதில் குறிப்பிட்ட சிப்பாய் பெண்போராளிகளின் காப்பரணுக்கு அருகில் மரணமானார்.

இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக யாழ்மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழு மற்றும் கிளிநொச்சி போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகங்களுக்கு புலிகளினால் தகவல் வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் யாழ்.மற்றும் கிளிநொச்சி போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு சென்று பார்வையிட்டனர். கண்காணிப்புக் குழுவினரின் வேண்டுகோளுக்கு அமைய இறந்த இராணுவச்சிப்பாயின் உடலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளை புலிகள் மேற்கொண்டு வருகின்றனர் - என்றுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பெண் போராளிகள் இருவர் உப்புவெளியில் நேற்று கைது

### கண்டித்து திருமலையில் நாளை ஹர்த்தால்

திருகோணமலை,பெப்.16

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணையவந்த இரு சிறுமிகளை அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கச் சென்ற விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் இருவர் உப்புவெளியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பின்னர் திருமலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவர்கள் இருவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இரு பெண் போராளிகளும் அரசியல் பணிக்காக சாம்பல்தீவுப் பகுதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்றனர்.

அச்சமயம் திருமலையைச் சேர்ந்த இரு சிறுமிகள் விருப்பத்தின் பேரில் புலிகள் இயக்கத்தில் இணைய முன வந்தனர்.

வயது குறைந்த காரணத்தால்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் பேச்சுக்களில் இப்போது இல்லை

### ஜப்பானின் விசேட தூதர் அகாஷி கருத்து

கொழும்பு,பெப்.16

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களில் ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் இப்போது இல்லை. அதில் ஒரு தொய்வுநிலை-பின்னடைவு நிலை காணப்படுகிறது. ஓர் இக்கட்டான சூழ்நிலை தோன்றியுள்ளது.

இப்படிக் கூறினார் இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷி.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அவர் நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நோர்வே அரசு பேச்சுக்களை மேலும் முன்னெடுப்பதற்கான தனது முழுப்பங்களிப்பையும் வழங்கி வருகின்றது. பேச்சுக்கள் ஆரம்பத்தில் உற்சாகமாகச் சென்றன. தற்சமயம் அந்த உற்சாகம் காணப்படவில்லை.

பேச்சுக்களில் பின்னடைவுகள்,

(20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா 9கோடி டொலர் உதவி

வாஷிங்ரன்,பெப்.16

இலங்கையில் மீளக்குடியமரும் மக்களின் உடனடி மனிதாபிமானப் பணிகளுக்கும் கண்ணி அகற்றும் பணிகளுக்கும் ஒன்பது கோடி அமெரிக்க டொலர்களை அமெரிக்க அரசு வழங்க முடிவு செய்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகார பிரதி அமைச்சர் ரிச்சார்ட் ஆர்மிட்டேஜ் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மக்களின் உடனடி மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்வதான திட்டங்களுக்கு 8 கோடி அமெரிக்க டொலர் உதவியையும் கண்ணி வெடிகளை அகற்றும் திட்டத்திற்காக ஒரு கோடி அமெரிக்க டொலர் உதவியையும் வழங்குவதில் நான் மிகவும்

(20ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் சம்பவத்தைக் கண்டித்து கிளிநொச்சி, வவுனியாவில் பேரணிகள்

கிளிநொச்சி,பெப்.16

மானிப்பாயில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டன.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில முன்றிலில் இருந்தும் டிப்போ சந்தியில் இருந்தும் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான பேரணிகள் முதலில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தை அடைந்தன.

பின்னர் அங்கிருந்து இணைந்து அரச செயலகத்தைச் சென்று சேர்ந்தது பேரணி.

பேரணிகளில் கலந்துகொண்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களும மாணவர்களும் சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.

படையினருக்கு எதிராகக் கோஷங்களையும் எழுப்பினர்.

கிளிநொச்சி மாவட்ட தமிழர் தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பேரணியின் முடிவில் கண்டனக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

கூட்டத்தையடுத்து நோர்வே அரசுக்கும் கண்காணிப்புக்குழுத் தலைவருக்குமான மகஜர்கள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புகுழு அதிகாரியிடமும் - ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்குமான மகஜர்கள் கிளிநொச்சி அரச அதிபரிடமும் - கையளிக்கப்பட்டன.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளருக்கு மகஜரின் பிரதி அனுப்பப்பட்டுள்ளது.

இந்தப் பேரணி காரணமாக ஏ-9 பாதையூடான போக்குவரத்து முற்பகல 10 மணி முதல் சிலமணிநேரம் தடைப்பட்டிருந்தது.

வவுனியா குருமன்காடு சந்தியில் இருந்து ஆரம்பமான கண்டனப்பேரணி

(20ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் பேரவை தலைவரை தடுத்து விசாரணை

யாழ்ப்பாணம்,பெப்.16

கிளிநொச்சியிலிருந்து நேற்றுமுன்தினம் வான் ஒன்றில் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் முகமாலை சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டு 3 மணிநேரம் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

நேற்று முன்தினம் யாழ்நகரில் நடத்தப்பட்ட கண்டனப்பேரணியின் போது யாழ். மாவட்ட ராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் கொடும்பாவி எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே அவர் விசாரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

அவர் வந்த வான் துருவித்துருவி

(20ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் இந்தியா பயணம்

கொழும்பு,பெப்.16

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 27 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்கிறார்.

அங்கு இடம்பெறும் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் அவர் இந்திய பிரதமர் வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த சிங்ஹா ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

அரசு - புலிகள் இடையேயான பேச்சுகளின் முன்னேற்றம் குறித்து எடுத்து விளக்குவார். (ப-3)

## பயங்கரவாத செயல்களை கைவிட்டுள்ளதை நிரூபித்தால்

# புலிகள் மீதான தடை நீக்கம் பற்றி அமெரிக்கா பரிசீலிக்கும்

வாஷிங்ரன்,பெப்.16

கடந்தகால பயங்கரவாத நடவடிக்கைகளை முற்றுமுழுதாகக் கைவிட்டுள்ளதாக நடத்தை மூலமும் செயற்பாடுகள் மூலமும் விடுதலைப் புலிகள் நிரூபிக்கும் பட்சத்தில் அந்த அமைப்பு மீதான தடையை நீக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

- இப்படிக் கூறியுள்ளார் அமெரிக்க வெளிவிவகார பிரதி அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ்.

வாஷிங்ரனில் நேற்றுமுன்தினம் நடந்த கருத்தரங்கில் 'இலங்கையின் சமாதான முயற்சிகள்' என்னும் தலைப்பில் பேசுகையில் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் அமைப்பு தற்போது அரசியலில் தனது உண்மையான உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளதால், அமெரிக்க அரசு உற்சாகப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் மேலும் தொடர்வதற்கு விடுதலைப் புலிகள் தங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளை முற்றாகக் கைவிட்டுவிட்டதாகவும் தமது வன்முறைச் செயற்பாட்டுக் காலங்கள் முடிவடைந்து விட்டன என்பதையும் தெளிவாக சந்தேகத்திற்கும் இடமில்லாமல் பகிரங்கமாகத் தெரிவிக்கவேண்டுமென நாங்கள் விரும்புகின்றோம்.

பயங்கரவாதத் தந்திரங்களையும்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்தசங்கரிக்கு எதிராக அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்.பொதுநூலகத் திறப்பு விழா தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையை யாழ். மாவட்ட பொதுஅமைப்புகளின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஆனந்தசங்கரி தெரிவித்துள்ள கருத்துக்களை ஒன்றியம் ஆட்சேபித்துள்ளது.

ஆனந்தசங்கரியின் அறிக்கைக்கு பதில் அளித்து ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை நாளை முழுமையாக வெளிவரும். (ப-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி விதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

என்றென்றும் தரம்
அது நிரந்தரம்
10 YEARS WARRANTY
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பளை - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1ச, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

# பங்களாதேஷ் அணிக்கு கிரிக்கெட் தேவையா?

8ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஆரம்பித்ததிலிருந்து இதுவரை சுவாரஸியத்துக்குக் குறைவில்லை. தொடக்கத்திலிருந்தே சதங்கள் குவிந்தன. மறுபுறத்தில் சாதனைகள் தொடர்கின்றன. 'பி' பிரிவில் பங்களாதேஷ் - இலங்கை இடையேயான ஆட்டம் கிரிக்கெட்டில் வரலாறே படைத்துள்ளது.

இந்த உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் ஆடும் டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற 9 நாடுகளில் பங்களாதேஷம் ஒன்று. ஆனால் அதன் ஆட்டம் மட்டும் டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற ஒரு நாட்டு கிரிக்கெட் அணியின் ஆட்டம் போன்று இல்லை. பந்துவீச்சு, துடுப்பாட்டம் இரண்டிலும் மிகப் பலவீனமான அணியாக அது இருக்கிறது.

பங்காதேஷ் டெஸ்ட் அந்தஸ்துப் பெற இலங்கையும் இந்தியாவும் பெரும் துணைபுரிந்தன. ஆனால், தனக்குக் கிடைத்த டெஸ்ட் அந்தஸ்தை தககவைத்துக்கொள்ளும் திறமை அந்த அணியிடம் இருக்கிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடுகளில் தொடர்ச்சியாகத் தோல்விகளைச் சந்தித்த சாதனையையும் அதுவே நிகழ்த்தியுள்ளது. இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் டெஸ்ட் அந்தஸ்துப் பெறாத கனடா அணியுடன் நடந்த முதல் போட்டியிலும் பங்களாதேஷ் படுதோல்வி அடைந்துள்ளது.

டெஸ்ட் அந்தஸ்துப் பெறாத நெதர்லாந்து அணி இந்தியாவுடனான ஆட்டத்தில் தோல்வியுற்றாலும் மிகச் சிறப்பாக ஆடியிருந்தது. கடைசிவரை போராடியே தோற்றிருந்தது. ஆனால், பங்களாதேஷிடம் இது எதனையும் காணவில்லை. இந்த நிலை தொடர்ந்தால் தனது டெஸ்ட் அந்தஸ்தைப் பறிகொடுக்க வேண்டிய நிலைக்கும் பங்களாதேஷ் தள்ளப்படலாம். ஏற்கனவே அதனிடம் இருந்து டெஸ்ட் அந்தஸ்து மீளப்பெறப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் எழத்தொடங்கியுள்ள நிலையில் பங்களாதேஷ் வீரர்கள் தம் முழுத்திறமையையும் வெளிப்படுத்த வேண்டிய நிர்பந்தத்தை உணர்ந்து செயற்படுவார்களா?

வெள்ளியன்று பீற்றமரிட்ஸ்போர்க்கில் உள்ள சிற்றி ஓவல் மைதானத்தில் இலங்கை - பங்களாதேஷ் ஆட்டம் நடந்தது. இந்த மைதானத்தில நடந்த முதலாவது சர்வதேச ஆட்டம் இது. இதில் ஆட்டநாயகனாகத் தெரிவாகும் வீரர் அதன் ஞாபகமாக மரக்கன்று ஒன்றை நடவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த பேறு வேகப் பந்து வீச்சாளர் சமிந்த வாஸுக்குக் கிடைத்தது.

ஆட்டத்தின் ஆரம்பத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றது இலங்கை. பங்களாதேஷை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார் சனத் ஜெயசூரிய. தமக்கு அன்றைய நாள் ஒரு சாபக்கேடான நாள் என்று தெரியாமலே களமிறங்கினர் பங்களாதேஷியர்கள். முதலாவது பந்தை எதிர்கொள்ள ஆயத்தமானவர் ஆரம்பத் துடுப்பாளர் ஹனன் சர்கார். எதிரே அனுபவம் மிக்க வேகப் பந்துவீச்சாளர் சமிந்த வாஸ். அவரிடம் இருந்து சீறி வந்த பந்தை முன்னே சென்று தடுத்தாட நினைத்தார் சர்கார். ஆனால, பந்து அவர் கணித்தபடி வரவில்லை. மட்டையிலிருந்து சற்றே விலகி வேகமாகச் சீறி வலது இலக்கைத் தாக்கித் தகர்த்தது. ஆட்டத்தின் முதல் பந்திலேயே முதல் விக்கெட் சரிந்தது. மிகமோசமான ஆரம்பம் அடுத்து வந்தவர் மொஹமட் அஷ்ரபுள். நிலையெடுத்து நின்ற அவர் வாஸின் பந்தை எதிர்கொள்ள ஆயத்தமானார். பந்து இடது இலக்குக்கு வெளியே வீழ்ந்து உள்நோக்கி சற்றே திரும்பியது. மட்டையை நேரே தூக்கி ஆடினார். நடு மட்டையில்பட்ட பந்து 'லட்டு' மாதிரி வாஸின் கைகளுக்குள்ளே போய்ப் பதுங்கிக் கொண்டது. ஓட்டம் எதுவும் பெறாமலே இரண்டு விக்கெட் இழப்பு. வாஸின் பந்தில் இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்ந்ததில் இலங்கை வீரர்களுக்கு வெகு உற்சாகம். 'ஹற்றிக்' பெற அவர்கள் வலை விரித்தனர். 'ஓவ் சைட்டில் 'சிலிப்ஸ்' அடுக்கப்பட்டனர். வந்தவர் இஷானுள் ஹக். மூன்றாவதாகத் தானும் அவுட்டானால் வாஸுக்கு 'ஹற்றிக்' என்பது அவருக்கும் தெரியும். நிதானமாக ஆடத்தான் முயன்றார். ஆனால், என்ன நடக்கின்றது என்பதை உணர் வதற்குள் சீறி வந்த பந்தை எதிர்கொண்டு மட்டையை முன்னே கொண்டுசென்றார். பந்து மட்டையின் விளிம்பில் பட்டு எகிறி 'சிலிப்ஸில்' நின்ற ஜெயவர்த்தனவிடம் சென்றது. விடுவாரா அவர்? கொத்திக் கொண்டு பறந்தார். வாஸின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மைதானத்தின் உள்ளே பறந்து திரிந்தார் அவர். கிரிக்கெட் வரலாற்றிலேயே ஆட்டம் ஆரம்பித்த முதல் மூன்று பந்துகளில் 'ஹற்றிக்' எடுத்து வரலாறு படைத்தார்.

பங்களாதேஷியர்களுக்கு என்ன நடக்கின்றது என்று புரியவில்லை.

(19ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அணியும் நேற்று சாதனை!

கேப்டவுன், பெப்.16

ஆஸ்திரேலிய அணியுடனான ஆட்டத்தில் குறைந்தளவு ஓட்டங்களைப் பெற்று கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிகளிலேயே மிகக் குறைந்த ஓட்டங்களைப் பெற்ற அணி என்ற சாதனையை இந்திய அணி நேற்று ஏற்படுத்தியது.

செஞ்சூரியனில் இந்த ஆட்டம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்றது இந்தியா. முதலில் ஆடும் அணி ஓட்டங்களைக் குவிக்கக்கூடும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்ட அந்த ஆடுகளத்தில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார் இந்திய அணித் தலைவர் கங்குலி.

ஆனால், ஆஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர்கள் பிரட்லீயும், ஜிலெஸ்பியும் இந்திய விக்கெட்டுக்களை மழமழவெனச் சரித்தனர். இந்திய அணியின் முன்னணி துடுப்பாளர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்தனர். 41.4 ஓவர்களில் 125 ஓட்டங்களுக்குள் சுருண்டது இந்திய அணி. டெண்டுல்கர் மட்டும் ஆகக் கூடுதலாக 36 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் மூலம் இதுவரை நடந்த உலகக் கிண்ணப் போட்டிகளிலேயே

(20ஆம் பக்கம் பாா்க்க)

## சிம்பாப்வேக்கு 4 புள்ளிகள் வழங்கப்பட்டன

சிம்பாப்வேயில் நடைபெற இருந்த ஆட்டத்தை இங்கிலாந்து புறக்கணித்ததால் அது வெற்றிக்கான 4 புள்ளிகளை இழந்துள்ளது. அந்தப் புள்ளிகள் சிம்பாப்வேக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண தொழில்நுட்பக்குழு நேற்றுக்காலை இந்த முடிவை எடுத்தது. பாதுகாப்புக் காரணங்களுக்காக சிம்பாப்வேக்கு செல்ல முடியாத நிலை இருப்பதாக இங்கிலாந்து காரணம் கூறியிருந்தது. அது குறித்து நேற்று விரிவாக ஆராய்ந்தது தொழில்நுட்பக் குழு. பின்னர் இங்கிலாந்தின் காரணத்தை அடியோடு நிராகரித்து விட்டது.

இதனால், வெற்றிக்கான 4 புள்ளிகள் சிம்பாப்வே அணிக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.சி.சியின் இந்த முடிவால் இங்கிலாந்து அணி 'சுப்பர் சிக்ஸு'க்குள் செல்லும் வாய்ப்பு குன்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ம)

## கங்குலியை சாடுகிறார் ஆஸி.முன்னாள் வீரர்

இந்திய அணித் தலைவர் கங்குலி சிந்தனையில் சுறுசுறுப்பற்றவர் என்று ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் கிரெய்க் சாப்பல் தனது ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"கங்குலியின் சிந்தனை சுறுசுறுப்பின்மையால் அவரது திறனை அவரே வீணடித்துக்கொண்டிருக்கின்றார்" - என்று சாப்பல் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 8 ஆட்டங்களில் கங்குலி பெற்ற ஓட்டங்கள் சர்வதேச தரத்தில் மிகவும் கேவலமானது. 8 ஆட்டங்களில் 66 ஓட்டங்களை மட்டுமே அவர் பெற்றுள்ளார். தன்னுடைய திறனை வளர்த்தெடுப்பது தன்னால் முடியாத காரியம் என்று அவர் நினைப்பது அவமானகரமான ஒரு நிலையாகும் என்றும் சாப்பல் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து அணியுடனான ஆட்டம் பற்றியும் விமர்சித்துள்ள அவர், நெதர்லாந்துப் பந்து வீச்சாளர்கள் சாதாரணமாகப் பந்து வீசிய போதும் இந்தியர்கள் தம் திறமையை வெளிப்படுத்தத் தவறிவிட்டனர் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார். (ம)

# இரு வருட தடையிலிருந்து தப்புவாரா ஷேன் வோர்ன்

தடை செய்யப்பட்ட மருந்துகளை உட்கொண்டதற்காக ஷேன் வோர்ன் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க 2வருடம் தடை செய்யப்படலாம் என்று விதிகள் கூறுகின்றன.

அவரது இன்னொரு சிறுநீர் மாதிரி பரிசோதனையில் நிரபராதி என்று நிரூபணமானால் 3மாத தடை நிச்சயம் என்ற நிலை இருந்தது. ஆனால் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் இவ்விஷயத்தை இரண்டு விதமாக பார்க்கிறது.

தடைசெய்யப்பட்ட மருந்து மட்டுமே உட்கொண்டிருந்தால் 3மாதத் தடை. ஆனால் "தடை செய்யப்பட்ட முறை"யில் அதை எடுத்துக்கொண்டிருந்தால் 2வருட தடை நிச்சயம் என்று தெரிகிறது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியத்தின் போதை மருந்து தடுப்புச் சட்டம் 4.1பி பிரிவின்படி வோர்ன் அந்த விதியை மீறியிருந்தால் அதாவது "தடைசெய்யப்பட்ட முறை" என்பதின் கீழ் அவர் செயல் இருந்தால் 2வருடத் தடை உறுதியாகி விடும்.

"தடை செய்யப்பட்ட முறை"க்கான பரிசோதனை செய்ய ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரிய உயரதிகாரி ஜேம்ஸ் சதர்லேண்ட் ஒப்புதல் கொடுத்துள்ளார் என்று நேற்று 'சிட்னி மோர்னிங் ஹெரால்ட்' கூறியது. (ம)




SHARP Action of the day



டெண்டுல்கரின் விக்கெட்டை வீழ்த்திய ஜிலெஸ்பியை வாழ்த்தும் பொன்டிங்.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் Browns
BROWNS ELECTORINICS

# ஓய்வு பெறுகிறார் ஜொன்டி!

கேப்டவுன், பெப்.16

உலகின் மிகச் சிறந்த கிரிக்கெட் களத்தடுப்பாளரும் தென்னாபிரிக்க அணியின் முக்கிய வீரருமான ஜொன்டி ரோட்ஸ் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

நியூஸிலாந்துடன் நடைபெற்ற ஆட்டத்தில் ஜொன்டி கையில் காயமடைந்திருந்தார். அவர் குணமடைய 3 வாரங்களுக்கு மேல் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் அவருக்குப் பதிலாக வேறொருவரை அணியில் சேர்த்துக்கொள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை முடிவு செய்தது.

இதனை அடுத்து தான் ஓய்வு பெறுவதாக ஜொன்டி ரோட்ஸ் அறிவித்துள்ளார். 33 வயதான ஜொன்டி இப்போதும் சிறப்பாக களத்தடுப்பில் ஈடுபடுபவர். அத்துடன் விக்கெட்டுக்களுக்கு இடையில் மிக வேகமாக ஓடி ஓட்டங்களைக் குவிக்கக்கூடியவர். அதிகமாகப் 'பொயின்ட்' திசையில் நிற்கும் இவரால் எதிரணிகளுக்கு எப்போதுமே தலையிடிதான்.

1992ஆம் ஆண்டு பாகிஸ்தானுடன் நடந்த ஆட்டத்தில் ஜொன்டி அறிமுகமானார். வலிப்பு நோய் உள்ள ஒருவர் விளையாட்டில் நுழைந்து கலக்கியிருக்கிறார் என்றால் அது ஜொன்டி மனோதிடத்துக்கு ஒரு சான்று. தன் ஓய்வு குறித்து ஜொன்டி தெரிவித்ததாவது:-

"எனக்கு மிகவும் ஏமாற்றமாக இருக்கின்றது. ஷேன் வோர்ன் வெளியேறியதும் மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கின்றது. ஏனெனில் களத்தின் உள்ளேயும் வெளியேயும் நானும் வோர்னும் அணிக்கு ஒரேமாதிரியான தன்னம்பிக்கையூட்டும் சில செயல்களைச் செய்திருக்கின்றோம். எங்கள் அணியை உற்சாகப்படுத்தியிருக்கின்றோம். ஆனால், உலகக் கிண்ண போட்டி தனி வீரர்களுக்குச் சொந்தமானதல்ல. பல ஆட்டங்கள் இந்த உலகக் கிண்ண போட்டியில் தனி மனித ஆட்டத்தையும் தாண்டி விறுவிறுப்புடன் அமையப் போகின்றன" - என்றார்.

டெஸ்ட் ஆட்டங்கள் 52இல் ஆடியுள்ள ஜொன்டி 2ஆயிரத்து 532 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 17 அரைச் சதங்கள் அவற்றுள் அடங்கும். 34 பிடிகளை எடுத்துள்ளார். 245 ஒருநாள் ஆட்டங்களில் 5ஆயிரத்து 935 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 2 சதங்களையும், 33 அரைச் சதங்களையும் பெற்றுள்ளார். 105 பிடிகளை எடுத்துள்ளார். (ம)

SHARP
தரமான தத்துவத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077-7308417
MPAQ COMPUTERS

உதவி வழங்கும் மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கான

# திட்டங்களை இனங்காண்பதற்கு ஜப்பானிலிருந்து இரு குழுக்கள்

## அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகின்றன

யாழ்ப்பாணம்,பெப்.16

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் மே மாதம் இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவும் நாடுகளின் மாநாட்டில சமர்ப்பிக்கப்படவுள்ள திட்டங்களை இனங்காணவென அந்த நாட்டின் இரு குழுக்கள் அடுத்தவாரம் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றன.

மேமாதம் நடைபெறவுள்ள மாநாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வுத்திட்டங்களுக்கு உதவி வழங்குவது தொடர்பாக முக்கியமாக ஆராயப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சமர்ப்பித்து ஆராயப்படவிருக்கும் திட்டங்களை இனங்காணும்பணியில் ஜப்பான் நாட்டின் நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

இதன் ஒரு பகுதியாக -

ஜப்பான் தொழில்நுட்பக் கூட்டுத்தாபன அதிகாரிகள் குழு ஒன்று எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றது. கைத்தொழில், மக்கள் மீள் குடியமர்வு, விவசாய அபிவருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி ஆகிய துறை சார்ந்த திட்டங்களை இக்குழு இனங்காணவிருக்கிறது.

மற்றொரு குழு எதிர்வரும் 21 ஆம திகதி யாழ்ப்பாணம் வருகின்றது. ஜப்பான் அரசின் சர்வதேச உதவி வழங்கும் நிறுவனத்தின் 8 பிரதிநிதிகள் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

கடற்றொழில் துறை சார்ந்த திட்டங்களை இக்குழு இனங்காண இருக்கிறது.

யாழ் அரசஅதிபர், யாழ்பல்கலைக்கழக மீன்பிடித்துறை விரிவுரையாளர்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப்பிரதிநிதிகள் ஆகியோரை இக்குழு சந்திக்கும்.

ஜப்பானில் இருந்து வரும் இரு குழுக்களும் தாம் இனங்காணும் திட்டங்களை அறிக்கைகளாகத் தயாரித்து உதவி வழங்கும் கூட்டத்தில் திட்ட வரைவுகளை சமர்ப்பிக்க இருக்கின்றன.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு நிதி உதவிகளை வழங்கவேண்டாம்

## எதிர்க்கட்சியினர் ஜப்பானிடம் கோரிக்கை

கொழும்பு.பெப்.16

புலிகள் நிராயுதபாணிகளாகும் வரை அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வெளிநாடுகள் நிதியுதவி வழங்கக்கூடாது. ஜப்பான் அரசிடம் இவ்விடயம் தொடர்பாக வலியுறுத்தியுள்ளோம்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சியின் அலுவலகத்தில் நடந்த செயதியாளர் மாநாட்டில் உரையாற்றிய பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச மட்டத்தில் புலிகளுக்கு இன்று அங்கீகாரம் கிடைப்பதற்கான சகல வழிகளையும் அரசு செய்துவருகின்றது.

புலிகளின் பிரதேசங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி அவர்களை மேலும் பலம்வாய்ந்தவர்களாக்கும். மறுபுறம் தனி நாட்டுக்கு அங்கீகாரம் வழங்கும ஒரு செயலாகவும் அமைந்துவிடும்.

ஜப்பான் அரசுக்கு இவ்விடயம் தொடர்பாக நாம் விளக்கியுள்ளோம்.

புலிகள் நிராயுதபாணிகளாகும்வரை இந்நாட்டில் சமாதானத்தை எதிர்பார்க்க முடியாது என அவர் கூறினார்.

பத்திரிகையாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த மங்கள சமரவீர கூறுவதாவது:-

இன்று இலங்கை இராணுவத்தை விட புலிகள் பலம் வாய்ந்தவர்களாக உள்ளனர். சமாதான ஒப்பந்த காலத்தில் தமது இராணுவ பலத்தை வெகுவாக அதிகரித்துள்ளனர். எனவே, அவர்களை மேலும் பலப்படுத்த நிதியுதவி வழங்குவதை வெளிநாடுகள் நிறுத்த வேண்டும். - என்று கூறினார்.

# தொலைக்கல்வி நிலையத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்

கொழும்பு,பெப்.16

தொலைக்கல்வி நிலையம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவும், உலக வங்கித் தலைவர் ஜேம்ஸ்வுல்வென்ஸனும் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் கொழும்பில் திறந்துவைத்தனர்.

உலகளாவிய அபிவிருத்திக்கான கல்வி வலையமைப்புடன் ஐம்பதிற்கும் அதிகமான தொலைக்கல்வி நிலையங்கள் இதன் மூலம் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பம், தகவல் பரிமாற்றம், அபிவிருத்தி தொடர்பான விடயங்களை அறிதல், பிரச்சினைகளுக்கு தீர்வு, புனர்நிர்மாணம், வறுமை ஒழிப்பு போன்றவற்றுக்குத் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கைக்கு இதன்மூலம் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தத் தொலைக்கல்வி நிலையமானது இலங்கையின் அபிவிருத்தியில் குறிப்பாக சமாதானம், சமத்துவம் போன்றவற்றில் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என உலக வங்கியின் இலங்கைக்கான இணைப்பாளர் பெபோரா பிரட்மன் தெரிவித்தார். (எ)

### மெய்வன்மை போட்டிகள்

அச்சுவேலி,பெப்.16

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் 19 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் அருட்சகோதரி மேரி றொசாறியோ தலைமையில் நடைபெறும்.

போட்டிகளிற்கு கோப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக அச்சுவேலி பங்குத் தந்தை வண.பிதா எவ்.எக்ஸ்.கருணாரட்ணம் கலந்துகொள்வார். (எ-17)

★ ★ ★

அச்சுவேலி,பெப்.16

ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் கோப்பாய கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.யாழவன் கலந்துகொள்வார். (எ-11)

★ ★ ★

வலிகாமம் தெற்கு,பெப்.16

சுன்னாகம் கோட்டைக்காடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு, அதிபர் திருச்சி. நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சுசுந்தரசிவம் பிரதமவிருந்தினராகவும் மயிலணி இந்து மகாவித்தியாலய அதிபர் த.சந்தணசர்மா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-152)

### யாழ்.இந்து உயர்தர மாணவர் கவனத்துக்கு!

யாழ்.இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் 2003 ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான வினாத்தாள் கலந்துரையாடல் நாளை தொடக்கம் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 4 மணி வரையும் நடைபெறவுள்ளது.

சகல மாணவர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (எ-10)

கண்காணித்து ஆலோசனை வழங்க

# மேற்பார்வைக் குழுக்கள் பாடசாலைகளுக்கு விஜயம்

அச்சுவேலி,பெப்.16

பாடசாலைகளின் கல்வி வளர்ச்சி - நிர்வாகம் தொடர்பான நடைமுறைகளைக் கண்காணித்து ஆலோசனைகளை வழங்குவதற்கென மாகாணமட்டத்தில் - வலய மட்டத்தில் - கல்விக் கோட்ட மட்டத்தில் மேற்பார்வைக் குழுக்கள் பாடசாலைகளுக்கு விஜயம் செய்யவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு மற்றும் மாகாணக்கல்வித் திணைக்கள மட்டத்திலான உயர் அதிகாரிகள் உள்ளடங்கிய மேற்பார்வைக் குழு பாடசாலைகளுக்கு திடீர் விஜயம் செய்யும்.

அதே நேரத்தில், கல்வி வலய மட்டத்தில் கல்விப்பணிப்பாளர்கள் தலைமையிலும் கோட்ட மட்டத்தில் கோட்டக்கல்வி அலுவலர்கள் தலைமையிலும் மேற்பார்வைக் குழுக்கள் பாடசாலைகளுக்கு விஜயம் செய்யவுள்ளன.

யாழ். மாவட்ட மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தில் காணப்படும் வீழ்ச்சி மற்றும் பாடசாலைகளின் நிர்வாகச் செயற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக இந்த மேற்பார்வைக் குழுக்கள் மூலம் உரிய நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-11)

### முழுநிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.16

அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தின் இன்றைய முழுநிலா கருத்தரங்கில் 'உறவும் பிரிவும்: குடும்பத்தின் சமூகவியல்' எனும் பொருளில் யாழ்பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி என்சண்முகலிங்கன் உரை நிகழ்த்துவார்.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.சென்பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் இக்கருத்தரங்கு நடைபெறும். (எ-10)

### இன்றைய நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.16

ஆனைக்கோட்டை லைவன் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வை.ஆர்ஜன் ஞாபகார்த்தமாக நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று பி.ப. 2.30 மணிக்கு மதுபாபரன் தலைமையில் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இறுதியாட்டத்தில் லைவன் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் பஷன் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (ம-10)

மானிப்பாயில் நடந்த சம்பவம்:

# போராளிகளைத் தாக்கியோரை கண்டுபிடித்துத் தண்டியுங்கள்

## இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.16

நிராயுதபாணிகளாக அரசியல் பணிபுரியச்சென்ற விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் காட்டுமிராண்டித் தனமாகப் படையினரால் தாக்கப்பட்டதும் -

நியாயம் கேட்கச் சென்ற பொது மக்கள் இராணுவ அதிகாரத்தால் அடக்கப்பட்டதும் அப்பட்டமான ஜனநாயக விரோதப் போக்கின் வெளிப்பாடாகும் - அடிப்படை மனித உரிமை மீறலுமாகும்.

இடம்பெயந்த வடக்கு முஸ்லிம்களின் அமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

மானிப்பாயில் இடம்பெற்ற சம்பவத்தைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:-

பயங்கரமான அழிவுகளை ஏற்படுத்தி முழு நாட்டையுமே அழிவின் விளிம்பிற்கு அழைத்துச் சென்ற கொடிய யுத்தமானது நிறுத்தப்பட்டு சமாதானத்தின் பெயரால் விடுதலைப் புலிகளின் தலைமையும், ஐ.தே.முன்னணி அரசும் ஒன்றிணைந்து சமாதான தீர்வும் தன்னாட்சியுடைய சுயநிர்ணயத் திற்குமாக உழைத்துக் கொண்டிருக்கும் வேளையில் நிராயுதபாணிகளாக அரசியல் பணிபுரியச் சென்ற விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் மனிதஉரிமை, பெண்ணுரிமை போன்ற அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்ட நிலையில் சிறீலங்கா இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்குள்ளானதும், நியாயம் கேட்டுச் சென்ற பொதுமக்கள் இராணுவ அதிகாரத்தால் அடக்கப்பட்டதும் அப்பட்டமான ஜனநாயக விரோத போக்கும் மனித உரிமை மீறலும் ஆகும்.

இச்செயலானது விடுதலைப் புலிகளின் பொறுமையைச் சோதிக்கும செயலாகும். இதில் சம்பந்தப்பட்டவர்கள் யாராய் இருப்பினும் அவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்களும், தண்டிக்கப்பட வேண்டியவர்களும் ஆவர்.

இவ்விடயத்தை இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லீம்கள் அமைப்பின் சார்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டுவதுடன், பாரபட்சமற்ற விசாரணை நடத்தி எதிர்காலத்தில் இவ்வித அடக்குமுறைகள் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துமாறும் எமது அமைப்பு வேண்டிக் கொள்கிறது. - என்றுள்ளது. (ம-3)

சிரானின் யாழ்.மாவட்டக் குழுவிடம்

# மீள் குடியமர்வு குறித்த திட்டஅறிக்கை சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

குடாநாட்டில் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே உள்ள இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு வசதியாக மேற்கொள்ளப்படவேண்டிய அவசர மனிதாபிமானத்திட்டங்கள் குறித்த அறிக்கை 'சிரான்' அமைப்பின் யாழ்மாவட்ட துணைக்குழுவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே படையினர் நிலைகொண்டுள்ள வீடுகளில் மக்களை மீளக் குடியமர்த்துவது மற்றும் ஏனைய இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது ஆகிய திட்டங்கள் தொடர்பாக ஆராய 7 மதிப்பீட்டுக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன. அக்குழுக்கள் தமது அறிக்கையை கடந்த வாரம் யாழ். செயலகத்தில் கையளித்திருந்தன.

மதிப்பீட்டுக்குழுக்களின் அறிக்கைகளைக் கொண்டு குடாநாட்டில் மீள் குடியமர்வுக்கான பொதுத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அப்பொதுத்திட்ட அறிக்கை வடக்கு- கிழக்கு உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உப குழுவில் (சிரானின்) யாழ். மாவட்ட துணைக்குழுவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. துணைக்குழுவின் உறுப்பினர்கள் நாளை திங்கட்கிழமை யாழ் செயலகத்தில் கூடி இத்திட்டத்தை ஆராய்ந்து இறுதித்திட்டம் குறித்து முடிவு செய்வர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெறும் பயிற்சிப்பட்டறையில் சமர்ப்பிக்கப்பட்டு விரிவாக ஆராயப்படும். அதைத்தொடர்ந்து இந்த அறிக்கை எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் இடம்பெறும் 'சிரான்' கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

பின்னர் திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான நிதியைப்பெறுவதற்காக ரோக்கியோவில் அடுத்த மாதம் நடைபெறும் 6 ஆம் கட்டப் பேச்சுக்களில் இது சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-3)

# துறைமுக ஊழியர் 21பேருக்கு விரைவில் நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம்.பெப்.16

பருத்தித்துறை துறைமுகத்தில் பணிபுரியும் 21 ஊழியர்களும் துறைமுக அதிகாரசபைக்குள் உள்வாங்கப்பட இருக்கின்றனர்.

1990 ஆம் ஆண்டு பருத்தித்துறை துறைமுகம் மூலம் பொருள்கள் இறக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அச்சமயம் யாழ். செயலகத்தால் தற்காலிக அடிப்படையில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டனர்.

நிரந்தர நியமனம் இன்றி ஐந்து வருடங்களுக்கு மேலாக தற்காலிக அடிப்படையில் பணியாற்றி வந்த இவர்கள் யாழ்.அரச அதிபரிடம் தமது நிலை குறித்து முறையிட்டனர்.

கடந்த வாரம் கொழும்பு சென்றிருந்த அரச அதிபர் செ.பத்மநாதன் இந்த ஊழியர்கள் குறித்து கப்பல் துறை மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் கலந்துரையாடினார்.

பிரஸ்தாப ஊழியர்களை துறைமுக அதிகார சபைக்குள் உள்வாங்கி நிரந்தர நியமனம் வழங்க அமைச்சர் ஹகீம் அரச அதிபரிடம் இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஊழியர்களின் தகுதிகள், சேவைகள் தொடர்பாக நேரில் அறிவதற்காக துறைமுக அதிகார சபையின் பொறியியலாளர் தலைமையில் குழு ஒன்று அடுத்தவாரம் யாழ்ப்பாணம் வர இருக்கின்றது.

இக்குழு ஊழியர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தும். அதன்பின் மார்ச் மாதமளவில் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-3)

### சைவ சமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.16

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை இன்று முற்பகல் 10 மணிமுதல் குடாநாட்டில் உள்ள 17 பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

தரம் 3 முதல் 13 வரையிலான வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்த எழுத்துப் பரீட்சையில் சுமார் 3ஆயிரத்து 500 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீதி நூல் மனனப் போட்டிகள் யாவும் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். (எ)

### வேலணையில் கணனி மையம்

யாழ்ப்பாணம்,பெப்.16

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மையம், தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் கணனி மையம் ஒன்றை வேலணையில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கவிருக்கின்றது.

கல்விமான்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.(ம-3)

பிறந்தநாள் விழா அழைப்பிதழ்

HAPPY BIRTHDAY



JASMITHAN



அன்புடையீர்
எமது செல்வப் புதல்வன்
ஜஸ்மிதன்
தனது முதலாவது பிறந்த
தினத்தை இன்று (16.02.2003)
ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்
17.00 மணியளவில் வெகு
விமரிசையாகக்
கொண்டாடவுள்ளார்.

விழா மண்டபம்
CHURCH OF THE ASCENSION
THE AVENUE
WEMBLEY HA9 9QL.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
திரு.திருமதி.ஜஸ்கரன்
3, Lewiscresent Neastan
London
NW10 ONS
0208 459 0643
07903 474 288

முதலாவது பிறந்த தினத்தை இன்று லண்டனில் கொண்டாடும் செல்வன் சு.ஜஸ்மிதன் பலகலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்க! வாழ்க!! என மனமகிழ்வுடன் வாழ்த்துவோர்:

வே.முத்துலிங்கம்(அப்பப்பா), தேவமலர் முத்துலிங்கம்(அப்பம்மா), செ.தேவராசலிங்கம்(மாமா), தேவராசலிங்கம் ஸ்ரீசுயானி(அத்தை), ந.சுதாகர்(மாமா), சுதாகர் ஸ்ரீசுபானு(அத்தை), த.மோகனதாஸ்(மாமா), மோகனதாஸ் ஸ்ரீசுஜியாந்தினி(அத்தை), முத்துலிங்கம் சுகிர்தர்(சித்தப்பா) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

ஸ்ரீதேவி தொலைத்தொடர்பகம்,
ஸ்ரீதேவி அரிசி ஆலை, அச்சுவேலி.

(C/26544)

வே.முத்துலிங்கம்
T.P: 021-222 2017, 070-212222


## பெற்றோல் விலை ரூ.61.50

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்றுமுன்தினம் நண்பகல் முதல் பெற்றோலின் விலையை 2 ரூபாவால் அதிகரித்துள்ளது. இவ்விலை அதிகரிப்பையடுத்து குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் லீற்றர் 59ரூபா50 சதமாக விற்பனை செய்யப்பட்ட பெற்றோல் 61ரூபா 50சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.(எ-17)


## தவறிவிட்டன

ஆசிரிய கலாசாலையில் கற்கை நெறியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஆசிரிய மாணவனுடைய ஆவணங்கள் பையுடன் (Bag) தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் பூபாலசிங்கம் புத்தக சாலையில் ஒப்படைக்கவும்.

சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:
ஆசிரிய மாணவன்.

(14573)

A/L 2004, 2005
பொருளியல்
Mr. ஜெயக்குமார்
வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன.
SPOKEN ENGLISH
With
GRAMMAR
By: K.நிஷாந்தன்
ஆரம்பம் :
17.02.2003 4.00 p.m.

(14571)

* 2004, 2005 அடிப்படை ஆங்கில இலக்கிய வகுப்புகளும் இன்றே ஆரம்பமாகும்.


# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 09**

நாளைமறுதினம் (18.02.2003) இடம்பெறவுள்ள மேற்கிந்திய - பங்களாதேஷ் ஆட்டத்தின் ஆட்டநாயகன் யார்?

முழுப்பெயர் : ..........................................

முகவரி : ..........................................

அ. அட்டை எண்: ..........................................

இக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (17.02.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 09, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே வரையுங்கள்.

உதயன்



### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**Super Six பரிசுகள்**

இம்முறை சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குள் நுழையக்கூடிய அணிகள் எவை?

1. .................... 2. ....................
3. .................... 4. ....................
5. .................... 6. ....................

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: பெப்ரவரி 28

முழுப்பெயர் : ..........................................

முகவரி : ..........................................

அ. அட்டை எண்: ..........................................



முதற் பரிசு
மைக்கிரோ பிசி தரும்
கணனி

2ஆம் பரிசு
சிங்கர் நிறுவனம் தரும்
தொலைக்காட்சி

விசேட பரிசுகள்
அருணன்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின்
கூப்பன்கள்



Super Six பரிசு
ஓமாளா நிறுவனம் தரும்
சைக்கிள்கள்

3ஆம் பரிசு
ஷார்ப் நிறுவனம் தரும்
வானொலி

தினம் தினம் ஒரு பரிசு
ஏசியன் நிறுவனம் தரும்
கழிவுக் கூப்பன்கள்

ஆறுதல் பரிசுகள்
எக்ஸ்போ நிறுவனம் தரும்
விமான
ரிக்கெட்டுக்கள்

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(..............................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..........................................

முகவரி : ..........................................

அ.அட்டை எண்: ..........................................

**தினம் தினம் ஒரு பரிசு:**
ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**
முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருணன்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**Super Six பரிசுகள்:**
Super Six இற்கான சரியான அணிகளைத் தெரிவுசெய்யும் மூவருக்கு ஓமாளா நிறுவனம் வழங்கும் புத்தம் புதிய சைக்கிள்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி இம்மாதம் 28ஆகும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**
இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

உதயன்

# வளைகுடாவில் போர் தவிர்க்கப்பட வேண்டும்

ஈராக்மீது போர் தொடுக்க அமெரிக்கா தயாராகி வருகின்றது. பல்லாயிரக்கணக்கான அமெரிக்கத் துருப்புக்களும் நவீன போர்த் தளபாடங்களும் வளைகுடாவில் குவிக்கப்படுகின்றன.

யார் தடுத்தாலும் போர் நிச்சயம் என்றவாறாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் சூளுரைத்து வருகிறார்.

போர் தொடர்பாக கடைசியாக அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் முழு உலகிற்குமே திகைப்பை ஏற்படுத்தியிருக்கும் என்பது நிச்சயம்.

"ஈராக் வசம் உள்ள பேரழிவு ஆயுதங்களைக் கைப்பற்ற வேண்டிய தனது பொறுப்பிலிருந்து ஐ.நா. தவறுமானால் வரலாற்றிலிருந்து அது மறைந்து போகட்டும்" என்று அதிபர் புஷ் எச்சரித்திருக்கிறார்.

புளோரிடாவில் உள்ள அமெரிக்கக் கடற்படைத் தளம் ஒன்றில் வீரர்கள் மத்தியில் புஷ் கூறிய இந்தக் கூற்று அமைதியை, சமாதானத்தை விரும்பும் அனைவரையுமே ஒரு கணம் சிந்திக்க வைத்திருக்கும்.

இரண்டாவது உலகப் போரின் இறுதியில் மூன்றாவது உலகப் போர் ஒன்று ஏற்பட்டு விடக்கூடாது என்ற உயரிய நோக்கத்துக்காக உழைக்கும் சர்வதேச சபையாக ஐ.நா. மலர்ந்தது. ஆனால், சர்வதேச மன்றமான ஐ.நாவினால் இந்த உலகில் போர்களைத் தவிர்க்க முடிந்ததா என்றால் இல்லை என்றே கூறலாம்.

சோவியத்யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் உலகில் ஒரே வல்லரசு என்ற ஸ்தானத்துக்கு அமெரிக்கா வந்ததுமுதல் ஐ.நா. சபை அதன் லட்சியங்களை காற்றில் பறக்க விடத் தொடங்கியது. முழுக்க முழுக்க அமெரிக்க முகாமாக அது மாறத் தொடங்கியது.

தட்டிக் கேட்க யாரும் இல்லை என்ற இறுமாப்புடன் அது இராணுவ, பொருளாதார ரீதியில் பலசாலியாக - முதலாம் தர ஜம்பாவானாக - சர்வதேச சண்டியனாக - வளர்ந்தது. இன்று தனது நலன்களை உலகெங்கும் விஸ்தரித்துப் பேணுவதில் அமெரிக்கா குறியாக இருக்கிறது.

உலகைப் பாதுகாப்பது என்று கூறிக்கொண்டு உலகம் முழுவதும் பாதுகாப்பு நெருக்கடிகளை அது உருவாக்கிவிட்டிருக்கிறது.

'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்று கூறிக்கொண்டு அமெரிக்கா உலகம் முழுவதும் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் இன்று உலகில் அமெரிக்கர்களுக்கு பாதுகாப்பான இடமே கிடையாது என்ற நிலைமையை உருவாக்கி வருகிறது.

தனது நோக்கத்தை - நலன்களை - வியாபித்து நிலைநாட்டும் முயற்சியில் ஐ.நா. சபைக்கு அமெரிக்க அதிபர் ஒருவர் நேரடியாக அச்சுறுத்தல் விடுத்திருப்பது இதுவே முதல் தடவை.

ஈராக்கை ஒடுக்காத - ஐ.நா.சபை உலகுக்குத் தேவையில்லை என்ற சாரப்பட அதிபர் புஷ் வெளியிட்டிருக்கும் கருத்து அமெரிக்காவின் சர்வாதிகாரப் போக்கினை அப்பட்டமாக்கியிருக்கிறது.

போரைத் தவிர்ப்பதற்கு அமைக்கப்பட்ட ஒரு சர்வதேச சபை போருக்கு உடன்பட மறுத்துநிற்பதை அமெரிக்கா குற்றம் என்கிறதா?

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை நிறைவேற்ற ஈராக் உடன்பட்டிருக்கிறது. அதன்படி ஐ.நா. ஆயுத பரிசோதகர்கள் ஈராக் மண்ணில் தேடுதல் செய்ய அது அனுமதித்திருக்கிறது.

இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட பரிசோதனைகளின் பெறுபேறு ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை நடந்த சோதனைகளில் பேரழிவு ஆயுதங்கள் எதையும் ஐ.நா. சோதனைக் குழு கண்டுபிடிக்கவில்லை. இதை மட்டும் வைத்துக்கொண்டு ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. உலகில் எல்லா நாடுகளும் பேரழிவு ஆயுதங்களை வைத்தே உள்ளன.

ஈராக்கை பணியவைக்க ராஜீக முயற்சிகளுக்கு இன்னமும் வாய்ப்புகள் உள்ளன. பேரழிவு ஆயுதங்களைத் தயாரிப்பதையும், இறக்குமதி செய்வதையும் தடை செய்யும் உத்தரவு ஒன்றை அதிபர் சதாம் ஹூசேய்ன் விடுத்திருக்கிறார். இது ஒரு நல்ல அறிகுறி, நல்ல மாற்றம், வரவேற்கப்பட வேண்டியது.

இதனை ஆரம்பமாகக் கொண்டு போரைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை ஐ.நாவும் உலக நாடுகளும் தீவிரமாக முன்னெடுக்கவேண்டும்.

வளைகுடாவில் அமெரிக்கா தொடுக்கும் போர் உலகின் ஒவ்வொரு நாட்டையும், ஒவ்வொரு பிரஜையையும் பாதிக்கப்போகின்றது. பொருளாதாரம் ஆட்டங்கண்டு பல நாடுகளில் பட்டினிநிலை ஏற்படும் ஆபத்து இருக்கிறது. ஈராக்கில் உள்ள லட்சக்கணக்கான குழந்தைகள் பால்மா, உணவு இன்றி மடிந்துவிடுவர்.

எனவே, பேரழிவு ஆயுதங்களை அழிக்கப்போய் உலகுக்கு பேரழிவை ஏற்படுத்திவிட அமெரிக்கா முயற்சிக்கக் கூடாது.

வியட்நாம் யுத்தத்துக்குப் பின்னர் இந்த முறையே உலகில் போருக்கு எதிரான உணர்வலை தீவிரமாக எழுந்திருப்பதாக அவதானிகள் மதிப்பிடுகின்றனர்.

உலகப் பொது உணர்வை அமெரிக்கா மதித்து நடக்கும் என நம்புவோமாக!

# அச்சுவேலியில் மீண்டும் கோழிக்குஞ்சு உற்பத்தி

அச்சுவேலி,பெப்.16

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் கோழிக்குஞ்சுகள் பொரிக்கவைக்கும் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி கைத்தொழில் பேட்டையில் கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் செயற்பாடுகள் கடந்த பல மாதங்களாக தடைப்பட்டிருந்தன.

தென்னிலங்கையிலிருந்து எடுத்துவரப்பட்ட கோழிக்குஞ்சுகள் கவர்ச்சிகரமான விளம்பரங்களுடன் விற்பனை செய்யப்பட்டதால் அச்சுவேலியில் உற்பத்தியான கோழிக்குஞ்சுகளை சந்தைப்படுத்துவதில் பல தடங்கல்கள் ஏற்பட்டன. இதனையடுத்து அச்சுவேலியில் கோழிக்குஞ்சுகள் பொரிக்க வைக்கும் "அடைப் பொறியின்" தொழிற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

கோழிக்குஞ்சுகளை சந்தைப்படுத்துவதில் ஏற்பட்ட தடங்கல்கள் - தாமதங்கள் காரணமாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டை கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தின் வருமானத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தின் தொடர்ச்சியான செயறபாட்டிற்கு வசதியாக மீண்டும் கோழிமுட்டைகளை அடை வைக்கப் பயன்படும் பொறியைப் பயன்படுத்தி கோழிக்குஞ்சுகள் பொரிக்க வைக்கும் பணிகளை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-11)

# மானிப்பாய்ச் சம்பவத்தை கண்டித்து நயினாதீவிலும் கண்டனப் பேரணி

## வெள்ளியன்று நடைபெற்றது

யாழ்ப்பாணம்,பெப்.16

மானிப்பாயில் விடுதலைப் புலிகளின் பெண்போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் படையினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து நயினாதீவிலும் நேற்றுமுன்தினம் கண்டனப் பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது.

அன்றையதினம் காலை 9.30மணியளவில் நயினாதீவு தெற்குத் துறைமுகப் பகுதியில் இருந்து ஆரம்பமான பேரணி, மத்திய சந்திப் பகுதியை அடைந்ததும் அங்கு வைத்து ஜனாதிபதி சந்திரிகா மற்றும் யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோரின் கொடும்பாவிகள் பேரணியில் கலந்துகொண்டோரால் எரிக்கப்பட்டன.

பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கூட்டுறவாளர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் என சுமார் 750பேர் வரையில் பேரணியில் கலந்துகொண்டு பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமான கண்டனப் பேரணி கொடும்பாவி எரித்தலுடன் நிறைவுபெற்றது. (எ-10)

படையினரின் தாக்குதலுக்கு இலக்கான

# ஊடகவியலாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குக!

## பத்திரிகையாளர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.16

மானிப்பாய் மற்றும் நெல்லியடிப் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களின்போது படையினரின் தாக்குதலுக்கு இலக்கான ஊடகவியலாளருக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம்.

இது தொடர்பாக மேற்படி சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் ஊடகவியலாளர்கள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்படுவதையிட்டு எமது சங்கம் பெரும் விசனம் அடைந்துள்ளது.

நெல்லியடியிலும், மானிப்பாயிலும் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதுடன், அவர்களின் புகைப்படக் கருவிகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர்கள் தமது அடையாள அட்டைகளைக் காண்பித்த பின்பும் தாக்கப்பட்டது மிகவும் கண்டனத்துக்குரியதாகும்.

எனவே, ஊடகவியலாளர்களுடன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி படையினருக்கு எடுத்துவிளக்கப்பட வேண்டும்.

இனிவரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாதிருக்கவும், செய்தியாளர்களின் எழுத்துச் சுதந்திரத்துக்கு உத்தரவாதம் அளிக்கும்படியும் எமது சங்கம் கோரிக்கை விடுக்கின்றது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சருக்கும், தகவல்துறை அமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ)

**நாளை**

மாசி 05
திங்கட்கிழமை
(17.02.2003)
திதி : பிரதமை
பின்னிரவு 4.42 வரை.
நட்சத்திரம: மகம்
முன்னிரவு 10.24 வரை.
மாசி மக, விரத நாள்
சுபநேரம் : 12.33 - 1.03
ராகுகாலம் : 8.03 - 9.33
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

பணக்காரனாய் மடிவதினும் பணக்காரனாய் வாழ்வது சிறப்பு.

-சாமுவேல் ஜான்ஸன்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

# இடைநிறுத்தப்பட்டோருக்கு மீண்டும் மாதாந்த உதவிப் பணம்

வலி.வடக்கு,பெப்.16

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த மாதம் இடைநிறுத்தப்பட்ட 108 பேருக்கான மாதாந்த பொதுசன உதவிக் கொடுப்பனவை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

மேற்படி 108 பேருக்குமான கொடுப்பனவு கடந்த டிசெம்பா மாதம்வரை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது

வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்கான நிதியை தற்போது அனுப்பிவைத்துள்ளது என்றும் - இம்மாதம் முதல் மீண்டும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன என்றும் - பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த டிசெம்பர் மாதம் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டவர்கள் மீண்டும் தத்தமது தபால் அலுவலகங்களில் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-86)

# அரியாலையில் மீளக்குடியமர்ந்தோரை மதிப்பீடுசெய்யப் படிவங்கள் கிடைத்தன

திருநெல்வேலி,பெப்.16

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் மதிப்பீடு சம்பந்தமான படிவங்கள் நிரப்பும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக குறிப்பிட்ட தொகைப் படிவங்கள் அரியாலைப் பகுதி கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட மீளக்குடியமர்த்துகை, புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித் திட்டம் என இந்தப் படிவத்துக்குத் தலையங்கமிடப்பட்டுள்ளது.

படிவத்தில் குடும்பவிவரம், யுத்தம் காரணமாக ஏற்பட்ட உயிர் இழப்பு, உடல், உளத்தாக்கம், குடும்பத்தின் தற்போதைய வாழ்வு நிலைமை, குடும்பத்தின் இடப்பெயர்வு அல்லது அகதி நிலை பற்றிய விவரம், வீட்டு ஆதனங்களுக்கு ஏற்பட்ட சேதம், தொழில் இழப்பு, தேவையான உதவிகள், நிவாரண உதவிகள் மற்றும் 1996 தொடக்கம் 2002 வரை பெற்றுக்கொண்ட அவசர உதவி அல்லது புனர்வாழ்வளிப்பு விவரங்களும் இந்தப் படிவத்தில் கோரப்பட்டுள்ளன.

கிராம புனர்வாழ்வு, புனரமைப்புக் குழுவின் சிபாரிசும் அந்தப் படிவத்தில் பெறப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-86)

# மருதங்கேணி பகுதி வீதிகள் புனரமைக்கும் பணி ஆரம்பம்

## 19ஆம் திகதி வைபவ ரீதியான நிகழ்வு

மருதங்கேணிப் பிரதேசத்தில் வீதிகள் திருத்தும் ஆரம்ப நடவடிக்கைகள் எதிர்வரும் 19ஆம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

செம்பியன்பற்று தொடக்கம் கட்டைக்காடு வரையுள்ள சுமார் 19கிலோமீற்றர் கடற்கரை வீதி இத்திட்டத்தின்கீழ் திருத்தியமைக்கப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் உலக உணவுத் திட்ட அதிகாரிகள், 'நிக்கொட்' திட்ட அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

உலக உணவு ஸ்தாபனம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் உதவியுடன் இவ்வீதி புனரமைக்கப்படவுள்ளது. (எ-182)

# விசேட அடையாள அட்டை பிரிவில் பணியாற்றியோருக்கு நிரந்தர நியமனம்

யாழ். செயலகத்தில் இயங்கிய விசேட அடையாள அட்டை வழங்கும் பிரிவில் பணியாற்றிய ஒன்பது எழுதுவினைஞர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவிருக்கின்றது.

1996 ஆம் ஆண்டு குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்குவதற்காக தனிப்பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரிவில் பணியாற்ற ஒன்பது எழுதுவினைஞர்கள் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

பிரஸ்தாப பிரிவு தற்சமயம் மூடப்பட்டுள்ளதால் இந்த எழுதுவினைஞர்கள் தற்காலிக அடிப்படையில் செயலகத்தில் பணியாற்றி வந்தனர். இது தொடர்பாக யாழ்.அரச அதிபர் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடியதை அடுத்து இவர்களுக்கு கொழும்பில் அடையாள அட்டைப் பிரிவில் நிரந்தர நியமனம் வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது (எ-3)


ஆரோக்கியமான சந்ததியை உருவாக்குவோம்!



'உங்கள் பிள்ளைகளுக்கு மகிழ்வான, ஆரோக்கியமான நாள்களை வழங்குவதன்மூலம் அவர்களது எதிர்கால வாழ்விற்கு எதுனிலும் பார்க்கப் பெறுமதியான சொத்தினைச் சேகரித்துக் கொடுத்தவர் ஆகின்றீர்கள்'

பிள்ளைகள் உங்களிடம் வேண்டி நிற்பது கூட்டுறவுமிக்க குடும்பத்தையும் அன்புடன் கூடிய வழிப்படுத்தலையும் மட்டுமே.

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் - 30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். : T.P.:222 - 2261 Ext.274

விளம்பர அனுசரணை: SC (UK)
(சி-26566)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பல இன கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மோட்டார்கள், மீன் தொட்டிக்குரிய அழகு சாதனப் பொருள்கள் மற்றும் Love Birds குருவிகள், கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம். (14341)

நல்ல நிலையில் உள்ள Mitsubishi Delica L 300 முழு ஆசனங்கள் 750Kg விற்பனைக்குண்டு. விலை 350,000/-, T.V.S. Cham 18,000/- ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.783, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 222-2841 (14507)

டாக்டர் ஒருவரின் தனிப்பாவனையில் உள்ள பஜாஜ் KB100 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 18/10, சென்றல் கிளினிக் ஒழுங்கை, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். T.P. No:222 3795. (14474)

C/90 சுப்பர்கப் டீலூக்ஸ் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 7/8, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 0777-570235. (14538)

Sony T.V.கள் விற்பனைக்குண்டு. G21Q1 22,000/-, G21Q2 23,000/-, 2192 - 20,000/- ,2184 - 19,000/- , 2100 - 17,000/- தொடர்பு: R.S மகேஸ்வரன், K.K.S. வீதி, (சிறுவர் பூங்கா R.D.S முன்பாக), மல்லாகம். (14548)

நல்ல நிலையிலுள்ள Hero Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 'நிலக்கூந்தா', யாழ்.வீதி, மானிப்பாய். (மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்).(14556)

Sony T.V. 2020 விற்பனைக்குண்டு. 384, நாவலர் வீதி, (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்பாக). (14546)

Ahuja Amp 60 Walts, Office Table, கட்டில்கள் (Single, Double), மேசை, Desk, Dressing Table, மிக்ஸர் சோக்கேஸ், பெரியதராச்சி, உரல், கதிரைகள், சோக்கேஸ் மற்றும் உபகரணங்கள் விற்பனைக்குண்டு. செல்வா, 18, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P. 2429, 3252 (C/26565)

நிறைகூடிய புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர் மொத்த மாகவும் விற்பனை செய்யப்படும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். தொடர்பு: 21/61, இராமநாதன் வீதி, கலட்டி கிளை: முட்டாஸ் கடைச் சந்தி அருகில், ஸ்ரான்லி வீதி. (14504)

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து, உங்களுக்குத் தேவையான நிறைகளில், நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை) தொடர்பு (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13977)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (14361)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima, Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 20-02-2003 வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். இல.19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (14391)

## தவறிவிட்டது

சுந்தரலிங்கம் கர்ணன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (813382903V), விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் S.கர்ணன் சாவகச்சேரி வடக்கு, ஐயா கடையடி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (14555)

பெண்களுக்கான பெறுமதியான கறுப்புக் கைக்கடிகாரம் ஒன்று வெள்ளிக்கிழமை (14-02-2003) உரும்பிராய்ச் சந்திக்கும் V.T.S. வீதிக்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். முகவரி: வி.ஸைஷா, செல்லத்துரை வீதி, உரும்பிராய் தெற்கு. (சன்மானம் வழங்கப்படும்.) (14551)

## ஆடுகள் விற்பனைக்கு

நல்ல இன ஜமுனாபாரி மறி ஆடுகள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (14392)

## வீடு விற்பனைக்கு

ஐரோப்பிய மொடலில் கட்டப்பட்ட இரண்டு பல்கனிகளுடனும், கடையுடனும் கூடிய சகல வசதிகளுமுடைய புதிய மாடி வீடு விற்பனைக்குண்டு. (வெளிநாடுகளில் வசிப்பவர்களுக்கு ஏற்றது). முதிரை மரத்திலான சாப்பாட்டு மேசையும், கதிரைகளும் 7' கண்ணாடி கடை சோக்கேஸும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 'ஆனந்த பவன்' மயிலு ஒழுங்கை, அறுகால் மடம், ஆனைக்கோட்டை. (14553)

## காணி விற்பனைக்கு

சோடாக் கம்பனி கிழக்கு ஒழுங்கையில் ரியூப் கிணறும் வீடும் கட்டக் கூடிய கே.கே.எஸ் றோட்டுடன் இருக்கும் முதல் துண்டு பரப்பு ரூபா 50ஆயிரத்துக்கு மேலும், 2ஆவது துண்டு ரூபா 45ஆயிரத்துக்கு மேலும் விற்பனைக்குண்டு. ந.சிவகுமார், 'குமரேசுதயம்' றெயில் றோட், கிழக்கு கொக்குவில். (14552)

## காணி தேவை

நல்லூர், இராசபாதையில் வெறுங்காணி 2 பரப்பு or 3 பரப்பு குடியிருப்புக்கு விலைக்குத் தேவை. விண்ணப்பிக்கவும் கந்தையா இலட்சுமணன், டச்சுறோட், பிள்ளையார்கேணி. (வெற்றிலை தோட்டம் அருகில்) (14515)

## வாடகைக்குத் தேவை

டாக்டர் குடும்பத்திற்கு கந்தர்மடம் திருநெல்வேலிக்குட்பட்ட, பிரதான போக்குவரத்துச்சாலைக்கு அண்மித்த இடங்களில் சகல வசதிகளுமுடைய சிறிய வீடுதேவை. 61, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (14537)

நெல்லியடிப் பகுதியில் புதிதாக தொடங்கப்படவுள்ள கூல்பாருக்கு தண்ணீருடன் வசதியுடைய கடை வாடகைக்குத் தேவை. முற்பணம் கொடுக்கப்படும். தொடர்பு விள.இல.1784, மே/பா., உதயன் (14562)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973இல் பிறந்த, பாவம் குறைந்த, குற்றமற்ற, பட்டதாரி ஆசிரியைக்கு படித்த, உத்தியோகம் பார்க்கும் மணமகன் உள்நாட்டில் தேவை. தொடர்பு: விளம்பர இல.1782, C/o உதயன். (14541)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, புனர்பூசம் 2ஆம் பாதம், 7இல் செவ்வாய் (32பாவம்), 30 வயதுடைய அரச தொழில்புரியும் மணமகளுக்கு மணமகன் தேவை. தொடர்பு: விளம்பரஇல.1783மே/பா உதயன். (14547)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 09-11-1959இல் பிறந்த, சதயம் 4ஆம் பாதம், கனடாவில் நிரந்தர தொழில் புரியும், சைவபோசன மணமகனுக்கு படித்த அழகிய சைவபோசன மணமகள் தேவை. புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். (திருமணத்தின் பின் சைவ போசனமாக இருக்க விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.) விளம்பர இல.1780, மே/பா உதயன். (14499)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 33 வயதுடைய, லண்டன் பிரஜாவுரிமை பெற்ற, அங்கு சொந்தமாகக் கடை வைத்திருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு திருநந்தகுமார், ஆஸ்பத்திரி வீதி, மன்னார். T.P.023-32429. (14558)

## பெற்றுக்கொள்ளவும்

A.கிருஷ்ணமூர்த்தி, மூளாய் றோட், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் என்பவருக்கு முகவரியிடப்பட்ட கொழும்பு பல்கலைக்கழகச் சட்டபீடத்திற்கான அனுமதி விண்ணப்பப்படிவங்கள் (2002/2003A) தவறுதலாக P.கிருஷ்ணபிள்ளை G.S. லிங்கநாதன் & Co 13,14 பெரிய கடை யாழ்ப்பாணம் என்பவருக்கு கிடைத்துள்ளது. உரியவர் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளவும். T.P. 3139 (14549)

## தேவை

Computer Type setting செய்யத் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. கணனி பற்றிய அடிப்படை அறிவுடன் Desk Top Publishing தெரிந்திருந்தல் விரும்பத்தக்கது.

தொடர்பு:

**மாசிலா அச்சகம்**

ம.ம.வீ.வீதி, நெல்லியடி. (14549)

## தேவை

யாழ் நகரிலுள்ள ஆங்கில மருந்தகத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை. விண்ணப்பதாரர் பெண்பிள்ளையாகவும் க.பொ.த. சாதாரணதரம் (ஆங்கிலம் உட்பட) சித்தியுடன் அனுபவமும் யாழ் நகரின் அண்மித்த பகுதிகளில் வசிப்பவராகவுமிருத்தல் விரும்பத்தக்கது. சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1778, மே/பா உதயன். (14394)

## சர்வதேச லயன்ஸ் கழக பிராந்திய மகாநாடு

We Serve

சர்வதேச லயன்ஸ் கழகம் - அதன் பிராந்தியங்கள் 9ஆம், 10 ஆம் இணைந்து நடத்தும் பிராந்திய மகாநாடு

16.02.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில்

யாழ்.மத்திய கல்லூரி, பிரதான மண்டபத்தில் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

*பிரதம விருந்தினராக*

சர்வதேச லயன்ஸ் கழக பிராந்திய கவர்னர் லயன் ஓ - றீகன் பிஞ்சி அவர்களும்

*சிறப்பு விருந்தினராக*

முன்னாள் கவர்னர் லயன் K.தில்லைநாதன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

*இம்மகாநாட்டின் முக்கிய குறிக்கோள் லயன்ஸ் கழகங்கள் ஊடாக சமாதானமும் அமைதியும் ஏற்படுத்தல் என்பதாகும்.*

*மேற்படி மகாநாட்டுக்கு -*

லயன்ஸ் கழக அங்கத்தவர்கள், சீமாட்டிகள், லியோக்கழக உறுப்பினர்கள், அபிமானிகள் அனைவரையும் அழைக்கிறோம்.

லயன் Dr.எம்.கதிர்காமநாதன் - பிராந்தியத் தலைவர் பிராந்தியம் 10

லயன் த.சற்குணராசா - பிராந்தியத் தலைவர் பிராந்தியம் 9

(C/26262)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டன் குடியுரிமையுடைய, 1968இல் பிறந்த ஆயிலிய நட்சத்திரம், கிரகதோஷமற்ற, நற்பண்புள்ள 5அடி 8அங்குலம் உயரமுடைய எலக்ரிக்கல், எலக்ரோனிக் மொபைல் எஞ்சினியராகிய மணமகனுக்கு நன்கு படித்த, அழகிய நற்பண்புள்ள மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஸ்பொன்சர் வசதி உண்டு. ஜாதகம், படம் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.


**K.PARA, 763, MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO, M1H2Y1, CANADA.**

T.P. 416 - 2899758

(14545)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தவப்பேறு 1929 - 04 - 01



சிவப்பேறு 2003 - 01 - 17

**அமரர் வேலுப்பிள்ளை முத்துக்குமாரு**

(வேரக்கேணி, மட்டுவில் தெற்கு- கோப்பாய் தெற்கு, கோப்பாய்)

*திதி: பூர்வபக்க தை சதுர்த்தசி*

பண்போடும் பாசத்தோடும் உறவு கொண்டு நல்லோர் இதயங்களில் நிலைபெற்று விளங்கும் எங்கள் 'அப்பா' நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் என்றும் உங்கள் நினைவில் வாழுகின்றோம்.

*உங்கள் ஆத்மசாந்தி வேண்டி நிற்கும்*

கோப்பாய். (14554)

அன்பு மனைவி, மகள்மார், மகன்மார், மருமக்கள், பேரர், பேர்த்திகள், பூட்டி

## மரண அறிவித்தல்கள்

### இராசையா இரத்தினகோபாலு

*(முகாமையாளர், இலங்கை வங்கி, திருநெல்வேலி)*

வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், 'பிருந்தாவனம்', கரணவாய் கிழக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகக் கொண்டவரும் அமரர் கந்தையா இராசையா - தங்கம்மா தம்பதியரின் தலைமகனும் திருமதி பத்மாசினியின் இன்னுயிர்க் கணவரும் செல்வன் நவரங்கன், செல்வி விஜயாதிரை ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் வீரகத்தி (விதானையார்) - விசாலாட்சி தம்பதியரின் மருமகனும் திருமதி பரமேஸ்வரி மகேஸ்வரன் (லண்டன்), திருமதி இராசேஸ்வரி சிவநேசன் (கனடா), இராசதுரை (கனடா), டாக்டர் திருமதி சிவனேஸ்வரி சிவதாஸ் ஆகியோரின் உடன் பிறந்த உயிர் சகோதரனும் திருமதி கமலாசினி தவலிங்கம், வல்லிபுரநாதன் (லண்டன்), செல்வி யோகாசினி (லண்டன்), மகேஸ்வரன் (லண்டன்), சிவநேசன் (கனடா), திருமதி நிர்மலாதேவி இராசதுரை (கனடா), டாக்டர் சிவதாஸ் (யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மதிப்பான மைத்துனரும் தவலிங்கம் (ஓய்வுபெற்ற பொலீஸ் உதவி அத்தியட்சகர்) அவர்களின் சகலனும் திருமதி திருத்தேவி வல்லிபுரநாதனின் சகோதரரும் ஆகிய இராசையா இரத்தினகோபாலு (முகாமையாளர், இலங்கை வங்கி, திருநெல்வேலி) அவர்கள் 12.02.2003 புதன்கிழமை பி.ப. 5.00 மணியளவில் இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் கரவெட்டி, சோனப்பு மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பிருந்தாவனம்',
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி. (14484)

தகவல்:
திருமதி பத்மாசினி இரத்தினகோபாலு
(மனைவி)

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(முன்னாள் நந்தினி ஸ்ரோர்ஸ் உரிமையாளர், கொடிகாமம்)

கச்சாய் தெற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகக் கொண்டவருமான கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் 15-02-2003 சனிக்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - காசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் திருமதி வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, கந்தையா ஆகியோரின் சகோதரரும் கணபதிப்பிள்ளை (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்), காசிப்பிள்ளை கந்தசாமி (வர்த்தகர், கொடிகாமம்), நடராசா (ஜேர்மனி), அமரர் குமாரசாமி (முன்னாள் பிரபல வர்த்தகர், கொடிகாமம்) காசிநாதன்(கனடா) தவராஜா (ஜேர்மனி), அமிர்தலிங்கம் (உரிமையாளர்,நேஷன் வியாபார நிலையம், கொடிகாமம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவசோதி (தாதிய உத்தியோகத்தர், மார்பு நோய் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்), வேலுப்பிள்ளை, அன்னலட்சுமி, யமுனாதேவி (ஜேர்மனி), தில்லைநாயகி, யோகமலர் (கொழும்பு), பராசக்தி (ஜேர்மனி), அருந்ததி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.02. 2003) சனிக்கிழமை பிற்பகல் கச்சாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.
14, அன்னசத்திர லேன்,
யாழ்ப்பாணம். (14559)

தகவல்:-
சு.கணபதிப்பிள்ளை
மகன்
(T.O.R.D.A. Jaffna)

# வனிலா சுவையூட்டப்பட்டது

# Action


## Nutritional Food Drink

## போஷாக்கு நிறைந்த பானம்


**பிள்ளைகள்**
சக்தி, புரதம், கல்சியம்,
இரும்புச்சத்து, விட்டமின் B,
மற்றும் ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



**வாலிபர்**
சக்தி, புரதம், கல்சியம்,
இரும்புச்சத்து, சின்க்,
மற்றும் ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



**வயது வந்தவர்கள்**
புரதம், கல்சியம், இரும்புச்சத்து,
சின்க், அன்டி ஒக்ஸிடன்
மற்றும் ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



**கர்ப்பிணி / பாலூட்டும் தாய்மார்கள்**
சக்தி, புரதம், கல்சியம்,
(f)போலிக் அமிலம், விட்டமின் B12,
இரும்புச்சத்து, மற்றும் ஏனைய
அத்தியாவசிய போஷனைகள்.



**போஷாக்கின் வாழ்க்கை வட்டம்.**

27 அத்தியாவசிய போஷனைப்பதார்த்தங்கள்


தகுந்த சின்க் இரும்புச்சத்து விகிதம்.

தகுந்த கல்சியம் பொஸ்பரசு விகிதம்.

**வயோதிபர்**
புரதம், விட்டமின் B,
அன்டி ஒக்ஸிடன் மற்றும்
ஏனைய அத்தியாவசிய
போஷனைகள்.



**450 கிராம்**
**ரூ.380/=**




Manufactured by :

Astron

**Astron Limited,**
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 636741 Fax: 636173
E-mail: astron@astron.lk

## இலவச BASIC ENGLISH பாடநெறி

அடிப்படை ஆங்கிலம் தபால் மூலம்

சரளமாக ஆங்கிலம் எழுத, வாசிக்க மூன்று மாதத்தில் பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ் மொழிபெயர்ப்பில் கூடிய பாடத்தொகுதிகள்

## பாடநெறிக் கட்டணம் இலவசம்

பாடநெறி முடிவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு 4/50 ரூபா பெறுமதியான
3 முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்க. (14539)

THE ENGLISH LANGUAGE INSTITUTE P.O. Box 083, Kandy. Tel.: 0777 - 802849


## இறைவனை இறைஞ்சுகிறோம்



**அமரர்**

### இ.இரத்தினகோபாலு

(முகாமையாளர், இலங்கை வங்கி, திருநெல்வேலி)

நல்ல நண்பா! உமது பிரிவினால் நாம் வேதனை அடைந்தாலும், நீர் இறைவன் பாதத்தில் நித்திய அமைதியடைவீர் என்ற நம்பிக்கையில் ஆறுதல் அடைகின்றோம்; இறைவனிடம் வேண்டுகிறோம்.

துயருறும் துணைவியார், பிள்ளைகள், தாயார், சகோதர சகோதரிகள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அருட்திரு.ம.சே.கருணாரத்தினம்
அச்சுவேலி. (C/26557) பங்குத்தந்தை.

## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 26 - 09 - 1924



இறப்பு 25 - 01 - 2003

### அமரர் உருக்குமணி சதாசிவம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை)

அன்பின் இலக்கணமாய்
பண்பின் சிகரமாய் வாழ்ந்த
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை (மாசி 04) எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

"சிவபதி"
71, மணற்தறை ஒழுங்கை, சிவன் கோயிலடி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். (14501)

நீங்கா நினைவுடன்:
குடும்பத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்



எமது திருநெல்வேலி கிளையின் முகாமையாளர்

### இராசையா இரத்தினகோபாலு

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு துயரடைவதுடன், அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச காரியாலயம்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம். (14529)

பிரதேச முகாமையாளரும், ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் தர்மையா (குணம்)-காரைநகர்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், புகையிரதத் திணைக்களம்)

காரைநகர், சிதம்பரமூர்த்தி கேணியடியைச் சேர்ந்த நாகலிங்கம் தர்மையா (குணம்) 14.02.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் மனோரஞ்சிதம் (ஹொலண்ட்), ரவிச்சந்திரன் (லண்டன்), தேவரஞ்சன் ஆகியோரின் அன்புத் தகப்பனும் சிவானந்தனின் (ஹொலண்ட்) அன்பு மாமனாரும் பிரியாவின் அன்புப் பேரனும் சந்திரசேகரம், சபாரத்தினம், சர்மா, கிருபாஸ் (வட்டுக்கச்சி), பாக்கியம், இராசம்மா, நாகரத்தினம், பத்மாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சி.தில்லைநாதனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிதம்பரமூர்த்தி கேணியடி,
காரைநகர். (14534)

தகவல்:
த.தேவரஞ்சன் (மகன்).

## திருமுறைப் பாராயணம்

யாழ்ப்பாணம்,பெப்.16

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன இன்று காலை 8.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் நடைபெறவுள்ளன.

பிற்பகல் சிவதர்மவள்ளல் சி.சச்சிதானந்தம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும். 'திருமுறைகளின் பெருமை' என்னும் தலைப்பில் பண்டிதர் தி.பொன்னம்பலவாணரும், 'பசுவின் பெருமை' என்னும் பொருளில் தர்மதீபம் த.சிவலோகநாதனும் சொற்பொழிவு நிகழ்த்துவர். (எ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.16

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.முத்திரைச் சந்தையில் உள்ள முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.(எ)

## கணக்காய்வு அலுவலர் விரைவில் நியமனம்

வலிகாமம் தெற்கு,பெப்.16

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களான பிரதேச சபைகள், நகரசபைகள் போன்றவற்றின் வரவு - செலவு விவரங்கள், கணக்குப் பரிசோதனைகள் போன்ற விடயங்களை ஆராய்வதற்கென உள்ளக ரீதியிலான கணக்காய்வு அலுவலர்களை நியமனம் செய்ய உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

உள்ளூராட்சித் திணைக்களத்தில் கடமையாற்றும் கணக்குப் பதிவாளர்கள் உட்பட திறமையுள்ள அதிகாரிகளை நியமித்து கடமைப்பட்டியல் களைத் திணைக்களத் தலைவர் ஊடாக வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு உடன் அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் த.விஜயலட்சுமி சகல உள்ளூராட்சி மன்றங்களையும் கேட்டுள்ளார். (எ-152)

## மானிப்பாயில் இன்று திருமுறை விழா

வலிகாமம் தெற்கு,பெப்.16

மானிப்பாயில் இந்துசமய திருமுறை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இந்த விழா நிகழ்வுகள் இடம்பெறும்.

இவ்விழாவில் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம், ஆசிரியர் ஆறு.திருமுருகன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

செல்வி இ.சுப்பையாபிள்ளையின தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இணுவில் இளம்தொண்டர் சபையினரின் 'பக்த நந்தனார்' நாடகமும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (எ-152)

## யாழ்.சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் சனசமூக நிலையம்

### வருடாந்த பொதுக்கூட்டம்

சிறாம்பியடி கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 2003.03.09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும். அன்று சங்க ஒழுங்கு விதிகள் (யாப்பு) அங்கீகரித்தலும், இவ்வாண்டுக்கான நிர்வாகத்தினர் தெரிவும் நடைபெறும். சகல அங்கத்தினரும் தவறாது சமுகந்தருமாறு அழைக்கின்றோம்.

(14540) - புனரமைப்புக் குழுவினர்.

## 5ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 09 - 1924



மறைவு 12 - 03 - 1998

அமரர்

### அப்பாப்பிள்ளை சிதம்பரநாதன்

திதி: பூரணை (16.02.2003)

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
ஆறுதல் சொல்ல யாருமில்லை
ஆறுமோ நெஞ்சம் மாறுமோ நின் நினைவுகள்
ஆண்டுகள் ஐந்து கழிந்ததப்பா
அன்பு அப்பாவே! எமது கண்ணீர்ப் பூக்களை
ஆறுமுகன் கால்களில் காணிக்கையாக்குகின்றோம்.

தாங்கள் நினைவில் வாழும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மஞ்சத்தடி கோவில் வீதி,
இணுவில். (14544)

## ஓராண்டு நினைவுகள்

தோற்றம் 26 - 06 - 1914



மறைவு 26 - 02 - 2002

### அமரர் ஆழ்வாப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

திதி: 16-02-2003

பெற்ற தந்தைக்குத் தலைமகனாக இருந்து
தாங்கள் பிதிர்க்கடன் செய்தீர்கள்! - அதன்வழியே
நாங்கள் ஆளாக வழிகாட்டினீர்கள்!
உற்றார், உறவுகளில் ஆட்சியுடன் வாழ்ந்தீர்கள்!
இன்று தங்களை நினைவு கூரும் ஆண்டு ஒன்று!
தங்களின் பாதியாம் எம் அன்னை உமைப் பிரிந்து
எங்களுடன் தங்களைத் தேடும் ஆண்டும் ஒன்று!

என்றும் நினைவுடன் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், அயலவர்.

பாரதி வீதி,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (14521)


## அறிவித்தல்

"சிலோன் பென்சில் கம்பனி லிமிடட்"
இனால் உற்பத்தி செய்யப்படும் சகல
"அற்லஸ்" பாடசாலை உபகரணங்களிற்குமான,
யாழ்ப்பாண பிரதேசத்திற்கான விற்பனை
முகவரின் பெயரும் முகவரியும் பின்வருமாறு

ஆசிர் வணிக நிலையம்

இல:202ஏ
கே.கே.எஸ் வீதி
யாழ்பாணம்

தொ.பே 021-2222842
தொடர்பு கொள்க
திரு. நிக்ஸன்

அற்லஸ் அற்லஸ்

# ஈழத்தில் திரைப்படத் துறை

**செவ்விக் களம்**

**ஓவியரும், எழுத்தாளரும், திரைப்பட இயக்குநருமான வை.சச்சிதானந்தசிவம் (ஞானதரன் - வயது 61) நில அளவைத் திணைக்களத்தில் படவரைஞராகக் கடமையாற்றி 1990ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றார். இலக்கியம், திரைப்படம், போன்ற துறைகளில் தற்போது பணியாற்றிவரும் இவர், மாவீரர் கப்டன் மைக்கல்வாணனின் தந்தையாவார்.**


*கேள்வி:* **கலைத்துறையில் உங்கள் வரவு பற்றிக் கூறுங்கள்?**

*பதில்:* 1962 ஆம் ஆண்டளவில் (எனது 22ஆவது வயதில்) ஓவியத் துறையில் எனக்கிருந்த ஈடுபாடு எழுதத் துத்துறைக்கு வழிவிட்டது. சி.சு.செலலப்பாவின் 'எழுத்து' சஞ்சிகையை என் போன்றவர்களுக்கு அறிமுகம் செய்து இலக்கியத்துறையில் ஆர்வத்தை வளர்த்த எனது நண்பரும் பிரபலமடையாத சிறந்த எழுத்தாளருமான வி.கே.சபாரத்தினம் (இளம் பூரணன்) அவர்களை என்றும் நினைவு கூருவேன். 'தேனருவி' இலக்கிய இதழில் (அறுபதுகளில் கொழும்பிலிருந்து வெளிவந்த) 1963 இல் 'பிச்சைக்காசு' என்ற எனது சிறுகதையைப் பிரசுரித்து ஊக்கம் தந்ததும் அவரே. தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் பாலு மகேந்திராவும் 'தேனருவி' ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. 'தேனருவி' சஞ்சிகை ஓவியராகவும் எழுத்தாளராகவும் பணியாற்றிய காலப்பகுதியில்தான் பல எழுத்தாளர்களின் நட்பு எனக்குக் கிடைத்தது. எஸ்.போ.வின் 'வீ' சிறுகதைத் தொகுதிக்கான அட்டைப்படம், மு.தளையசிங்கத்தின் 'புதுயுகம் பிறக்கிறது' சிறுகதைத் தொகுதிக்கான அட்டைப்படம் என்பனவற்றிலும் 'தேனருவி' சஞ்சிகையிலும் நவீனப்பாங்கான ஓவிய முறைகளையே கையாண்டேன். இதன் பின்பு இலக்கியத் துறையிலேயே கூடுதலான அக்கறை இருந்தது. பல சிறுகதைகள் வெளிவந்தன. சில கதைகள் பரிசில்களும் பெற்றன. எனது முதல் நாவலான 'ஊமை உள்ளங்கள்' வீரகேசரிப் பிரசுரமாக 1976இல் வெளியானது. இந்த நாவலை எழுதும்படி ஊக்கம் தந்த எனது நண்பர் கே. எஸ்.சிவகுமாரன் அவர்களையும் நன்றியுடன் நினைவில் கொள்கிறேன். இதனைத் தொடர்ந்து எனது இரண்டாது நாவலான 'புதிய பூமி' வீரகேசரிப் பிரசுரம் சாகித்தியப் பரிசு பெற்றது. திரைப்பட ரசனையிலும் கொழும்பில் கடமையாற்றிய காலகட்டத்தில் இலக்கிய நண்பர்களிடையே மிகுந்த ஆர்வம் காணப்பட்டது. திரைப்பட விழாக்களில் உலகப் புகழ் பெற்ற படங்களைக் காணும் வாய்ப்புக்கிட்டியது. புரிய முடியாதவையாக, சலிப்புத் தட்டுவனவாக முன்னர் ஏற்பட்டிருந்த மனப்பதிவில் மாற்றம் ஏற்பட்டது. 'ரே' யின் பதேர் பாஞ்சாலி, மாநகர், ஜலசாகர், போலந்துப் படங்களான 'ஙைவ இன் தவாட்டர்' போன்ற பல படங்களின் ஆழங்களை எம்மால் ரசிக்கவும், விமர்சிக்கவும் முடிந்தது. இச்சூழல் தாக்கத்தின் விளைவாகவே நண்பர் பாலு மகேந்திரா எமது திணைக்களத்தை விட்டு விலகி பூனா(Pune) திரைப்படக் கல்லூரியில் சேர்ந்தார் என நினைக்கிறேன். கலை இலக்கியக் கோட்பாடு சார்ந்த முரண்பாடுகள் எம்மிடையே இருந்தபோதிலும் இறுக்கமான வட்டத்துக்குள் நின்று எவரும் செயற்படாமையால் ஒவ்வொருவரும் தமக்குரிய ஆளுமைகளை அவரவர் போக்கில் வெளிப்படுத்தினர். உண்மையான கலை வெளிப்பாடு,உண்மையை நெருங்குவதே என்பதில் எனக்கு ஆழமான பிடிப்பு உள்ளது. ஓ இதுவல்ல இதுவல்ல என்ற வாழ்வூரான தேடுதலின் விளைவாக எழுந்த பாதிப்புக்களையே நான் எனது இலக்கிய திரைப்படப் படைப்புக்கள் ஊடாக உருவாக்க முயற்சி செய்தேன் என்பதையே என்னால் கூறமுடியும்.

திரைப்படத்துறையில் 1991ஆம் ஆண்டிலிருந்து ஈடுபட்டு வருகிறேன். சுவடியாக்கத்தில் (எழுவது மட்டும்) தேர்ச்சி பெற்றிருந்தமையால் 1991 இல் நிர்சனப் பணியாளராக முடிந்தது. இக்காலப் பகுதியில் வீடியோக் கமரா தயாரிப்புக்கள் சம்பந்தமான ஆங்கில நூல்களை தமிழாக்கம் செய்துகொடுக்கும் பணியில் ஈடுபட்டு வந்தபொழுதுதான் 'இனியொரு விதி' குறும்படத்தின் சுவடியாக்கத்தைத் (Script) தயாரித்தேன். எழுத்துச் சுவடிக்கும் தயாரிப்புக்கும் எவ்வித முரண்களும் இல்லாமல் திருபரதனின் படப்பிடிப்பிலும், நெறியாள்கையிலும் இப்படம் வெற்றியளித்தது. இந்தச் சுவடியாக்க முறையையே இப்பொழுதும் பின்பற்றுகிறேன். இம்முறைமை ஆளுக்குஆள் வேறுபடலாம் எனக் கருதுகிறேன். அது இயக்குநர்களுக்குரிய தேர்வாகும். வருங்காலத்தில் ஈழத்துத் தமிழ்ப் படங்கள் சர்வதேச மட்டத்திற்குச் செல்ல உதவ வேண்டும் என்பதே எனது ஆழ்ந்த விருப்பம். இம்முயற்சியில் அக்கறையுடன் ஈடுபடும் அனைவருக்கும் ஏதோ இத்துறையில் சில படங்களை உருவாக்கினேன் என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எனது நெறியாள்கையில் 'காற்றுவெளி', 'முகங்கள்' 19[illegible]-94 காலப்பகுதியில் முழு நீளப் படங்களாக வெளிவந்தன. 1991-2001 வரை 14விவரணப் படங்களை உருவாக்கினேன். (இவற்றில் ஆங்கிலத்தில் வெளியான 3விவரணப் படங்களும் அடங்கும்). 'காற்று வெளி', 'முகங்கள்', 'நேற்று' (குறும்படம்) விமர்சகர்களின் பாராட்டைப்பெற்றன.

*கேள்வி:* **ஆரம்பம் முதல் இன்று வரை ஈழத்தமிழ்த் திரைப்படப் போக்கு எவ்வாறு உள்ளது?**

*பதில்:* சிங்களத் திரைப்படத்துறை இந்திய வர்த்தக சினிமா ஆதிக்கத்திலிருந்து கணிசமானளவு விடுபட்டுள்ளது என்றே கூறலாம். நல்ல திரைப் படங்களை உருவாக்கக் கூடியரசனை மாற்றம் மக்களிடையே ஏற்பட்டுள்ளது.



சிங்கள தேசிய உருவாக்கத்தின் மீள கட்டமைப்பு (காலனித்துவ ஆட்சிகளுக்குப் பின்னான) வலுப்பெற்று தேசிய அடையாளங்காண மக்களிடையே எழுந்த அரசியல் பின்னணியும் இந்த வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்திருக்கலாம். வெஸ்டர் ஜேம்ஸ் பீரிசின் 'தந்தேசிய ரேகாவா', 'கம்பெரலிய' போன்ற படங்கள் சிங்கள சினிமாவில் புதிய வாசல்களைச் சிங்கள மக்களுக்குத்திறந்து வைத்தன. இதன்

## சரியான திசையில் வழிநடத்தப்படவேண்டும்

பின்பு பல இயக்குநர்கள் சர்வதேச மட்டத்தில் அங்கீகாரம் பெற்றவர்களாக வளர்ச்சி கண்டுள்ளதைக் காணலாம். மறுபுறத்தில் ஈழத்துத் தமிழ்த் திரைப்படங்கள் பற்றி குறிப்பிட ஒன்றுமில்லை. 'பொன்மணி' திரைப்படம் சினிமா என்ற கலைத்துறையைப் புரிந்தவர்களின் முயற்சி என்றே கூறலாம். மக்களின் வாழ்வோடு ஒன்றிப்போன அனுபவ வெளிப்பாடு இல்லாத சிங்கள இயக்குநர் இயக்கியதால் உரிய எதிர்பார்ப்பை எட்டமுடியவில்லை என்றே கருதுகிறேன். ஈழத்தில் திரைப்படத்துறை சரியான திசையில் வழி நடத்தப்படவேண்டும். சினிமா என்பது வர்த்தகப் பண்டமாக மாறி விட்ட இன்றைய சூழலில் இத்துறையில் அக்கறையுள்ள அறிவாளிகள் வழிநடத்த வேண்டும். இவற்றிற்கு அடிப்படையாகச் சினிமா ரசனை பற்றிய பார்வையை மக்களிடையே கொண்டு செல்லவேண்டும்.

*கேள்வி:* **ஈழத்திரைப்பட வரலாற்றில் போராட்ட காலத்தில் உருவான படைப்புக்கள் காத்திரமான பங்கை வகிக்கின்றன. அவற்றிலும் போராளிக் கலைஞர்களின் பங்களிப்பு அதிகமானது. இது பற்றி உங்கள் கருத்து?**

*பதில்:* போராளிகள் (பெண் போராளிகள் உட்பட) இன்று திரைப் படத் துறையில் (வீடியோப் படங்கள்) கணிசமான பங்களிப்பு வழங்கக்கூடிய நிலையில் உள்ளனர். போருக்கு வெளியே சமூகம் சார்ந்த கதைக் கருக்களைக் கையாளக்கூடிய இலக்கியத் திறனாய்வுப் பார்வை இவர்களிடையே வளர்க்கப்பட்டால் அதிசிறந்த படங்களை இவர்களால் உருவாக்கமுடியும் என நம்பிக்கையுடன் கூற விரும்புகிறேன். ஒரு திரைப்பட நெறியாளருக்குப் பரந்துபட்ட அறிவாற்றல் தேவைப்படுகிறது எனக் கருதுகிறேன். சிறந்த இலக்கிய கர்த்தாக்கள் இதில் கவமாக முன்னேற்றம் காணலாம் என்பது எனது நம்பிக்கை. தொழில்நுட்ப சாதனங்களைத் திறமையாகக் கையாள்வதன் மூலம் கலை நேர்த்தியை எட்டிவிட முடியாது. பார்வையாளனிடம் எதிர்பார்க்கும் தாக்கத்தை உருவாகக முடியாவிட்டால் வெற்றி பெறாது. போராளிகள் பலர் இலக்கியப் படைபபாளிகளாகவும் இருக்கிறார்கள். எழுத்தாளர் ஜெயகாந்தனால் உருவாக்கப்பட்ட'உன்னைப்போல் ஒருவன்' திரைப்படம் இலஸ்ரேட்டட் வீக்லி பத்திரிகையில் சத்தியஜித் ரேயின் படங்களுடன் ஒப்பிட்டு விமர்சிக்கப் பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

*கேள்வி:* **ஈழத்தமிழர்கள் அக்கறையை உள்ளடக்கியதாக பல்வேறு தென்னிந்தியத் தமிழ்ப் படங்கள் வெளிவந்துள்ளன. குறிப்பாக அண்மையில் நந்தா, காற்றுக்கென்ன வேலி, கன்னத்தில் முத்தமிட்டால், ரெறறிஸ்ற் போன்றவற்றின் தொனிப்புக்கள் ஈழத்தமிழ்த் திரைப்பட இயக்குநரென்ற வகையில் எவ்வாறு உங்களைப் பாதித்தன?**

*பதில்:* இப்படங்கள் கூட தென்னிந்திய சினிமாப் படங்களுக்குரிய சில அடிப்படையான செல்நெறிகளிலிருந்து விலகிச் செல்லவில்லை. 'காற்றுக்கென்ன வேலி' சற்று வேறுபட்டாலும் ஈழத் தமிழரின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தாமல் அவதானமாக உருவாக்கப்பட்டுள்ளது. ஈழத் தமிழ் மக்களின் வாழ்நிலை யதார்த்தத்தை தூரநின்று பார்த்ததன் பலவீனம் எல்லாப் படங்களிலும் தெரிகின்றது. 'ரெறறிஸ்ட்' படம் பார்க்க எனக்குக் கிடைக்கவில்லை. தென்னிந்தியப் படங்களில் 'வீடு' திரைப்படம் (பாலு மகேந்திரா) பாராட்டுக்குரியது.

*கேள்வி:* **உங்களது படைப்புப் பரப்பில் மறக்க முடியாத அனுபவம் ஒன்றைப் பகிர்ந்து கொள்ளுங்கள்?**

*பதில்:* யாழ்.திருநெல்வேலியில் படத்தொகுப்பு அறையில் வேலையில் மூழ்கியிருந்தவேளை, எமது அறைககு அடுத்த வளவில் பொம்மர் குண்டுவசி எங்களை மரண வாயிலுக்குக் கொண்டு போன சம்பவத்தை மறக்க முடியாது.

*கேள்வி:* **இயக்குநரென்ற வகையில ஒரு சிறந்த திரைப்பட இயக்குநரது கடமைகள், பொறுப்புக்கள், அதிகாரங்கள், அவருக்கு இருக்க வேண்டிய பண்புகள் என்பவற்றை தெளிவுபடுத்துங்கள்?**

*பதில்:* சிங்களத் திரைப்பட இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் குறிப்பிட்டதையே கூற விரும்புகிறேன். திரைப்படம் என்பது ஒரு கூட்டுச் செயற்பாடு. ஓர் இசை வடிவத்தைக் கற்பனை பண்ணி வாத்தியக் கலைஞர்களை வழி நடத்தும் இசையமைப்பாளர் போன்ற பணிதான் இதுவும். வாத்தியக்காரரில் ஒருவராயினும் தவறினால் முழு இசையுருவாக்கத்திற்கும் ஊறுவிளைவிக்கும். அது போலவே இயக்குநரும் அனைவரையும் ஒருங்கிணைத்து மிகவும் சுமுகமான உறவு பேணலுடன் வழி நடத்த வேண்டும். பொறுமை, சலிப்படையாமை என்பன முக்கிய பண்புகளாகக் கருதுகிறேன். தென்னிந்திய சினிமாப் பாரம்பரியம் இங்கு பின்பற்றப் படவில்லை. கோடிக்கணக்கான ரூபாய்கள் முதலீட்டுடன் நடைபெறும் மிகப்பெரிய வர்த்தகம் அது. இங்கு நடிகர்களும், கமரா, ஒலி, ஒளிச் சாதனங்களை நகர்த்துவதற்காகச் சுமந்து செல்வார்கள். ஆகவே ஒவ்வொருவருக்குரிய கடமைகளை வரையறுக்க இங்கு முடியாது. இதுவும் ஒரு படிமுறைக்குள் கொண்டு வருவது நனறு.

*கேள்வி:* **சமூக அக்கறை என்பது ஒவ்வொரு படைப்பாளிகளிடத்தேயும் இருக்க வேண்டுமென்பதில் உங்கள் கருத்து?**

*பதில்:* மனிதனின் ஆன்மாவையும் உடலையும் பிரித்துப் பார்க்கும் ஆன்மீகப் போக்குகள் கலைப்படைப்புக்களிலும் உள்ளன. மானுடநேயம், அன்பு மேன்மையானது எனக்கருதுமிடத்து சமூக அக்கறை எல்லாக் கலைஞர்களிடமும் இருக்க வேண்டியது அவசியமாகிறது. அவனது படைப்புத் தொழிலே இந்த அடித்தளத்திலிருந்துதான் பிறக்கிறது எனக்கருதுகிறேன். ஹேபட் றீட் என்ற ஓவியக்கலை விமர்சகர் கூறியதுபோல கலை கலைக்காக இருந்தாலும் சரி, மக்களுக்காக இருந்தாலும் சரி அது கலையாக இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார். கலை என்பது அறிவியல், மெய்யியல், அரசியல் என்பவற்றுடன் பின்னிப் பிணைந்திருப்பதை மறுக்க முடியாது எனக்கருதுகின்றேன். எனவே, கலைஞன் எப்போதும் பொறுப்புணர்வு கொண்டவனாகவே இருத்தல் அவசியமாகிறது. உலகம் - வீடு - மனிதன் என்ற உறவா அல்லது மனிதன் - வீடு - உலகம் என்ற உறவா என்பதுதான் தத்துவார்த்த ரீதியான முரணாக உள்ளது. ஜெயகாந்தன் ஒரு மனிதன் - ஒரு வீடு - ஓர் உலகம் என்ற நாவலைப் படைத்ததை இங்கு கவனிக்கலாம். ஆனால், இன்றைய உலக ஒழுங்கு மாற்றங்கண்டு வருகிறது. இதன் பின்னணியிலேயே படைப்புக்கள் ஆய்வுசெய்யப்பட வேண்டும் எனக் கருதுகின்றேன்.

*கேள்வி:* **திரைப்பட ரசனை எவ்வாறு இருக்க வேண்டும்?**

*பதில்:* 'பதேர் பாஞ்சாலி' திரைப்படம் முதன் முதலில் கொழும்பில் திரையிடப்பட்ட போது எனக்கு வயது 20 ஆக இருக்கலாம். மிகுந்த சலிப்பைத் தந்தது. எனது ரசனையை வளர்த்துக் கொண்டபின் அப்படத்தின் ஒவ்வொரு சட்டகமும் (Frame) அர்த்தமுள்ளவையாகத் தெரிந்தன. எமக்கிருக்கும் ரசனை மட்டம்தான் இங்கு பிரச்சினை. இது வளர்க்கப் படாவிட்டால் சிறந்த படைப்புக்கள் உருவாகும் வாய்ப்பில்லை. மக்களின் அடிமட்ட ரசனைக்கேற்றவாறு படம் தயாரிப்பது முழுமையான வர்த்தகமாகும்.

*கேள்வி:* **உங்கள் படைப்புக்களில் எவ்வகையான சிந்தனையை அதிகம் முன் வைப்பீர்கள்?**

*பதில்:* கதைகளூடாக மனிதனின் புறஉலக வாழ்க்கையோடு மட்டுப்படுத்தாமல் அவனின் அக உலகையும் படைப்புகளூடாக கொண்டுவர முயற்சிப்பேன். சத்தியஜித் ரேயின் 'ஜல்சாதர் (music room) என்ற திரைப்படத்தில் முக்கிய பாத்திரத்தின் அக உலகம் வெகுசிறப்பாகக் கொண்டு வந்திருப்பதைக் காணலாம். மனிதனுக்கு ஏதோ ஒன்றில் ஆழமான பற்றுதல் வாழ்வதற்குத் தேவைப்படுகிறது. அதனூடாக அவன் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கிறான் என்றும் கூறலாம். தப்பித்துக்கொள்ளலிலிருந்து விடுபடுவதே மனிதனின் தேடுதலாக உள்ளது. இந்தச் சிந்தனைப் போக்கு என்னைக் கவர்ந்துள்ள போதிலும் எனது படைப்புக்களினூடாக இவற்றைக் கூறமுடியவில்லை. இத்தருணத்தில் மு.தளையசிங்கம் கூறிய 'நான் எழுதாமல் இருப்பதற்காகவே எழுதினேன்' என்ற வசனம் ஞாபகத்திற்கு வருகிறது.

எனது சிந்தனையை இன்னொரு மனிதன்மீது திணிப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை மார்க்சிய சிந்தனைகள் ஒரு காலத்தில் என்னை மிகவும் கவர்ந்தன. அதற்கான காரணங்களும் இருந்தன. ஆனால், கடந்து செல்லல் என்ற பரிணாமத்தின் பின்னணியில் இன்று நான் அந்த இடத்தில் இல்லை என்பதை உணர்கிறேன். எனது எழுத்துக்களூடாக எனது சிந்தனைகள் இழையோடியிருப்பதையே விரும்புவேன்.

*கேள்வி:* **தயாரிப்பு செய்முறையில் திரைக்கதைகளை குறிப்பிட்ட இலக்கு சார்பாக தெரிவு செய்வீர்களா அல்லது எழுந்தமானமாகவா?**

*பதில்:* நான் இதுவரை வேறொருவர் எழுதிய கதைகளையோ, எழுத்துச் சுவடியையோ அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கவில்லை. எனது ஆக்கங்களையே படமாக்கினேன். வெளித்தயாரிப்பாளர்கள் திரைப்படத் துறையில் உள்வாங்கப்படும்போது இது சார்ந்த பிரச்சினைகள் எழலாம். விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டவை வர்த்தக நோக்கம் கொண்டிருக்கவில்லை. இத்துறைக்காகக் கணிசமான முதலீடுகள் (போர்ச் சூழலிலும்) ஒதுக்கப்பட்டன. போர் ஓய்ந்த சூழலில் வருங்காலத்தில் இத்துறை மழுங்கிப்போகாமல் முன்னெடுக்க வேண்டியது திரைப்பட ஆர்வலர்களின் கடமையாகும்.

*கேள்வி:* **திரைப்படத் தயாரிப்பு நடவடிக்கையில் பொதுவாக பின்பற்றப் படும் படிமுறைகள் எவை?**

1) கதையைத் தெரிவு செய்தல்
2) திரைக்கதை தயாரித்தல்
3) ஆலோசனைகள் / கலந்துரையாடல்கள்
4) படப்பிடிப்பு சுவடியாக்கம்
5) நடிகர்கள் தெரிவு
6) படப்பிடிப்புக் களங்கள் (Locations) தெரிவு
7) நிதி (தயாரிப்பு நிர்வாகம்) பொறுப்புகள்
8) படப்பிடிப்பாளர்கள் தெரிவு
9) உதவியாளர்கள் (ஒளி/ ஒலி) நெறியாள்கை
10) வாகன ஒழுங்கு
11) இயந்திரசாதனங்கள் (படப்பிடிப்பு/ஒளி/ஒலி) மின்இணைப்பு
12) தொழில்நுட்ப உதவியாளர் (மின்சாரம் மற்றும்)
13) படப்பிடிப்பு காட்சிவாரியாகத் திட்டமிடல் (பங்கேற்கும் நடிகர்கள்/போக்குவரத்து /உணவு மற்றும் இதர விடயங்கள்)
14) படப்பிடிப்பு முடிந்தவற்றைப் பார்த்தல், திருப்தியில்லாவிடின் மீள் படப்பிடிப்பு
15) படத்தொகுப்பு -
16) ஒலிச்சேர்க்கை - (சூழல்)
17) குரல் மீள் ஒலிப்பதிவு (Dubbing)
18) இசை சேர்த்தல்
19) Titles - (வரைகலை - Graphics)
20) முடிந்தபின் வெளியிடப்பட முன் திருத்தங்களுக்காக ஆலோசனைக் குழு பார்வையிடல்
21) வெளியீடு
22) வெளியீட்டின் பின்னான விமர்சன மதிப்பீடு.

*செவ்வி கண்டவர்:*
**க.காமில்டன்**

*கேள்வி:* **பல்வேறு வசதியீனங்கள் உள்ள காலத்திலேயே உங்கள் படைப்புக்கள் உருவாக்கப்பட்டன. இந்தக் காலத்தில் உங்களது தயாரிப்பு செய்முறை எவ்வாறு அமைந்தது?**

*பதில்:* ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு முன்பே எனது 'காற்றுவெளி', 'முகங்கள்' தயாரிக்கப்பட்டன. மிகுந்த இடர்கள் மத்தியில் நவீன சாதனங்களின் வசதியற்றிருந்த காலத்தில் எவ்வாறெல்லாம் பிரச்சினைகளுக்கெல்லாம் முகம் கொடுத்தோம் என்பதெல்லாம் தனி விடயங்கள். அவற்றிற்காகப் படத்தில் உள்ள பலவீனங்களைச் சுட்டிக்காட்டும் பொழுது அவற்றை நான் ஏற்றுக்கொள்ளத் தயங்குவதில்லை. ❑

# மறந்ததும் நினைந்ததும்

நிறையத்தான் மறந்திருக்கிறோம்
நேற்றைய காப்பரணில்
நீயென் எதிரியாய் இருந்ததை
என் ஒற்றைக்குண்டில்
உன் ஒரே சகோதரன் இறந்ததை
வியர்வையாலான வீடுகளை
விமானப்பறவைகள் நொறுக்கியதை
என் சகோதரி ஒருத்தி
உன் சகோதரன் ஒருவனால்
வலிந்துரிமை கொள்ளப்பட்டதை
உல்லாசப் பயணத்துறை
உள்நோக்கத்துடன் உருக்குலைக்கப்பட்டதை
கட்புலத்திலிருந்து நகர்த்தப்பட்டு
காணாமல் ஆக்கப்பட்டவர்களை
எல்லாவற்றையும் தான்.
எனினும்
நினைவிதழில் முழுவெறுமையில்லை
ஒன்றுளது
போரின்றிய பொன்தேசத்தில்
நிச்சயமாய் நிலவுகின்ற
நிம்மதியின் சுகத்தை
நீயும் நானும்
துய்த்தாக வேண்டும் என்பது.
அதனால்
நீள வீசுகிறது சமாதானக் காற்று
என் காதலியினதும்
உன் குழந்தையதும்
கூந்தல் அளைந்து
வீசட்டும் அது. விடு
மறந்ததை மறந்து..... மட்டுமல்ல
நினைந்ததை நினைந்தும்......

- நந்தா.

# மண்ணிறமான.....

ஒரு அதிகாலையில் அவர்கள்
என் வீட்டுக்கு வந்தார்கள்
என்னமோ என்று.....
கட்டிலுக்கு கீழ், கதவிடுக்கில்
மர அலுமாரிக்குள், கக்கூஸில்
என்னமோ நான்
சூரியனை ஒளித்து வைத்திருப்பது போல்
தம்பிப் பையனின் புத்தகப் பைக்குள்ளும்
அதற்குள் அம்மாவிடம் அடிபட்டு
வாங்கிய அழிறப்பர் துண்டுதான்
தேய்ந்து போய்க் கிடந்தது.
அப்பாவின் வெற்றிலைப் பெட்டி
காய்ந்து போன
சுண்ணாம்புத் துண்டுகள்
அப்பாவின் பென்ஷனைப் பற்றி
அவர்களுக்கு என்ன தெரியும்
எதுவுமில்லை, எதுவுமில்லை
போகலாம்
கிணற்றடி வேலிக் கிளுவா
கற்பலை பிய்த்தபடி –
இறவா மனிதர்களை புகழ்ந்தபடி –
போய் விட்டார்கள்
ஒரு அழகான சோலை, பெரிய தென்னந்தோப்பு
மாட மாளிகை, அழகான நிம்மதி உலக
தென்றல் வளர்ந்த காலம், புதுத் தென்றல்
புத்தர் புது ரோஜா
கொண்ட என் நாட்டை
சப்பித் துப்பிய படி
பக்கத்துத் தெருவில் வந்து
சிவப்பு நிற மாடு.

- கோகுலராகவன்.

# சிவப்பின் தொடக்கம்.....

இனியவளே!
நிலவு உதயமாகாத
அந்தப்
பொன்னந்திப்
பொழுதில்
அலைகளின்
ஆசீர்வாதத்தோடு
உன்னை
நெருங்கியபோது
ஆசைக்கு அடிபணிய
நீ மறுத்தாய்!
அடங்க வைத்தேன்
அப்போது
சிவந்தது கிழக்கெதிர்
விழுந்தது கடலில்
ஒளி விளக்கு
பிரியும் போது
நீ சொன்னாய்
"என் உணர்வுகளையும்
மதிக்காது விடில்
பிரிந்து செல்வதைவிட
வேறு வழியில்லை"

- வே.சாரங்கன்.

# கவிதைக் கணங்கள்....

## இயற்கை வட்டம்

இருளின் திரை கிழிக்கும்
எத்தனத்தில் என் விளக்குத்
துணிந்து ஒளிருவதும்
தணிந்து தளர்வதுமாய் எரிந்து சளைக்கிறது
அருளின் குணம் குறித்து அறிஞர் எழுதியவோர்
உரையைத் தெளிந்த உவகையுடன்
நான் நிமிர்ந்தேன்
விட்டில்கள் வீழ்ந்து விளக்கில் எரிந்த அந்த
நாற்றத்தை நாசிவரை காற்று அனுப்பியது.
வில்லங்கமாய் எரிந்த
விளக்கு அது விட்டபுகை
மெல்லப்படிந்து மேற்கூரை கரியாக்கி
மூக்குவழி உள்ளே செல்லுங்குறியிற்
சீக்கிரமே வெல்கிறது.
சுற்றி இருக்குஞ் சுவரதனில்
ஒன்றிரண்டு பல்லிகளின் ஊசாட்டம்!
பாவம்!
உயிர் இருப்பை
உணவால் உறுதிசெய்யும்
எத்தனத்தின் ஏக்கத்தில்!
சுற்றிச்சுழலும் சிறு விட்டில்கள் மேல் விழிகள்!
குற்றளவு வீட்டில் ஒன்று மெல்ல அசைகிறது
கூர்ந்து அதைப்பார்த்துப் பின்
ஊர்ந்து நெருங்கிச் சற்றுத் தயங்கியது
சுவற்றிருந்த பல்லி!
சட்டென்று ஓர் எண்ணம்;
'ஊதி நகர்த்திச் சிறுபூச்சி
உயிர்காக்க வேண்டாமா?
மூளையினில் மின்னல்
வெட்டொன்று வீழ்ந்து வேண்டாமென்றோதியது
'இயற்கை
வட்டத்தில் இரைகௌவல் ஓர் பெரிய
கட்டம்; அதில் நான் தலையோட்டால்
துட்டத்தனம்' என்று திருத்தமுடன் கூறியது
பல்லி நகர்கிறது
பட்டென்று கவ்வியந்த
விட்டிலினை வாய்க்குள்
மெல்லத் திணிக்கிறது.

ஜெ. பிரேம்குமார்.

## 'அங்குசம்' என்னும் சஞ்சிகை...




"அங்குசம்" என்ற பெயரில் குடாநாட்டிலிருந்து புதிய சஞ்சிகை ஒன்று முகிழ்த்துள்ளது.

அங்குசத்தின் வரவு பற்றி அதன் ஆசிரியர் குழு பின்வருமாறு கூறுகின்றது:-

இதழியல் சார் துறைகள் சமூகத்தின் "நான்காவது சொத்து" எனப்படுகின்றன.

சஞ்சிகைகளுக்கான தேவை அதிகரித்துள்ள – அவற்றுக்கான தேடல் குறைவடைந்துள்ள – தற்போதைய சமூகச் சூழலில் "அங்குசம்" உங்கள் கைகளில்!

சஞ்சிகைத் தேவையை நிறைவுசெய்தல் மட்டுமன்றி அதனை தேடுவதற்கான "தாகத்தை" சமுதாயத்தில் ஏற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பையும் "அங்குசம்" கொண்டுள்ளது.

எமது சமுதாயம் பயனுற வாழும் வகையில், மூத்த எழுத்தாளர்களின் படைப்புகளை தன்னூடாக வழங்குவதுடன் அவிழத் துடிக்கும் இளம் மொட்டுக்களை, அரங்கேற்றுவதையும் "அங்குசம்" தன் பணியாகக் கொண்டிருக்கும்.

தனது கடமைகளை உணர்ந்து "அங்குசம்" செயற்படுமென பிரதிக்ஞை செய்து, வித்தைக்கு அதிபதியாம் விநாயகக் கடவுளின் பாதங்களில் சமர்ப்பிக்கிறோம் இந்நூலை!.

உங்கள் ஆக்கபூர்வமான விமர்சனங்களை வரவேற்கின்றோம்!

# போர்வேண்டாம்!

*ஈராக் நாட்டில் இருக்கின்றதாம்*
*'இம்' என்றவுடன் பேரழிவு ஏற்படுத்தும்,*
*எண்ணற்ற ஆயுதங்கள்!*
*இப்படிச் சொல்லி அமெரிக்கா நாடு,*
*ஆடு விழுங்கத் துடிக்கும் ஓநாய் போல்*
*'ஆ' வென வாய் பிளந்து நிற்குது காண்!*
*அய்யோ; பாவம் அமெரிக்காவிடம்*
*ஆள்கொல்லி ஆயுதங்கள் எதுவுமில்லை*
*ஈராக்கிடம் தான் பேரழிவுப் போர்க்கருவி!*
*இங்கே 'புஷ்' வைத்திருப்பதெல்லாமே;*
*ஜெபமாலை, உத்திராட்சம், துளசிமணி! இந்த*
*ஜெகம் வாழ நினைப்பதல்லால் வேறு நினைவில்லை!*
*ஐ.நா.சபை அனுமதிக்க இயலாது! போர் என*
*அறுதியிட்டு உறுதியாகச் சொன்னவுடன்*
*ஆவேசம் வந்த பூசாரி ஆடு, கோழி ரத்தம்*
*ஆத்தாளுக்குப் படைக்க வேண்டும் பக்தா*
*அவற்றை உடனே கொண்டுவா என்பது போல்*
*அமெரிக்க அதிபர் ஆணையிட்டு கேட்கின்றார்;*
*எண்ணை தேசத்தின் மீது போர் தொடுக்க*
*மண்ணையாளும் மற்ற நாடுகள் வரவில்லை யென்றால்*
*கண்ணை விற்று சித்திரம் வாங்கவா?*
*விண்ணைக் கிழிக்கும் ஏவு கணைகளை.*
*என்னை நம்பி நானே விடவா என்று,*
*அன்னை பூமி முழுவதிலும் ஆதிக்கம் தேடும்*
*அமெரிக்க நாடு விடுக்கின்ற அறை கூவல்*
*அமைதி குலைக்கின்ற அர்த்தமற்ற சவால்!*
*எத்தனை பூவும் பிஞ்சுகளும்,*
*எத்தனை மலரும் மொட்டுகளும்,*
*எத்தனை காயும் கனிகளும்,*
*எத்தனை கொடிகளும் செடிகளும்,*
*வாடி வதங்கி மரணக் குழிகளை*
*தேடிப் போவதற்கு வழி வகுக்கும்!*
*வேண்டுமென்று போருக்கு அழைப்பு விடுப்போர்*
*காண்பதற்கு மியலாத கற்கோட்டையில்*
*காவல் பலத்துடன் காத்துக் கொள்வர் தம்முயிரை!*
*நம் உயிரோ நடுத் தெருவில் பந்தாடப்படும் -*
*வேலையின்மையெனும் நெருப்பு தகிக்கின்ற வையத்தில்*
*வேலைக்கு ஆள் தேடும் நிலைதோன்றி*
*வேலி சூழ் இவ்வுலகின் நாடுகளில்*
*காலியாகும் மனிதக் கூடுகள் கணக்கில் அடங்கா -*
*வந்த சண்டை கண்டு விலகுவது வீரமல்ல; அதற்காக*
*வலுவில் சண்டைக்குப் பாக்கு வைப்பது விவேகமல்ல!*
*விவேகபுரி விஞ்ஞான புரி என்ற அமெரிக்கா*
*விளம்பரங்கள் செய்தால் மட்டும் போதாது;*
*விவேகமும் விஞ்ஞானமும் ஆக்கப்பணிகள்*
*வேர் விட்டு விழுது விட்டுக் கிளைப்பதற்குத்தான்!*
*வேரில், விழுதில், விஷ நீர் ஊற்றி*
*வீழ்த்த அல்ல; உலகை விசாரத்தில் ஆழ்த்த அல்ல!*

**(ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்க முயற்சி செய்வதைக் கண்டித்து கருணாநிதி எழுதிய கவிதை)**

| | | | |
|---|---|---|---|
| | | சனி. ராகு | |
| சூ. ▲ | இராசிச் சக்கரம் | | வியா. சந். |
| புதன். | | | |
| வெ. | செவ். கேது | | |

# இந்த வார இராசி பலன்

## 16-02-2003 - 22-02-2003

### மாற்றம்

**ஆயிலியம், கடகம் இராசியில் சந்திரன் நிற்கும்.**

**அரசியலில் சமாதானப் பேச்சுத் தொடரும். வீட்டு வீட்டுக் கருத்து வேற்றுமைகள் வர இடமுண்டு. வெளி நாடுகள் கூடிய கவனம் செலுத்தும். இந்தியா புதிய ஆலோசனைகள் சொல்லும். இந்தியாவில் வடக்கிலும், மத்தியிலும் திட்டமிட்ட அழிவுகள் வரஇடமுண்டு. மத்திய கிழக்கில் போர்ப் பயம் நீடிக்கும். அழுத்தங்கள் உச்சக் கட்டம் அடையும். அத்திலாந்திக் பசுபிக் பிராந்திய நாடு களில் அரசியல் மாற்றங்களுக்கு இயற்கையின் சீற்றமும் இருக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.**

### மேடம்

சுய சிந்தனையுடன் செயற்படும் உங்களுக்கு பிறர் சொல்வதைப் பிடிக்காது. தொழிலில் ஒரு தாக்கம். பிறர் எதிர்ப்பார்கள். பொருள் வரவு குறையும். குடும்பத்தவர்களுக்கு உடல் நலப் பாதிப்பு வரும். வைத்திய சாலை, மருந்து என அலைவீர்கள். வாகன ஓட்டம் கவனம் விபத்து வரலாம். ஆனால் பயப்படத் தேவையில்லை. கொடுத்த பொருள் வராது. இருப்பதைப் பாதுகாக்கவும். சட்டம், பாதுகாப்புத் துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### இடபம்

அக்கறையுடன் உறுதியான நடவடிக்கை எடுப்பீர்கள். ஆனால் தொழில் ஸ்தானத்தில் எவரும் உங்களை அக்கறை எடுக்கமாட்டார்கள். மாற்றங்கள் சிலருக்கு வரலாம். உஷ்ண பீடைகள் வருத்தும். விரோதிகளிடம் ஒரு கண்ணாக இருங்கள். குடும்பத்தினருக்கு பொருள் வரவு கொடுக்கும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். சினிமாவுக்கு பொருள் செலவு செய்வீர்கள். நண்பர்கள் எதிர்ப்பார்கள். மாணவர்களுக்கு நன்மை வரும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### மிதுனம்

சுறுசுறுப்பாக அங்கும் இங்கும் ஓடியாடித்திரியும் நீங்கள் ஏன் புதிய தொழில் தொடங்கப் பயப்படுகிறீர்கள்? பழையன கழிதலும், புதியன புகுதலும் உங்கள் செயற்பாட்டில் இருக்கும். பொருளை அவசரத்தில் இழந்துவிட வாய்ப்பு உண்டு. மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பல உதவிகளைச் செய்து கொடுப்பார்கள். எதிர்ப்பாளர் உதவிகள் செய்வார்கள். போட்டோஸ்ரற் தொழில், சினிமாத்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### கடகம்

இரக்க குணம் கொண்டவர் நீங்கள். பிறருக்கு உதவிகள், ஆலோசனைகள் சொல்வதில் பின்நிற்க மாட்டீர்கள். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் கூட உங்கள் ஆலோசனை கேட்பார்கள். பொருள் இழப்பு ஒன்று ஏற்பட இடமுண்டு. பிரயாண சுகத்தால் செலவுகள் அதிகரிக்கும். மாமன், மச்சான் வழியினர்கள் உதவிகள் செய்து தருவார்கள். குருவும் சந்திரனும் கூடி யோகத்தைத் தரும் காலமாகும். வெளிநாட்டு உறவினர்கள் உதவிகள் செய்வார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### சிங்கம்

உங்கள் ஆலோசனை கேட்காதவர்கள் இறுதியில் தோல்விகளைச் சந்திப்பார்கள். தொழில்ஸ்தானத்தில் புதிய நடைமுறைவரும். மேலதிகாரிகள், சக ஊழியர்கள் நன்மை அடைவார்கள். உறவினர்களுக்கு உடல் நிலை பாதிப்பு வரலாம். பொருளால் வேதனை வரும். கொடுத்தது வராது. புதிய பொறுப்புக்கள் வீட்டிலும், தொழில் ஸ்தானத்திலும் வர இடம் உண்டு. மாணவர்களுக்குப் புதிய இடத்திலிருந்து செய்திகள் வரும். குருத்துறை, வைத்தியத் துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி சனி.*

### கன்னி

காணியும் இல்லை, காசும் இல்லை, கடைசியில் விற்பனையாளரைத் தாக்கும். குடும்பத்தைத் தாக்கும். தொழில் ஸ்தானத்தில் அவமானம் ஏற்படலாம். மாமன், மாமி, மச்சான் வழியினர்கள் கோவிக்க இடம் உண்டு. பொருளால் வேதனை வரும். தூரத்திலிருந்து செய்தி அல்லது உறவினர் வந்து போவர். தெய்வத்தொண்டு, காலில் வருத்தம் வரும். செய்தி, குருபீடம் தொடர்பானவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி சனி.*

### துலாம்

மனித வாழ்வின் துன்பச் சுமைகளை சுமந்துதான் ஒவ்வொருவரும் கடக்க வேண்டும். விதிவலிது. எதுவும் பெரிதல்ல. தொழில்ஸ்தானத்தில் மாற்றங்கள் வரும். பெரியவர்கள் உதவுவார்கள். பிரயாணத்தில் கவனம். இழப்பு கொடுக்கப் பலன் உண்டு. நாரி, கழுத்து உளைவு வரும். புதிய தொழில் பொறுப்பொன்றை ஏற்கச் சந்தர்ப்பங்கள் வரலாம். இடமாற்றங்களை, பிரயாணங்களை தவிர்த்தல் நன்று. நண்பர்களால் நன்மைகள் கிடைக்கும். பாதுகாப்புத்துறை, சட்டத்துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி சனி.*

### விருச்சிகம்

உடலில் வருத்தம் ஒருவருக்கு வந்துவிட்டால் தெரியும் அவரின் துன்பத்தின் தன்மை. தொழில்ஸ்தானத்தில் வரவுகள் அதிகரிக்கும். சக ஊழியர்கள் உதவி செய்வார்கள். எதிலும் எதிர்ப்புணர்வு வரும். கலகம் பிறந்துதான் நியாயம் உங்களுக்குக் கிடைக்கும். பொருள், கொடுக்கல் வாங்கலால் பிரச்சினை வந்து போகும். நண்பர்கள், அயலவர்களுக்குப் பிரச்சினைகள். உங்கள் ஆலோசனை தேவைப்பட்டு உதவுவீர்கள். நாரி, நெஞ்சுநோ, சல வருத்தங்கள் வரலாம். பிரயாணங்களைத் தவிர்க்கவும். , மருந்துத் துறை, வியாபாரத்துறையினருக்கு மாற்றங்களும் நன்மைகளும் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு புதன், வெள்ளி.*

### தனுசு

வீடு கட்டி முடித்த பின்பு தான் குடிபுகுதல் செய்ய வேண்டும். அல்லது இழப்புக்கள் வர இடமுண்டு. அரைகுறையாய் அவித்த கிழங்கு சாப்பிட்டால் வயிற்றுக்குத்து வரலாமல்லவா? சினிமாவுக்கும் அழகிற்கும் முதலிடம் கொடுப்பீர்கள். பிரயாணத்தாமதம், மனக் கவலையை அடிக்கடி கொடுக்கும். வருவாய்கள் மெல்ல மெல்ல வரும். விசாரணைகள் குபீரென வரலாம். தூரதேசத் தொடர்புகள் வரும். கடும்போக்கானவராக இருப்பீர்கள். மாணவர்களுக்கு புதிய இடத்தில் கல்வி தொடர இடம் உண்டு. குருத்தொழிலில் அவர்கள் சிறப்பு அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, புதன், வெள்ளி.*

### மகரம்

உங்கள் தொழிலில் ஆழ்ந்த கவனம் செலுத்தாதவர்கள் பல பின்னடைவுகளைச் சந்திப்பார்கள். அதிக பயம் கொடுக்கும். கால் வருத்தம், வருவாய் குறையும், மாமன், மச்சான் வழியினர்கள் கோவிப்பார்கள். மேலதிகாரிகள் தொழில்ஸ்தானத்தில் உதவியாக இருப்பார்கள். இனஜன உதவிகள் கிடைக்கும். அடிக்கடி அயலவர்கள், நண்பர்களுடன் வாக்குவாதப்பட இடமுண்டு. பொருளில் கவனம். இழப்பு வரலாம். ஆராய்ச்சித்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், சனி.*

## மகாதேவா ஜோதிடம்

### கும்பம்

கோயில் பீடத்திற்கு நேர்ப்படவோ, மணிக்கூண்டு கோபுரத்திற்கு எதிர்பாடாகவோ 100 அடிக்குள் மனைஅமைப்பதைத் தவிர்க்கவேண்டும். அல்லது பல கஷ்டங்களை மனிதர்கள் அடைவார்கள். தொழில் ஸ்தானத்தில் புதியவர்கள் வருகை தருவர். இனஜனக் கொண்டாட்டம் இருக்கும். குடும்பத்தில் நன்மைகள் நடக்கும். பொருள் வரவு இருக்கும். மாணவர்களுக்கு புதியவர்கள் உதவுவார்கள். நற்செய்தித் தொடர்பு ஏற்படும். அரச அதிகாரிகள் உதவுவார்கள். கால்வருத்தம், நெஞ்செரிவு இருக்கும். குரு- சட்டத்தொடர்பானவர்கள் சிறப்பு அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், சனி.*

### மீனம்

நண்பர்களுக்காக அதிக நேரத்தை செலவு செய்வீர்கள். ஆனால் நண்பர்கள் உங்களில் அதிக அக்கறையாக இருக்க மாட்டார்கள். தொழில் ஸ்தானத்தில் வாக்குக்கலகங்கள் வர இடமுண்டு. இடமாற்றங்கள் நல்லதல்ல. தந்தைக்கும் தந்தை வழியினர்க்கும் பிரச்சினைகள் வர இடமுண்டு. பொருள் இழப்பு வரச்சந்தர்ப்பங்கள் ஏற்படும். நாரி, வயிற்றுநோ வரலாம். சக ஊழியர்கள் உதவியாக இருப்பர். கடல் தொழில், பிரயாணத் துறைகளைச் சார்ந்தவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், சனி.*

# புரிந்துணர்வை சட்டப்படி பார்க்கும் ஜனாதிபதிக்கு ஒரு பகிரங்க கடிதம்

**'அம்மையாரின் அருள்வாக்கு' என்ற தலைப்பில் வாசகர் ஒருவர் வரைந்த கடிதம் இது.**

சிறிய தீவான இலங்கையில் நெடுந்தீவு என்ற பெயர் கடந்த பல மாதங்களாக பலவகையிலும் ஊடகங்களில் அடிப்பட்டுவந்தது. இந்தவாரம் இலங்கைத் தமிழர்கள், ஸ்ரீலங்கா சிங்களவர்கள் அனைவருமே ஒரு கணம் அதிர்ச்சியில் உறைந்துபோன சம்பவம் ஒன்று சிறிய இலங்கைத் தீவின் நெடுந்தீவு கடலில் நடந்து முடிந்துள்ளது. அனைத்து மக்களும் கவலைப்பட்டார்கள். பலரும் மனம் உடைந்துபோனார்கள். அடுத்து என்ன நடக்குமோ என்று உறைந்துபோனார்கள்.

ஆனால், சந்திரிகா அம்மையாரே! இந்தவாரம் நீங்கள் மட்டும் படு பிசியாக, குசியாக இருந்திருக்கின்றீர்கள்.

காரணம் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் ஒரு சிறு கீறல் விழுந்துவிட்டது. உடனே கீறல் விழுந்த இசைத்தட்டாக உங்கள் வழமையான பல்லவியை பாடத் தொடங்கிவிட்டீர்கள்.

"ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பார்கள். அந்தவகையில் உங்களுக்கு இந்த வாரம் கொண்டாட்டம்தான்.

அந்தக் குசியில் நீங்கள் சில வேத வாக்குகளை உதிர்த்திருக்கின்றீர்கள். அதில் ஆச்சரியப்படவைக்கும் வார்த்தைகளும் உள்ளன. வழமைபோல் 'அரசு மீது நடவடிக்கை எடுப்பேன், பாதுகாப்பு அமைச்சரை வீட்டுக்கு அனுப்புவேன், புலிகளை நம்பமுடியாது என்று நீங்கள் கூக்குரல் இட்டிருக்கின்றீர்கள். நான் அதைச் சொல்லவில்லை.

மாறாக "போர்நிறுத்த உடன்படிக்கையை இரு தரப்பும் கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டும். நிறைவேற்ற வேண்டும். உடன்படிக்கை பலமிழந்து போனால் சமாதானம் பலமிழந்து போகும்" என்று சொல்லியிருக்கின்றீர்கள். இந்த வார்த்தைகள்தான் என்னை புல்லரிக்க வைத்துள்ளன.

இந்த இடத்தில் உங்களுக்கு ஒரு விடயத்தை நான் தெளிவுபடுத்த வேண்டும்.

புரிந்துணர்வு என்பதற்கும் சட்டப்படி என்பதற்கும் இடையில் பலத்த வேறுபாடுகள் உள்ளன.

அமெரிக்காவின் பிரபல நீதிபதியான ஒலிவர் வென்டல் ஹோம்ஸ் என்பவர் சட்டம் பற்றி குறிப்பிடுகையில் - "ஒரு தோடம்பழத்தை ஒருவருக்கு கொடுக்க வேண்டுமென்றால் அதைப் பேசாமல் அவரிடம் புரிந்துணர்வின் அடிப்படையில் கொடுத்துவிடுவதே நல்லது. அல்லாமல் அதனை ஒரு வக்கீல் மூலம் சட்டப்பிரகாரம் உடன்படிக்கை ஒன்றின் மூலம் கொடுப்பது என்பது பல பிரச்சினைகளை பின்னர் தோற்றுவிக்கும்" என்கிறார்.

தோடம்பழத்தை ஒருவருக்குக் கொடுப்பது என்பதை உடன்படிக்கை அல்லது சட்டப்படி வக்கீல்கள் இப்படி எழுதுவார்கள்.

குறிப்பிட்ட இந்த, விலாசத்தில் வசிக்கின்ற இன்னாருடைய பேரனும், இன்னாருடைய மூன்றாவது மகனுமாகிய நான் சுயநினைவோடும் சுய விருப்பத்தோடும் இன்னாருடைய மகனான இவருக்கு இந்தத் தோடம் பழத்தை மனப்பூர்வமாக அளிக்கிறேன். இனிமேல் இந்தப் பழத்தின் மேல் எனக்கு எந்த உரிமையும் கிடையாது. இந்த பழத்திலுள்ள தோல், சுளை, விதைகள், ரசம் ஆகிய அனைத்தும் அவருக்கே சொந்தம். அதை அவர் வெட்டியோ, பிழிந்தோ, துண்டுதுண்டாக நறுக்கியோ எப்படி வேண்டுமானாலும் அவர் விரும்பப்படி உபயோகப்படுத்தலாம். இனி எக்காலத்திலும் நான் இந்தப் பழத்தின்மீது உரிமை கொண்டாடமாட்டேன் என்று வக்கீல் எழுதுவார்.

இப்படி சட்ட நுணுக்கங்களுடன் எழுதப்பட்டாலும், அந்த சட்ட விவ



ரங்களை வேறொரு திறமையான வக்கீல் தன் வாதத்தால் உடைத்து அந்தப் பழத்தை உன்னிடமிருந்து வேறு ஒருவருக்கு வாங்கித் தந்து விடுவார். அதுதான் சட்டம். அதுதான் உடன்படிக்கை.

கிட்டத்தட்ட இந்த புரிந்துணர்வு போர்நிறுத்த உடன்படிக்கை கூட அப்படித்தான். சட்டப்படி அதில் எழுதப்பட்டுள்ள வாக்கியங்களின் படி நடப்பது என்பது வேறு. சமாதானத்தை நிலைநாட்ட சில விட்டுக் கொடுப்புகளை செய்வது என்பது வேறு.

(13ஆம் பக்கம் பார்க்க)

# வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 28.03.2003 மு.ப. 11.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஆர்வமுடையோர் கேள்விப் படிவங்களை 14.03.2003 இலிருந்து 21.03.2003 வரை குறிப்பிட்ட வேலைகளுக்கெதிரேயுள்ள வைப்புப் பணத்தினையும், படிவக் கட்டணத்தையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் 28.03.2003 பி.ப. 12.30 மணிக்கு திறக்கப்படும்.

| வேலை விவரம் | இக்ராட் பதிவுதரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | கேள்விப்படிவக் கட்டணம் வற்வரி உட்பட |
|---|---|---|---|
| 01. வல்வெட்டித்துறை நகராட்சிமன்றக் கட்டடம் அமைத்தல் கட்டம் 7 | எம்-8 | 35,250.00 | 550.00 |
| 02. வல்வெட்டித்துறை மீன்சந்தைக் கட்டடம் அமைத்தல் கட்டம் 3 | எம்-8 | 31,500.00 | 550.00 |
| 03. வல்வெட்டித்துறை பஸ்நிலையக் கட்டடம் அமைத்தல் கட்டம் 1 | எம்-8 | 15,000.00 | 550.00 |
| 04. வல்வெட்டித்துறை நவீனசந்தைக் கட்டடம் அமைத்தல் கட்டம் 6 | எம்-8 | 15,000.00 | 550.00 |
| 05. வல்வெட்டித்துறை மரக்கறிச்சந்தைக் கட்டடம் அமைத்தல் கட்டம் 1 | எம்-8 | 15,000.00 | 550.00 |
| 06. வல்வெட்டித்துறை கலாசார மண்டபம் அமைத்தல் கட்டம் 1 | எம்-8 | 15,000.00 | 550.00 |
| 07. பொலிகண்டி சாரதா சேவாச்சிரம கட்டடத் திருத்தம் | | 6,000.00 | 550.00 |
| 08. தொண்டமனாறு ஆற்றங்கரை வீதித்திருத்தம் | | 2,000.00 | 220.00 |
| 09. வல்வெட்டி வேவில் வெள்ளத்தடுப்புச் சுவர் அமைத்தல் | | 5,000.00 | 550.00 |
| 10. வல்வெட்டி சீனட்டி மல்லியோடை வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்தல் | | 2,000.00 | 210.00 |
| 11. உடுந்துவத்தை வீதித்திருத்தம் | | 2,500.00 | 275.00 |
| 12. ஊரிக்காடு கெருடாவில் வீதித் திருத்தம் | | 2,500.00 | 275.00 |
| 13. வாவினி ஒழுங்கை மதகு திருத்தம் | | 750.00 | 110.00 |
| 14. வல்வெட்டி மல்லியோடை வீதித் திருத்தம் | | 2,850.00 | 275.00 |
| 15. வாவினி ஒழுங்கை திருத்தம் | | 5,000.00 | 550.00 |
| 16. நாவலடி வீதித் திருத்தம் | | 1,250.00 | 110.00 |
| 17. அமெரிக்கன்மிஷன் பாடசாலை வீதித் திருத்தம் | | 1,000.00 | 110.00 |
| 18. மானாங்கானை சமத்தனை வீதித் திருந்தம் | | 4,000.00 | 440.00 |
| 19. ஊறணி ஊற்றுக்கேணி திருத்தம் | | 2,500.00 | 275.00 |
| 20. வல்வெட்டி புதுவளவு வீதித் திருந்தம் | | 1,700.00 | 200.00 |
| 21. ஆவரசம்பிட்டி ஒழுங்கை திருத்தம் | | 950.00 | 110.00 |

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். நிதி ஏற்பாடுகள் கிடைக்காதவிடத்து கேள்விகள் ரத்துச் செய்யப்பட்டு கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் மீளளிக்கப்படும்.

சு.சந்திரசேகரம்
உபதலைவர்,
நகராட்சி மன்ற அலுவலகம், வல்வெட்டித்துறை.

*நகராட்சிமன்ற அலுவலகம்*
*வல்வெட்டித்துறை. 2003.02.14* (சி-26545)


# நடமாடும் இலவச கண் சிகிச்சை முகாம்

"உங்கள் கண்களை நாங்கள் காப்போம்"

- உங்கள் கண்களை விசேட கண் பரிசோதகர்களைக் கொண்டு பரிசோதிப்பதற்கும்
- சகல வகையான கண்ணாடிகளை சகாய விலையில் பெற்றுக்கொள்வதற்கும்

உங்களை அன்புடன் அழைக்கின்றோம்

| பாடசாலை | திகதி | நேரம் |
|---|---|---|
| யா/கொக்குவில் இந்துக்கல்லூரி | 17-02-2003 | காலை 9 மணி முதல் பி.ப. 1 மணி வரை |
| யா/இந்து மகளிர் கல்லூரி | 17-02-2003 | பி.ப.2 மணி முதல் மாலை 6 மணி வரை |
| யாழ். இந்துக் கல்லூரி | 18-02-2003 | காலை 9 மணி முதல் பி.ப.1 மணி வரை |
| வேம்படி மகளிர் உயர் வித்தியாலயம் | 18-02-2003 | பி.ப.2 மணி முதல் மாலை 6 மணி வரை |
| யாழ். மத்திய கல்லூரி | 19-02-2003 | காலை 9 மணி முதல் பி.ப. 1 மணி வரை |
| ஹோலி பெமிலி கொன்வன்ட் | 19-02-2003 | பி.ப.2 மணி முதல் மாலை 6 மணி வரை |
| சென். பற்றிக் கல்லூரி யாழ்ப்பாணம் | 20-02-2003 | காலை 9 மணி முதல் பி.ப.1 மணி வரை |
| சென். ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம் | 20-02-2003 | பி.ப.2 மணி முதல் மாலை 6 மணி வரை |
| கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் | 21-02-2003 | காலை 9 மணி முதல் பி.ப.1 மணி வரை |
| சுண்டுக்குளி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம் | 21-02-2003 | பி.ப.2 மணி முதல் மாலை 6 மணி வரை |

அனுசரணை:

ஒப்டிலைன் ஒப்டிகல்ஸ்
(மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையம்)
54, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு-02.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.வி.சிவசரணநாதன் J/288
திரு.சு.செல்வராசா J/292

இவர்கள் தன்னலமற்ற தமது மகத்தான சேவையினால் மக்களின் நலனுக்காக அயராது உழைத்து கிராம அலுவலர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றமையிட்டு மிகமகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று, தம் சேவையையும் இறைபணியையும் நலமுடன் புரிய எல்லாம்வல்ல வடகைதை கயிற்றசிட்டி கந்தவேட் பெருமான் அருள்புரிவாராக.

*கைதடி வடக்கு,*
*கைதடி.*
(14509)
கயிற்றசிட்டி
கந்தசுவாமி தேவஸ்தான
பரிபாலனசபை.


# இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடா நிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி P.T.R.**

*யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி.*
*இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).*
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை.
(வியாழக்கிழமைகளில் விடுமுறை)

(14522)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
29
-
07
-
1937



மறைவு
17
-
01
-
2003

அமரர்

## சேகராஜரத்தினம் ஜெகநாதன்

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் - தொண்டமனாறு
மனேஜர் - முருகன் கோயில் - மொன்றியல், கனடா)

மொன்றியல், கனடாவில் காலமான எமது அன்புத் தந்தையின் மரணச்செய்தி கேட்டு தொண்டமனாறு இல்லத்திற்கு வந்தும், கடிதமூலமாகவும் தந்தி மூலமாகவும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், சகோதரி, மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மாமி, மைத்துனர்.

*உடுப்பிட்டி வீதி,*
*தொண்டமனாறு.*

(14396)


# கெமரா பழுது பார்த்தல்

1975 ஆம் ஆண்டில் இருந்து 25 வருடங்களுக்கு மேலாக. அனுபவமிக்க. விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன் மதிப்பையும். பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்.

திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன். அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு. ஒரே நாளில் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை. ஒரு வருட உத்தரவாதம்!




டிஜிட்டல், ஸ்டில் & வீடியோ கெமரா, லென்ஸ்கள், ஸூம் கெமரா பிளேக்ஸ்சேர்சியுற், ஃபிளாஸ் கன்ஸ்

**DURST ELECTRONICS (PVT) LTD.**

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. போன்: 575480, 565756
P.G. மாட்டிறுக்கு எதிரிலும், நெஷனல் ஷோரூம் மற்றும் ஹோட்டல் ரேணுகா மத்தியிலும் (கடல் பக்கம்)

# ஆசிரியர் நலன், உரிமைகள் பேணுவதில் முன்னின்றவர் ஆசிரியமணி சிவபாலசிங்கம்

*"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று"*

என்பது வள்ளுவர் பெருமானின் வாய்மொழி. இத்திருக்குறட் பொருள்களுக்கேற்ப புகழோடு தோன்றி, வாழ்ந்து, பணியாற்றி மறைந்த பெரியார் ஆசிரியமணி சி.சிவபாலசிங்கம் (02.07.1927 - 04.01.2003) அவர்கள்.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் கல்வி பயின்ற சிவபாலசிங்கம் அவர்கள், தமிழாசிரியர் தராதரம் பெற்று அதே பாடசாலையில் ஆசிரியராகவும் பணியாற்றத் தொடங்கினார். இளமையிலேயே தமிழார்வம் மிக்கவராக விளங்கிய

## நீத்தார் நயப்புரை

அவர்கள், தமிழகத்து திராவிடர் முன்னேற்றக்கழகத்து அரசியல் - இலக்கிய நூல்களில் தீவிர ஈடுபாடு கொண்டு படித்து வந்தார். இதனால் தமிழாற்றல் மிக்கவராக விளங்கினார். ஈழத்தமிழர் அரசியல் உரிமையிலும், விடுதலையிலும் தீவிர ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார்.

ஆசிரியப் பணியாற்றிய அவர்கள், நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றபின் தென்னிலங்கையில் குருநாகல் இந்து மகா வித்தியாலயத்திலும் பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பதவியேற்றுப் பணியாற்றினார். தென்னிலங்கையில் பணியாற்றிய அவர்கள் பின் யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியரானார்.

முதலில் அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் சேர்ந்து பணியாற்றிய அவர்கள், அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கமும், அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கமும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கமாக இணைந்த போது அச்சங்கத்தில் சேர்ந்து பணியாற்றினார். இச்சங்கத்தின் யாழ்மாவட்டச் செயலாளராகப் பல ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றினார்.

ஆசிரியர் சங்கத்தில் பணியாற்றிய அவர்கள், ஆசிரியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும், அவர்களின் நலன்களைப் பேணுவதிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். ஆசிரியர்களுக்குத் தேவைகளும் பிரச்சினைகளும் ஏற்படும்போது, கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளோடு பேசி அவற்றைப் பெற்றுக்கொடுப்பதில் ஆர்வம் மிக்கவராக விளங்கினார். கல்வி அதிகாரிகளோடு முரண்பாடு ஏற்படும்போதும் ஆசிரியர்களின் உரிமைகளுக்காக தீவிரமாக வாதிடுவார். கல்வி அதிகாரிகள் அவரின் நியாயத்தை ஏற்றுச் செயற்படுவார்கள். இதன் மூலம் ஆசிரியர்கள் பெரு நன்மை பெற்றனர்.

ஆசிரியர் சங்கத்தின் முக்கிய பணியாளராக இருந்தது மட்டுமன்றித் தமது பிள்ளைகள் பயின்ற கொக்குவில் இந்துக் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் சிவபாலசிங்கம் அவர்கள் பணியாற்றினார். இது பற்றிக் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு.அபஞ்சலிங்கம் அவர்கள் பின்வருமாறு பாராட்டியுள்ளார்.

**மயிலங்கூடலூர் பி.நடராசன்**

"அமரர் சிவகுரு சிவபாலசிங்கம் அவர்கள் என்றும் என்மனதில் நிறைந்திருப்பவர். எனது தொழில் முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றியவர். விசேடமாக, நான் அதிபராகப் பதவியேற்ற ஆரம்பக் காலங்களில் அவர் கல்வி வட்டாரங்களில் மிகவும் மதிக்கப்பட்டவராக இருந்தார். அவ்வேளை, அவர் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டச் செயலாளராகவும் கடமையாற்றியவர். இந்நிலையில் அவர் எமது கல்லூரியின் அபிவிருத்திச் சங்கச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டது கல்லூரியினதும் எனதும் பெரும் பேறாக அமைந்தது. எனக்கு வழிகாட்டியாகவும், உற்றதுணையாகவும், கல்லூரிக்கு வளங்களைத் தேடுவதிலும் அவர் ஆற்றிய சேவை என்றுமே எனது மனக்கண் முன் நிற்கும். அவர் தேடித் தந்த ஆசிரியர் வளம், கட்டட வசதிகள் ஆகியன கல்லூரியின் வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாக அமைந்ததை அக்காலத்தில் எமது கல்லூரியில் தொடர்புடைய அனைவரும் அறிவர்."

இப்பாராட்டுரை அவர்களின் பெருமைக்கும் ஆற்றலுக்கும் சான்றாகும்.

இலங்கை முழுவதும் பழைமையான காலத்தில் தமிழரின் நாடாக இருந்தது. எனினும், பிற்காலத்தில் தான் தமிழர்கள் இலங்கையில் வந்து குடியேறினார்கள் என்ற தவறான கருத்தை வரலாற்று அறிஞர்கள் சிலர் எழுதி வருகின்றனர். தவறான இக்கருத்தை படித்த ஆசிரியமணி சிவபாலசிங்கம் அவர்கள், பழங்காலம் முதல் இன்றுவரை ஈழத்தில் தமிழர் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை ஆதாரபூர்வமாக முழுமையான வரலாற்று நூலாக வெளியிட வேண்டும் என விரும்பினார்.

இந்நூல் வெளியீட்டை ஆசிரியர் சங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்ற கருத்தை அவர்கள் ஆசிரியர் சங்கச் சபைகளில் பிரேரித்து ஏற்றுக் கொள்ள வைக்கப் பலமுறை முயன்று வெற்றிபெற்றார். எனினும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இக்கருத்தைத் தமது வாழ்வின் இறுதி நாளில் ஒரு கட்டுரையாக எழுதினார். இக்கட்டுரை அவர் அமரரான பின் 'உதயன்' இதழில் வெளிவந்துள்ளது. இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் இப்பணியை ஏற்று நிறைவேற்ற ஆர்வத்தோடு தீவிரமாகப் ஈடுபடவேண்டும். இது ஈழத்தமிழரின் விடுதலைக்குச் சான்றாக அமையும்.

# கல்வி நிர்வாக அலுவலர்களுக்கு கொடுப்பனவை தொடர்ந்து வழங்குக!

## மாகாண அமைச்சு அறிவிப்பு

மண்டைதீவு,பெப்.16

1995 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை தொடர்ந்து வழங்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

அண்மையில் கல்வி வலயங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தப் பரீட்சையின் மூலம் ஆள் சேர்ப்புச் செய்யப்பட்டவர்களுக்கு வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட சம்பளமே வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இலங்கை அதிபர் சேவை வகுப்பு I வகுப்பு 2-I ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கு அந்தப் படிநிலைக்குரிய சம்பளமே இதுவரை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஏனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இறுதிமுடிவெடுக்கும்வரை இவர்களுக்கு அவர்கள் பெற்றுவந்த சம்பளக் கொடுப்பனவுகளை தொடர்ந்தும் வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் அதில் - குறிப்பிடப்பட்டுள்ளது.(எ-88)

# இயக்கத்தில் இணைய முயன்ற சிறுவர்கள் மீது விசாரணை!

## விடுதலைப் புலிகள் முறைப்பாடு

வவுனியா,பெப்.16

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய முன்வந்து 18 வயதை அடையாத நிலையில் விடுவிக்கப் பட்ட சிறுவர்களை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்கின்றனர்.

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் மேற்கண்டவாறு முறைப்பாடு செய்துள்ளார்.

தமது இயக்கத்தில் இணைய வரும் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைத்துவருகின்றோம். பின்னர் அவர்களது வீடுகளுக்குச் சென்று இராணுவ புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்கின்றனர்.

வன்னியில் இருந்து விடுவிப்பதற்காக அழைத்துவந்த மூன்று சிறுவர்கள் ஓமந்தை சோதனை நிலையத்தில் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் - என்று எழிலன் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (ஓ-3-164)

# பலாலி செபஸ்தியார் ஆலய புனரமைப்புப் பற்றி ஆராயக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.16

பலாலி புனித செபஸ்தியார் ஆலயத்தைப் புனரமைப்பது பற்றிய கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தின் 'ஜெறோ' மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புனரமைப்புப் பணிகள் பற்றிய முக்கிய தீர்மானங்கள் இக்கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளது என்றும் எனவே பலாலி புனித செபஸ்தியார் ஆலயப் பங்கு மக்கள் அனைவரையும் இதில் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-8)

# புரிந்துணர்வை சட்டபடி.....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது அவரவர் மனநிலையை, இலட்சியத்தைப் பொறுத்தது.

பாடசாலைகளிலும் பொதுக்கட்டடங்களிலும் படையினர் நிலைகொள்ளக்கூடாது என்பது உடன்படிக்கையின் எழுத்து வடிவம். அதனால் நாங்கள் பாடசாலைகளிலிருந்தும் பொதுக் கட்டடங்களிலுமிருந்தும் வெளியேறுகிறோம். ஆனால், அருகில் உள்ள காணியில் நாம் முகாம் அமைப்பதை உடன்படிக்கை மறுக்கவில்லை என்று இராணுவத்தினரும் அவர்களின் தளபதியுமான நீங்கள் கூறினீர்கள். சட்டப்படி உடன்படிக்கையில் இருந்த வாசகப்படி நீங்கள் சொல்வது சரி.

ஆனால், என்ன நோக்கத்துடன் இந்த சரத்து உடன்படிக்கையில் கொண்டுவரப்பட்டதோ அந்த இலக்கு இதனால், அடிபட்டுப்போகின்றது; இதனால், உடன்படிகை பலமிழந்து போகின்றது.

"உடன்படிக்கை பலமிழந்து போனால் சமாதானம் பலமிழந்து போகும்" என்று நீங்கள்தான் இந்த வாரம் சொல்லியிருக்கிறீர்கள்.

அதேசமயம், உடன்படிக்கையின் வாசகங்களின்படி ஸ்ரீலங்கா படையினர் உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து எப்போவோ வெளியேறியிருக்க வேண்டும். ஆனால், இன்னமும் வெளியேறவில்லை. ஆனால், விடுதலைப் புலிகள் உங்களைப்போல் 'ஐயகோ அரசு உடன்படிக்கையை மீறிவிட்டதே' என்று கொக்கரிக்கவுமில்லை, பேச்சுக்களை குழப்பவுமில்லை. இதேபோல்தான் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்பதும். இன்னமும் குடாநாட்டில் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கப்படவில்லை. இந்த விடயத்திலும் உடன்படிக்கை பலமிழந்துபோய்விட்டது.

'உடன்படிக்கை பலமிழந்து போனால் சமாதானம் பலமிழந்து போகும்; என்று நீங்கள்தான் இந்த வாரம் சொல்லியிருக்கிறீர்கள்.

உடன்படிக்கையின் வாசகங்களின் படி இதுவரை விடுதலைப் புலிகள் தமது தரப்பு பங்கை முற்றாக நிறைவேற்றிவிட்டார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், படையினர் இன்னமும் பல விடயங்களை நிறைவேற்றவில்லை என்பது உண்மையே. அவை முக்கத் தடையாகப் பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதும் உண்மை. இந்த யதார்த்த உண்மை [illegible] புரிந்துகொண்டு விடுதலைப் புலிகள் பல விட்டுக்கொடுப்புக்களை செய்துவருகின்றனர். அவர்கள் உங்களைப் போல் கொக்கரிக்கவில்லை. ஏன்? அவர்கள் உண்மையில் சமாதானத்தில் அக்கறை உள்ளவர்களாக இருப்பதால்தான் அவர்கள் பல விட்டுக் கொடுப்புக்களை செய்து வருகின்றனர்.

உடன்படிக்கை அமுல்படுத்துவதில் ஸ்ரீலங்கா அரசுக்குச் சிக்கல்கள் ஏற்படும் போதெல்லாம் அது குறித்து அதனை கண்காணிக்கும் கண்காணிப்புக்குழுவினரும், விடுதலைப் புலிகளும், ஸ்ரீலங்கா அரசும் பேசித் தீர்த்துக்கொள்கின்றனர்.

ஆனால், விடுதலைப் புலிகளின் கடற்புலியினர் கடலில் நடமாடினால் மட்டும் உங்கள் படையினர் அவர்களை கைதுசெய்யவேண்டும் என்று நீங்கள் உத்தரவிடுகின்றீர்கள்.

உண்மையில் அந்த கடற்பகுதி முன்னர் உங்களின் படையினர் வசம் இருந்ததொன்றல்ல. அது விடுதலைப் புலிகளின் வசம் இருந்ததொன்று. வடமராட்சியிலிருந்து முல்லைத்தீவு வரை புலிகளின் வசமே பெருமளவு கடற்பிரதேசம் இருந்தது. போர்நிறுத்தம் ஏற்படுத்துவதற்கு முன்னர் உங்கள் கடற்படையினர் வடக்கு கடலின் கரையிலிருந்து பத்து கடல் மைல் தூரத்திலேயே நடமாடினர். ஒருபோதும் அவர்கள் கரைக்குக் கிட்டவோ அல்லது கடலின் பத்து மைல் தூரத்திலோ நடமாடியது கிடையாது. கடற்பரப்பில் விடுதலைப் புலிகளே தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தியிருந்தனர்.

ஆனால், போர்நிறுத்த உடன்படிக்கையில் - ஸ்ரீலங்கா நாடு ஒரு தீவு என்பதாலும் வெளிநாடுகளிலிருந்து கடல் அதை பிரிப்பதாலும் நாட்டின் இறைமையைக் காக்க ஸ்ரீலங்கா அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்று புலிகள் கடல் பரப்பில் ஸ்ரீலங்கா படையினர் நடமாட அனுமதித்தனர். இது அவர்களின் நல்லெண்ணத்தைக் காட்டுகின்றது.

ஆனால், தாம் கொடுத்த வரமே அவர்களுக்கு இன்று சாபமாகிப் போனது. வரம் கொடுத்தவன் தலையிலேயே கைவைத்துப்பார்க்க நீங்கள் தலைப்பட்டுவிட்டீர்கள்.

இன்று கடலில் நடமாடும் ஸ்ரீலங்கா கடற்படையினர் புலிகளின் படகுகளை மறிக்கவும் சோதனையிடவும், தடுத்துவைக்கவும், கைதுசெய்யவும் முற்படுகின்றபோது அது அவர்களுக்கு எத்தனை வேதனையைத் தரும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும் இதனாலேயே கடற்பரப்பில் புலிகளின் நடமாட்டம் குறித்து மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்று விடுதலைப் புலிகள் நீண்டநாள்களாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

உண்மையில் போர்நிறுத்த சர்வதேச கண்காணிப்பாளர்கள் இருக்கின்றனர் என்ற துணிவிலேயே உங்கள் கடற்படையினர் கடலில் நடமாடுகின்றனர். விடுதலைப் புலிகளின் கைகள் உடன்படிக்கை என்ற பெயரில் கட்டப்பட்டுள்ளதாலேயே ஸ்ரீலங்கா கடற்படையினரால் நடமாட முடிகின்றது. புலி விரதமிருக்கின்றது என்பதற்காக அதனைச் சீண்டிப்பார்க்கும் நடவடிக்கைகள் ஆபத்தில் முடியும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இதேசமயம், திருமலையில் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் தூயவன் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றம் அவரை கைதுசெய்ய உத்தரவிட்டுள்ளது. இதேபோல் விடுதலைப் புலிகளும் தங்கள் நீதிமன்றில உங்களுக்கு பிடியாணை பிறப்பிக்க எத்தனை வினாடிகள் தேவை. இது ஒன்றும் பெரிய விடயமல்ல.

ஒன்றில் சட்டப்படி செய்வதென்றால் சட்டப்படி நீங்களும் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். அல்லது சமாதான நல்லெண்ண புரிந்துணர்வு அடிப்படையில நடைமுறைச் சிக்கல்களைக் களைய வேண்டுமென்றால் பிரச்சினைகளை சிக்கலாக்காது பேசித்தீர்க்கவேண்டும்.

இரண்டில் ஒரு முடிவுக்கு நீங்கள் வரவேண்டும். அதை விடுத்து விடுதலைப் புலிகள் வரிக்குவரி உடன்படிக்கையின்படி நடக்கவேண்டும். ஆனால், அரசு தனது தரப்பு கடப்பாடுகளை உடன்படிக்கையின்படி நிறைவேற்றாது நடைமுறைச் சிக்கலகளை பேசித் தீர்க்கவேண்டும் அல்லது [illegible] இராணுவ அதிகாரியிடம் [illegible] செய்யவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

உங்களுக்கு ஒரு நியாயம் புலிகளுக்கு ஒரு நியாயமா? அது அநியாயம்!

எனவே, சட்டப்படி உடன்படிக்கையின்படி உங்கள் இராணுவத்தை உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விலக்கிக்கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஏனென்றால்; 'உடன்படிக்கை பலமிழந்து போனால் சமாதானம் பலமிழந்து போகும்' என்று நீங்கள்தான் இந்த வாரம் சொல்லியிருக்கிறீர்கள்.

இப்படிக்கு
மாசகன் ரட்ணதுரை (கனடா)

# சமாதானத்தின் தூதுவர்கள்

"சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்; ஏனெனில் விண்ணரசு அத்தகையோரதே" (மத்தேயு 19:14) இறைமகன் இயேசுகிறிஸ்து விடுக்கும் அழைப்பு இது. சின்னஞ்சிறார்கள் எத்தனை மேன்மை மிக்கவர்கள் என்பது இதன் மூலம் வெளிப்படையாகின்றது. "புறாக்களைப் போன்று கபடமற்றவர்களாக இருங்கள்" என்று கிறிஸ்து கூறியதும் கூட, இச்சிறார்களது இதயத்தை ஆய்ந்தறிந்தாரோ என்று ஊகிக்கத் தோன்றுகின்றதல்லவா? உண்மைதான். ஏனெனில் கிறிஸ்துவும் ஒரு குழந்தை உள்ளம் கொண்ட சிறுவனாக வாழ்ந்தவர்.

## ஞாயிறு நற்பிரசாதம்

அவர் குழந்தை உள்ளத்தைப் புசித்து, சுவைத்து அப்பருவத்தின் இன்பத்தை அனுபவித்த ஒருவராகவே தென்பட்டார். இதனாலேயே அவர் சின்னஞ்சிறார்களுக்குத் தனது அரசிலே முதலிடம் கொடுத்தார்.

ஆனால், இவ்வுலகிலோ இவற்றுக்கெல்லாம் மாறாக நாம் கேள்விப்படுவதும், காண்பதும் சிறுவர்கள் கடத்தப்படுதல், சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு, கொள்ளை, கொலை போன்ற அதிர்ச்சியும் - அச்சந்தரும் சம்பவங்களையே. மனிதம் மறைந்து போய்விட்டது. கொடூரம் நிறைந்த லோகமாக இப்பூவுலகம் பிரகாசிக்கின்றது என்பதை இச்சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் இத்தகைய கொடுமைகளை அவதானித்த எம் தாய்த் திருச்சபையானது சின்னஞ்சிறார்களை உலக ஆபத்துக்களில் இருந்து பாதுகாத்திடவேண்டுமென்று திடசங்கற்பம் பூண்டது. இதன் விளைவாகவே தான் 'திருப்பாலத்துவ சபை' தோன்றியது. இவர்கள் மீதான நல்லெண்ணங்களை திருச்சபை வெளிக்கொணர்ந்தது.

பிரான்ஸ் நாட்டில் நன்ஸி என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆயர் சாள்ஸ் டீ பொபின் ஜன்சன் ஆண்டகை, சிறுவர்களுக்காகத் தன்னையே அர்ப்பணிக்க முன்வந்தார். இச்சமூகத்தில் சிறுவர்களை துன்புறுத்தும் அட்டூழியங்கள், கொடுமைகள் ஆகியவற்றில் இருந்து விடுவித்து அவர்களை வெளிச்சத்திற்கே கொண்டு வரவேண்டுமென்று சித்தங்கொண்டார். இதன் வெளிப்பாடாக 1843ஆம் ஆண்டு 'திருப்பாலத்துவ சபை' என்ற சபையை அவர் உருவாக்கினார். இதன்மூலம் இச்சபையானது சிறார்களுக்குத் தேவையான செபம், விசுவாசம், பகிர்தல் எனும் முக்கிய குறிக்கோள்களை தன்னகத்தே கொண்டு சின்னஞ்சிறார்களை வழிநடத்திச் செல்கிறது.


**ஜூட்ஸ் சின்னப்பன்**

திருப்பாலத்துவ சபையானது சிறுவர்களை அன்பிலும் பராமரிப்பின் கீழும் பண்புள்ள பிள்ளைகளாக வளர்த்து வருகின்றது. ஒவ்வொரு ஊக்குநர் கரங்களிலும் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றது. இதன் தூண்டுகோலாகவும், பாதுகாவலாகவும் ஆயர்களையும், குருக்களையும் மேய்ப்பர்களாக நியமித்துள்ளது திருச்சபை. அவர்களது ஒத்துழைப்புடனும் வழிநடத்தலுடனும் திருப்பாலத்துவ சபையானது சிறப்பாக இயங்கிக்கொண்டு வருகின்றது.

4முதல் 14 வயதுவரையுள்ள சிறுவர்கள் மத்தியில் கடவுள் பக்தி, பெற்றோர் - வளர்ந்தோர் மீது மரியாதை, பிறரது துன்பங்களில் பங்கு கொள்ளும் மனப்பான்மை - அவர்களது தேவைகள் நிமித்தம் செய உதவி செய்தல் போன்ற நற்பண்புகளை வளர்த்தல் திருப்பாலத்துவ சபையின் குறிக்கோள்களில் முக்கியமானதாகும்.

இத்தகைய உருவாக்கல் மூலம் குடும்பங்கள், சமூகங்கள் மத்தியில் சமாதானப் பாலங்களாக அவர்களை விளங்கச் செய்யமுடியும் என்பது திருப்பாலத்துவ சபையின் நம்பிக்கையாகும். அமைதியின் சின்னங்களாக விளங்கும் வெண்புறாக்களையும், அமைதியின் காற்றினை நிரப்பிய பலூன்களையும் வானில் பறக்கவிட்டு நாட்டின் சமாதானப் பயணத்திற்கு ஆதரவு தெரிவிப்பதில் சிறார்களும் பங்கு கொண்டமை திருப்பாலத்துவ சபையின் அந்த நம்பிக்கைக்கு உத்வேகத்தைத் தருகின்றது.

எனவே, இவ்வாண்டின் எண்ணக் கருவான "சமாதானத்தின் சிறிய தூதுவர்கள் நாமே" என்பது சிறார்களின் பாணியின் பொருட்டு முற்றிலும் உண்மையே. இச்சிறார்களின் சமாதானக் சுகந்தமாக வெளிவரும் வார்த்தைகள் இன்றும் உண்மையிலே நிறைவேறிக் கொண்டிருக்கின்றது.✦



உலகின் எந்தப் பகுதியிலும் எவருக்கும் சமாதானம் இலகுவாகக் கிடைக்கவில்லை. அதனை பெரும் வேதனைகளை அனுபவித்து, பொறுமையைக் கடைப்பிடித்து, துணிவுடனும் தியாகங்கள் மூலமுமே வென்றெடுத்து உள்ளார்கள். பரஸ்பரம் பேச்சுவார்த்தைகளின் மூலமும் நம்பிக்கை வைத்தும் இதனைப் பெற்றிருக்கிறார்கள். மோதலினால் ஏற்பட்ட துன்ப வடுக்களை மாற்றியதன் மூலமே இதனை அடைந்தார்கள். 20 ஆண்டு கால பரு

# இது கடைசிச் சந்தர்ப்பம்

பயங்கர நிகழ்வுகளுக்குப் பின்னர் சமாதானம் என்னும் தங்க வாசலுக்கு அருகில் இன்று நிற்கிறோம். இதில் மிகவும் கஷ்டமான பகுதியை நாம் அடைந்து விட்டோம். இரு தரப்பிலும் துப்பாக்கி வேட்டு ஒலி ஓய்ந்து விட்டது. வன்முறைகள் தணிந்து விட்டன. ஒரு கொடுமையான யுத்தம் இவ்விதம் நீண்ட காலம் நின்றிருப்பதை உங்களால் சிந்தித்துப் பார்க்க முடிகிறதா? நிரந்தர சமாதானம் என்ற வலுவான கொள்கையின் மூலம் எமது தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். சமாதானத்தை ஓரிரவுக்குள் ஏற்படுத்த முடியாது என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தையின் மூலம் யுத்தம் என்ற இருளிலிருந்து மீளமுடியாது. பேச்சுவார்த்தைகளை நிறுத்தாமல் தொடர்ந்தும் நடத்துவதே இதன் முக்கிய அம்சமாகும். அதிர்ஷ்டவசமாக பேச்சுவார்த்தை மேசையில் நாம் எதிர்பாராத அளவு முன்னேற்றம் அடைந்துள்ளோம். துரும்பை தூணாக பெரிதுபடுத்தும் மனப்போக்கைக் கைவிட வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து பரஸ்பரம் உரிய மதிப்பளித்து மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும். இவ்விதம் உண்மையான சமாதானம் உதிக்கும் வேளையில் நாம் அனைவரும் வலுவான மனோநிலையில் சமாதானத்தின் மீது தடுமாற்றம் இன்றி பூரண நம்பிக்கை வைக்க வேண்டும்.

சமாதான
நடைமுறையைக்
கட்டிணைப்பதற்கான
செயலகம்

PIC:INEYCOM 2034

# இவர்கள் இசைக்கின்றார்கள்


மண்டபம் நிறைந்த கூட்டம். அடிக்கடி கரகோஷமும், விசிலடிச் சத்தங்களும் அதிரவைக்கின்றன.

குடாநாட்டில் இசைக்குழுக்களுக்கு என்று ஒரு பாரம்பரியம் இருக்கிறது. நம் ஊர்களில் கோவில் திருவிழாக்களின் உச்சக்கட்டம் ஓர் இசைநிகழ்ச்சியாகத்தான் இருக்கும். மண்டலேஸ்வரன், அருணா, ராஜன்ஸ், ராகம்ஸ், சாரங்கா, கவிதாலயா என்று ஒரு வரிசை இருக்கிறது. என்றாலும் 'பெயரே இல்லாத' ஒரு குழுவினர் அண்மைக்காலமாக ரசிகர்களை அசத்திக் கொண்டிருப்பதை அரிதான ஒரு சந்தர்ப்பத்தில் காணக்கிடைத்தது.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு குழுவாக இசை ரசிகர்களை அசத்திக்கொண்டிருக்கிறார்கள்.

சுமார் 15 பேர் ஒன்றாக மேடையில் தோன்றி இசைக்கின்றார்கள். அரங்கில் திரண்டிருக்கும் இதயங்கள் நனைகின்றன.

பெரும்பாலான பாடல்கள் இந்திய சினிமா பாடல்கள்தான்(இசைக் குழுககளின் பாணியே அதுதான்). அத்துடன ஈழத்துப் புரட்சிப் பாடல்களும் ரசிகர்களின் உணர்வுகளை ஆழமாய் பாதிக்கின்றன.



இசைக்குழுவின் நெறிப்படுத்துநர் பவன்

அரங்கில் இருப்பவர்களை இசைக் குழுவினருக்குத் தெரியாது. அனைவருமே (ஒருசிலரைத் தவிர) பார்வை இழந்தவர்கள். ஆக கரகோஷமும் விசிலடிகளும்தான் அவர்களை உற்சாகப் படுத்துகின்றன.

பாடுபவர்களாக மட்டுமல்ல, இசைக் கருவிகளுடனும் அவர்கள்தான் தோன்றுகிறார்கள்.

இந்த இசைக்குழுவை நெறிப்படுத்துகிறார் பவன் என்று பரவலாக அறியப்படும் சரவணபவன்.

பார்வைக்கு குள்ளமாக தோன்றும் அந்தப் பார்வை அற்ற கலைஞன் வசம் 'கீபோட்' இருக்கிறது. அசத்துகிறார் அவர்.

2002ஆம் ஆண்டில் நடைபெற்ற 'வெள்ளைப் பிரம்பு' தினத்திலும் பொங்கல் தின சிறப்பு நிகழ்ச்சியாக மானிப்பாயிலும், யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும் இரண்டு இசை நிகழ்ச்சிகளை மேடையேற்றி அனைத்து



இசைக்குழுவினர் குழாம்

# இதயங்கள் நனைகின்றன.....

உள்ளங்களிலும் தமக்கென நிலையான ஓர் இடத்தினைப் பிடித்துவிட்டது இந்த இசைக்குழு.

இந்த இசைக்குழுவில் அங்கம் வகிக்கும் க.தர்மசேகரம் (சேகர்) 27 வயது இளைஞன். முகமாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது கலைப்பீடத்தில் உளவியலைச சிறப்பாகக் கற்கும் 3ஆம் வருட மாணவனாக இருக்கின்றார். பாடகர், மிருதங்க கலாவித்தகர், எழுத்துத்துறையில் ஆர்வம் உடையவர். அறிவிப்பாளராகவும் விளங்குகின்றார். அரங்கை அதிரவைக்கும் அறிவிப்புக் குரல் அவருடையது.

மனித வாழ்க்கையில் ஒரு 'ரிதம்' உள்ளது. அந்த 'ரிதம்' மனங்களிலேயே உருவாகின்றது. இதன்மூலமே ரசனை அவனை ஆட்கொள்கின்றது. பல்வேறுபட்ட ரசனைகளுக்குள்ளும் 'இசை' எந்த மனிதனையும் ஈர்த்துக்கொள்ளும் சக்தி உடையது. 'வாயைத்திறந்து ஏதோ ஒரு பாடலைப் பாடாத மனிதனே இல்லை.'

கனகரட்ணம் மகாவித்தியாலய ஆசிரியரான கல்விமாணி ஆ.ரவீந்திரன் (வயது 39) பாடகராக விளங்குகின்றார். அவரைப்பற்றி இங்கு விளம்பரம் அவசியமல்ல. அந்தளவுக்கு பிரபலமானவர். தனது மதுரக்குரல் வளத்தினால் எல்லோரையும் ஈர்த்துவருபவர்.

சுயதொழில் முயற்சியான கதிரை பின்னுதல், கோழிவளர்த்தல் ஆகிய தொழிலை மேற்கொள்ளும் ஆ.மகேந்திரன் (வயது 45)சிறந்த பாடகராக விளங்குகின்றார்.

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜோ.ஜெயசீலன் (வயது38) சுயதொழில் முயற்சியாளர், பாடகர் குழாத்தினைச் சேர்ந்தவர்.

மூன்று மொழிகளிலும் சரளமாக உரையாடக்கூடியவர் கா.விஜயராஜசிங்கம் (வயது48) கொடிகாமத்தைச் சேர்ந்த இவர், தனியார் கல்வி நிலையத்தில் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றுகின்றார். இவர் சிறந்த பாடகராக வளர்ந்துள்ளார்.

கிறிஸ்தவ நாகரிகத்தைச் சிறப்பாகப் பயிலும் கலைப் பீட 2ஆம் வருட மாணவனான ப.கபிலஸ்(வயது25) வளர்ந்துவரும் பாடகர்.

உயர்தர வகுப்பு மாணவனான எஸ்றொசான்(வயது 25) காரைநகரைச் சேர்ந்தவர். இவர்களோடு இணைந்து பாடல்கள் பாடுகின்றார்.

இனிமையான குரல் வளங்கொண்ட பெண் பாடகிகள் இருவரும் இந்தக் குழுவில் இடம்பெறுகிறார்கள். கண்டியில் பிறந்து வளர்ந்து, தற்போது மருதனார்மடம் பெண்கள் விடுதியில் வசிக்கும் எஸ்.ஜோதி (வயது 40) கர்நாடக சங்கீதம் முறையாகப் பயின்ற ஒரு பாடகி.

நவீல்ட் பாடசாலையின் இசை ஆசிரியையான திருமதி கே.ஸ்கொலஸ்ரிகா(வயது 38) கொழும்புத்துறையைச் சேர்ந்தவர். வயலின் இசைப்பாளர். அத்தோடு பாடகியாகவும் விளங்குகின்றார்.

இந்த இசைக்குழுவிற்கு முதுகெலும்பாக விளங்குகின்றவர் வே.சரவணபவன். இசைக்குழுவின் நெறிப்படுத்துநர் பவன் என்று அழைக்கப்படும் இவர் கீபோட், வயலின், மிருதங்கம் அனைத்தும் இசைப்பவர். வன்னியில் 'நவம் அறிவுக் கூடத்தில்' ஒகன் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றியவர். கர்நாடக சங்கீதம் முறையாகப் பயின்றவர். இந்த இசைக்குழுவின் இயக்கமே இவரில் தான் தங்கியுள்ளது.

இந்தக் கலைஞர்களில் பாடல் பாடுபவர்கள் அனைவரும் இனிமையான குரல்வளம் கொண்டவர்கள். ரசனையுடன் பாடல் வரிகளைத்தரும் இவர்கள், மனவேட்டில் பாடலை எழுதி வைத்திருப்பவர்கள்.

இசைக்கருவிகளை இயக்குவதில் முழுமையான பயிற்சி இவர்களில் எல்லோரிடமும் இல்லை. ஆனாலும், அதை இயக்குவதில் மிகுதியான




ஆர்வம் நிறையவே கொண்டவர்கள். சிலர் முறையாக கர்நாடக சங்கீதம் பயிலவில்லை என்றாலும் 'சுருதி' பிசகாமல் பாட்டுக்களை இனிமையாகப் பாடுவதில் தேர்ச்சி பெற்றிருக்கும் இவர்களிடம் இயல்பாகவே பாடும் ஆற்றல் இழையோடி இருக்கின்றது.

ஓர் இசைக்குழுவிடம் இருக்க வேண்டிய அனைத்து வளங்களும் அவர்களிடம் இல்லாதபோதிலும், இனிமையான குரல் வளம், மனங்களை ஈர்க்கும் திறன், இசை நிகழ்ச்சியை சிறப்பாக மேடையேற்றும் பாங்கு, விறுவிறுப்பாக நிகழ்ச்சியைக் கொண்டு செல்லும் துடிப்பான ஆற்றல் என்பன நிறையவே தெரிகிறது.

இன்று யாழ்ப்பாணத்தில் பல இசைக் குழுவினர் தம்மை பல்வேறு வகையிலும் விளம்பரப்படுத்தி வளர்த்துக்கொண்டு வருகின்றனர். ஆனால், விளம்பரம் எதுவுமே இல்லாமல் ஓர் இசை ஊற்று இவர்களிடம் பொங்கிப் பிரவாகிக்கின்றது. அது இந்த யாழ். மாவட்டத்தைத் தாண்டி முழு நாடுக்கும் - முழு உலகுக்குமே - செல்ல வேண்டும்.

உதயன் ஆசிரிய பீடத்தினருடன கலந்துரையாடியபோது இந்தக் கலைஞர்கள் எல்லோருமே கூட்டாக விடுத்த வேண்டுகோள் இதுதான்.

"ஊரெல்லாம் இசை பரப்ப நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம். எங்கள் வாழ்வாதாரமாக இந்த இசை குழுவை கட்டி வளர்ப்பதே எங்கள் ஒரே இலக்கு. அதற்கு குடாநாட்டு சமூகத்தின் ஏகோபித்த ஆதரவை நாடி நிற்கின்றோம். பொது நிகழ்ச்சிகள், பண்டிகைகள் எதற்கும், எங்கும் இசைவிருந்து படைக்க எங்களால் இயலும். எங்களுடனான தொடர்புகளுக்கு யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு வாருங்கள். நாங்கள் உங்களுக்காகக் காத்திருக்கிறோம்....."

இருளாகிவிட்ட உலகில் ஒளி தேடும் இந்தக் கலைஞர்களின் விண்ணப்பத்தை 'உதயன்' வாசகர்கள் முன் விட்டுவிடுகிறோம்....



பாடகர்கள் ஜெயசீலன், மகேந்திரன்



பாடகர் ரவீந்திரன், அறிவிப்பாளர் சேகர்



பாடகர்கள் கபிலஸ், விஜயராஜசிங்கம்



பாடகிகள் திருமதி ஸ்கொலஸ்ரிகா, ஜோதி



யாழ். விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள்

## தேவை

- ஸ்கிறீன் பிறின்டிங்
- பைண்டிங் வேலை
- வரவேற்பாளரும் ஒப்புநோக்குநரும்
- பொது வேலை

என்பவற்றிற்கு ஆள்கள் தேவை
சுயவிவரங்களுடன் நேரில் வரவும்.
676, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(14569)



## ஸ்கிறீன் பிரின்டிங் செய்முறை பயிற்சி வகுப்புகள்

ஓர் அரிய சந்தர்ப்பம்!



மிகக்குறைந்த முதலீட்டுடன் வீட்டிலேயே ஆரம்பிக்கக்கூடிய சிறந்த தொழில் ஸ்கிறீன் பிறின்டிங்.

தென் தமிழகத்திலிருந்து அச்சுக்கலை நிபுணர் R.பரதன், D.P.Tech., வருகை தந்துள்ளார். பிரிவு II இற்கான வகுப்புகள் 18.02.2003 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாக உள்ளதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

Career Com. Institute
79, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
0777706334 - இணைப்பாளர்.

(14566)

"Art Does Not Make The Man, The Man Makes Art"


## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்லத்துரை பரமேஸ்வரன்

(சாமி பல்பொருள் களஞ்சியம்)

ஜனனம் 30.12.1951 அஸ்தமனம் 26.02.2002

குடும்பத்தின் குலவிளக்கே!
கொடியநோய் கொண்டுபோய்
ஓராண்டானதோ! என்றும் அகலாது உம் நினைவு.

சாமி பல்பொருள் களஞ்சியம்,
யாழ்ப்பாணம். (14565) உரிமையாளர், ஊழியர்கள்.

## துயர் பகிர்கின்றோம்



அமரர்
### இ.இரத்தினகோபாலு

(முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி)

எங்கள் குடும்ப நண்பராய், நல் அன்பராய் வாழ்ந்த தங்கள் பிரிவு எம்மை வாட்டுகிறது. அன்னாரைப் பிரிந்து துயருறும் துணைவியார், பிள்ளைகள், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆன்மா இறை சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

இந்திரா கபே, நெல்லியடி. (C/26558) நா.தெய்வேந்திரம் குடும்பத்தினர்.

## பெற்றோர் சந்திப்பு

வடமராட்சி,பெப்.16

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் தரம் 6 வகுப்புக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் பெற்றோர் சந்திப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

(எ-173)

## சித்தாந்த பண்டிதர் பட்டப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்.சைவபரிபாலனசபையினால் வருடாந்தம் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச, பாலபண்டிதர், பண்டிதர் பட்டப்பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளன.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள்யாவும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

(எ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.16

காரைநகர் மணிவாசகர் சபையின் 63 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் பண்டிதர் மு.க.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ-10-73)

## பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

சுன்னாகம் மயிலணி சிவன் அறநெறிப் பாடசாலையில் இலவசமாக பண்ணிசை வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சுமார் 40 மாணவர்கள் இந்த வகுப்பில் பங்கு பற்றி பயன் பெற்று வருகின்றனர். (எ)

## மீள் குடியமர்வு கொடுப்பனவுப்பணி அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,பெப்.16

குடாநாட்டில் மீளக்குடியமரும் மக்களுக்கு 25ஆயிரம் ரூபா மீள்குடியமர்வுக் கொடுப்பனவை வழங்கும் பணி எதிர்வரும் 21ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கின்றது.

யாழ்.செயலகத்தில் அன்று முற்பகல் 10 மணிக்கு இந்த அங்குரார்ப்பணம் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அகதிகளுக்கான ஐநா.தூதரக அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

முதற் கட்டமாக தென்மராட்சியில் 400 குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படும் அடுத்த கட்டமாக கோப்பாய் பிரதேசத்துக்கு கொடுப்பனவு வழங்கப்படும். (ஒ-3)


## OFFICE PREMISES
### Rent / Lease

A Leading international Accountancy Firm requires suitable premises for their office in Jaffna.

A spacious house approx. 2500 sq. ft. with all facilities in a central location in the city will be suitable.

*Give full details with expected rent to:*

**P.O.Box 1800,**
**Colombo - 10.**

(C/26555)


## கண்ணீர் அஞ்சலி



12.02.2003 புதன்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்ப நண்பர்

### அமரர் இரத்தினகோபாலு

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது பிரிய பத்தினி பத்மாசனி அக்கா, பிள்ளைகள் நவரங்கன், பவா மற்றும் தாயார், சகோதரர், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மொடோன் ஸ்ரோர்ஸ்,
நெல்லியடி. (சி-26559) ச.அன்ரன் செல்வராஜா குடும்பத்தினர்.

## முதலாவது வருட நினைவஞ்சலி

மண்ணில் 14 - 10 - 1933



விண்ணில் 27 - 02 - 2002

### அமரர் முத்துலிங்கம் பாலசுப்பிரமணியம் B.Sc.

(ஓய்வுபெற்ற ஆசிரியரும், முன்னாள் பதிவாளரும்)

திதி - 16.02.2003

ஆண்டு ஒன்றாகிவிட்ட போதிலும்
ஆறவில்லை உங்கள் நினைவு எம் நெஞ்சினிலே!

"விஜயமஹால்"
நவாலி வடக்கு, மானிப்பாய். (14563) உங்கள் நினைவுடன் வாழும்: குடும்பத்தினர்.

## வடமராட்சி லயன்ஸ் கழகம்
### துயர் பகிர்கின்றோம்

12.02.2003 அன்று காலஞ்சென்ற எமது கழக அங்கத்தவர்

### லயன் இ.இரத்தினகோபாலு

அவர்களது மறைவினையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C/26563) வடமராட்சி லயன்ஸ் கழகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி மகாலஷ்மி நடேசபிள்ளை

யாழ்ப்பாணம், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் கம்பர்மலை, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலஷ்மி நடேசபிள்ளை அவர்கள் 13.02.2003 அன்று வியாழக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் கம்பர்மலையைச் சேர்ந்த நடேசபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் லண்டனில் வசிக்கும் சுதாகரன், கமலாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி சுபாஜினி சுதாகரன் அவர்களின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் · தங்கம்மா ஆகியோரின் மூத்த மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா ஆகியோரின் மருமகளும் மகேந்திரசிங்கம்(கொழும்பு), திருமதி மகாதேவி, கணேசகுமார்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி சரஸ்வதி வைத்திலிங்கம்(கம்பர்மலை), ஆறுமுகவடிவேல்(கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
திரு.திருமதி சுதாகரன் (லண்டன்),
திரு.கமலாகரன் (லண்டன்)
தொலைபேசி: 02088417806
கைத் தொலைபேசி: 07951958492

(C/26564)


## இலங்கையில் முதன் முறையாக..

நறுமணம் குடியிருக்கும் இடத்தில் ஸ்ரீலஷ்மி கடாட்சம் பூரணமாக கிடைக்கும் தேவி குடிகொண்டு இருக்கும் தூர்கணங்கள் கிடையாது.
-நன்றி சுகிசிவம், இந்தியா

உங்கள் இல்லத்தில் அஷ்டலக்ஷ்மி குடிகொண்டு, செல்வம் அளித்திட வாங்குவீர், தெய்வீக நறுமணம் தரும்...

நியூ ஜெனரேசன் வாசனை
### பூஜா ஆயில்




New Generation® Perfumed **Puja Oil**™

Spreads Divine Fragrance on Lighting the Lamp,
Best companion for Meditation & Yoga

நல்லெண்ணெய், ஒன்பது சமித்துக்கள் மற்றும் வாசனை திரவியங்கள் சேர்ந்தது.

- எரியும் விளக்கில் சிறிதளவு பூஜா ஆயில் ஊற்றி தீபம் ஏற்ற தோஷங்கள் நிவர்த்தியாகும், செல்வம் பெருகும்.
- ராகுகால பூஜை, ஹோமம், நவக்கிரகம் சாந்தம் அடைவதற்கு ஏற்ற பூஜை எண்ணெய்.
- மன அமைதிகான, தியானம் செய்வதற்கு ஏற்றது.

இல்லத்தில் பூஜைகளுக்கு உகந்தது.

இலங்கை முழுவதும் விநியோகஸ்தர்கள் தேவை

Sole Agent in Sri Lanka
**Bawani Trading,** Colombo - 6.
Ph: 365024, 072- 429691 E-mail : vbawani@sierra.lk

தெய்வீக நறுமணம் நாள்தோறும் ! செல்வம் எப்போதும் !!

# கொலம்பிய அதிபரை குறிவைத்து தாக்க ஒளித்து வைத்திருந்த குண்டுகள் வெடிப்பு!

## பொலீஸார் உட்பட 16 பேர் பலி; கட்டடங்கள் தகர்ந்தன!

நிவ்வா,பெப்.16

கொலம்பியாவின் நிவ்வா என்ற நகரத்தில் இடம்பெற்ற சக்திவாய்ந்த குண்டு வெடிப்பில் ஒன்பது பொலீஸார் உட்பட 16 பேர் உயிரிழந்தனர்.

கொலம்பிய ஜனாதிபதி உர்பியைக் கொல்வதற்கு திட்டமிட்ட ஒரு சதித்திட்டம் தொடர்பாக கிடைத்த தகவலையடுத்து வீடு ஒன்றைப் பொலீஸார் முற்றுகையிட்ட சமயம், அதற்குள் இருந்து சக்திவாய்ந்த குண்டுகள் வெடித்தன என்று கூறப்படுகிறது. இதனால், பல வீடுகள் தரைமட்டமாகின. குண்டு வெடித்த இடத்தில் பாரிய குழி ஏற்பட்டிருக்கிறது.

ஒரு குண்டு அல்லது ஒன்றாகச் சேர்த்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் குண்டுகள் வெடித்ததால் இந்த அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது.

இடதுசாரி தீவிரவாதிகள் இந்தக் குண்டு வெடிப்பை நடத்தியிருக்கின்றனர் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி அல்வரோ உர்பி பயணஞ்செய்யும் விமானத்தை இலக்கு வைத்துத் தாக்குவதற்காக இந்த வெடிபொருள்கள் பயன்படுத்தப்படவிருந்தன என்று பொலீஸார் கூறுகின்றனர்.

'கொலம்பியாவில் புரட்சிகர இராணுவம்' எனப்படும் தீவிரவாதிகள் இத்தாக்குதலுக்குத் திட்டமிட்டிருந்தனர் என்று கூறப்படுகிறது.


குண்டுவெடித்த இடத்தில் ஆழக்குழி

பாதுகாப்பு மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி உர்பி நேற்று சனிக்கிழமை நிவ்வா நகருக்கு வரவிருந்தார். (ஐ)

## மார்பகத்தில் மாற்றம் செய்ய தடை!

பிரஸல்ஸ்,பெப்.16

பதினெட்டு வயதுக்குட்பட்ட பெண்கள் செயற்கை மார்பக அறுவைச் சிகிச்சை செய்துகொள்வதற்கு ஐரோப்பிய நாடாளுமன்றம் தடைவித்திருக்கிறது.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் பெண்கள் தங்கள் மார்பகத்தின் அளவை மாற்றிக்கொள்வதற்கான அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டு இருந்தது.

ஆனால், இதனால் ஏற்படும் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு இப்போது ஐரோப்பிய நாடாளுமன்றம் இந்த தடை உத்தரவை விடுத்திருக்கிறது.

இந்த உத்தரவுக்கு இளம் பெண்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.




ஈராக்மீதான போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனிலுள்ள முஸ்லிம் சங்கத்தினால் வெளியிடப்பட்ட சுலோக அட்டைகளையே படத்தில் காண்கிறீர்கள்.

யுத்தத்துக்கு எதிரான எதிர்ப்பு அலைகள் வியட்நாம் போருக்கு பின்னர் மீண்டும் இப்போதுதான் தீவிரமாக எழுந்திருப்பதாக செய்தியாளர்கள் கூறுகின்றனர். (ஐ)

## பாக்.பிரதமரின் ஈரான் பயணம் ரத்து

இஸ்லாமாபாத்,பெப்.16

பாகிஸ்தான் பிரதமர் ஜபருல்லா ஜமாலி திங்கட்கிழமை தொடங்கி 3 தினங்கள் ஈரானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருந்தார். அத்திட்டத்தை தற்போது அவர் ரத்துச் செய்துவிட்டார்.

செனட் தேர்தல் உட்பட பல முக்கிய பணிகள் இருப்பதாகவும், இதனால் தனது பயணத்தை அவர் ரத்துச்செய்துவிட்டதாகவும் அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

1999 ஒக்ரோபரில் பாகிஸ்தானில் ராணுவப் புரட்சி நடந்தது. அப்போது செனட் இயக்கம் நிறுத்திவைக்கப்பட்டது. அதன்பின் இப்போதுதான் அதற்குத் தேர்தல் நடக்கவிருக்கிறது.

எதிர் வரும் 24 முதல் 27 ஆம் திகதிவரை தேர்தல்நடக்கும் குவைத், பஹ்ரைன், கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்கு சமீபத்தில் ஜமாலி விஜயம் செய்திருந்தார். (ஐ)



தாய்லாந்தில் அயுத்தயா என்ற இடத்தில் காதலர் தினத்தன்று திருமணம் செய்து கொண்ட ஜோடி. மணமகள் சுகாடாவை முத்தமிடுகிறார் மணமகன் சுதேவ்.

### ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கோரிக்கையை ஏற்று

# பேரழிவு ஆயுதங்களை தடை செய்தார் சதாம்!

பக்தாத்,பெப்.16

பேரழிவு ஆயுதங்களின் உற்பத்தி மற்றும் இறக்குமதியைத் தடைசெய்யும் ஆணையை ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் வெள்ளிக்கிழமை பிறப்பித்தார்.

அமெரிக்கா, பிரிட்டன் உட்பட ஐ.நா. பாதுகாப்புச் சபையும் விடுத்த எச்சரிக்கைக்குப் பணிந்து இந்த ஆணையைப் பிறப்பித்துள்ளார் சதாம். அதன்மூலம் ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுக்கும் ஆபத்து இப்போதைக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

பேரழிவு ஆயுதங்களைச் சட்டரீதியாக ஈராக் தடைசெய்ய வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை நீண்டகாலமாகக் கோரிவந்தது. அணு குண்டுகள், இரசாயன மற்றும் நச்சுக் கிருமி குண்டுகளை ஈராக் தயாரிக்கக் கூடாது; இரகசியமாக அந்தக் குண்டுகளை ஈராக் தயாரித்து வைத்திருந்தால் அவற்றை அழித்துவிடவேண்டும் என்று ஐ.நா.பாதுகாப்புச் சபையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால், தம்மிடம் அத்தகைய ஆயுதங்கள் இல்லை என்று ஈராக் கூறிவருகிறது. எனவே, அத்தகைய பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கில் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய ஐ.நா. ஆயுதச் சோதனைக் குழுவினர் ஈராக்கில் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

ஆனால், இரகசியமாக பேரழிவு ஆயுதங்களை ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் பதுக்கிவைத்துள்ளார் என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டிவருகிறது. ஈராக்மீது படையெடுக்கும் திட்டத்துடன் வளைகுடாப் பகுதியில் லட்சக்கணக்கான வீரர்களையும் நவீன ஆயுதங்களையும் குவித்துள்ளது அமெரிக்கா.

ஈராக்மீது போர் தொடுக்க ஆதரவு தெரிவிக்கவில்லையெனினும், பேரழிவு ஆயுதங்கள் இருந்தால் அவற்றை அழித்துவிடுமாறு பிரான்ஸ், ரஷ்யா உட்பட பல நாடுகள் அதிபர் சதாமிடம் வலியுறுத்திவருகின்றன.

இந்நிலையில், பேரழிவு ஆயுதங்களைத் தடைசெய்ய உத்தரவு பிறப்பித்துள்ளார் அதிபர் சதாம்.

தனிநபர்கள், தனியார் நிறுவனங்கள், தனியார் மற்றும் அரச இணைந்த கூட்டுத்துறை நிறுவனங்கள் ஆகியவை, அணுகுண்டுகள், இரசாயனக் குண்டுகள், நச்சுக்கிருமிக் குண்டுகள் போன்ற பேரழிவு ஆயுதங்களை இறக்குமதி செய்வதும் உற்பத்தி செய்வதும் தடைசெய்யப்படுகிறது. அரசின் அனைத்து அமைச்சகங்களும் இந்த ஆணையை அமுல்செய்யவேண்டும்; அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். இந்த ஆணையை மீறும் அனைவரையும் தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய சட்டம் ஒன்றை இயற்றுவது குறித்து ஆலோசிக்க ஈராக் நாடாளுமன்றம் கூட இருந்தநிலையில், அதிபர் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ஐ)

## மனித குளோனிங்கை எதிர்க்கிறார் கலாம்!

மும்பை,பெப்.16

குளோனிங் முறையில் மனிதர்களை உருவாக்குவதை தாம் எதிர்ப்பதாக இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கூறினார். மும்பையில தென் இந்திய கல்வி ஸ்தாபனம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் மாணவர்களுடன் அவர் கலந்துரையாடினார். மனித மூளையைவிட ஆயிரம் மடங்கு சக்தி படைத்த கம்பியூட்டர் 2029 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுவிடும் என்றார். ஆனால், மூளையை உங்களால உருவாக்க முடியுமா என்று அவர் கேள்வி எழுப்பினார்.

போர் இன்றி இருக்க முடியாதா என்று ஒருவர் கேட்டார். போருக்கு அடிப்படைக் காரணம் வறுமையே. வறுமையை அகற்றினால் போர் இருக்கவே இருக்காது. மத, சித்தாந்தக் கருத்து வேறுபாடுகளும் பொருளாதாரப் பிரச்சினைகளும்தான் போருக்குக் காரணம். இந்த மூன்றும் ஒன்று சேர்ந்து வரும்போது பிரச்சினை சிக்கலாகி விடுகிறது.

- என்றார் கலாம். (ஐ)

# பேரழிவு ஆயுதங்களை களைந்தே தீருவோம்!

## அமெரிக்க அதிபர் சூளுரை

வாஷிங்ரன்,பெப்.16

ஈராக்கிடம் உள்ள பேரழிவு தரும் ஆயுதங்களை ஏதாவது ஒரு வழியில களைந்தே தீருவோம் என அமெரிக்க அதிபர் புஷ் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் புலனாய்வு அமைப்பின் தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை அவர் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

[illegible] ஆயுதங்களை ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் எனவே, அவர் பதுக்கிவைத்துள்ள ஆயுதங்களை [illegible]யாக களைவது என்றும் அமெரிக்கா மிக உறுதியாக உள்ளது.


[illegible] ஹுசைன்.

[illegible] ஏற்கனவே அவர் பயன்படுத்தினார். உலகை ஏமாற்றவிதை [illegible] இப்போதும் அதைத் தொடர்ந்து செய்துவருகின்றார். [illegible] பயங்கரவாத அமைப்புகளுடன் [illegible] நெருங்கிய தொடர்பு உள்ளது என்றும் புஷ் சொன்னார்.

ஈராக் ஆயுதங்கள் தொடர்பாக ஐ.நா. ஆயுத சோதனைக் குழு வெளியிட்ட அறிக்கையை மையமாக வைத்து ஐ.நா. பாதுகாப்புச் சபை விவாதம் நடத்தியுள்ளது.

இந்நிலையில், அதற்கு பதிலளிக்கும் விதமாக மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார் புஷ் பயங்கரவாதத்தை [illegible] முறியடிக்க மேற்கொள்ள [illegible] நடவடிக்கைகளை [illegible] விவரித்தார். (ஐ)




தென்கொரியத் தலைநகர் சியோலில் நடந்த போருக்கு எதிரான பேரணியில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். பேரணியில் காணப்பட்ட சுலோகங்கள் இவை.

# மக்கள் வங்கி அறிவித்தல்

## அடைவு நகை ஏல விற்பனை
## (பருத்தித்துறை கிளை)

**15.02.2003 இல் மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் நடைபெற்ற மேற்படி ஏல விற்பனை தொடர்ந்தும் இன்றையதினம் 16.02.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து பகல 1 மணி வரை நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.**

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**வட பிராந்தியம்.**
**2003.02.16** (சி-26571)

## ஞானோதயம் திருமறை பயிற்சியக திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.16

மன்னார் தீவகத்தில் யாழ் மாகாண அமலமரித்தியாகிகளால் புதிதாக அமைக்கப்பட்ட 'ஞானோதயம்' என்னும் திருமறை பயிற்சியகம் நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட இருக்கின்றது.

மட்டு - திருமலை மறை மாவட்ட ஆயர் அதி.வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை பயிற்சியகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

அன்று மாலை 5 மணிக்கு விசேட திருப்பலி இடம்பெறும்.

இந்நிறுவனத்தில் யாழ், கொழும்பு, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற அமலமரித் தியாகிகளின் மாகாணங்களைச்சேர்ந்த ஆரம்பநிலை நவசந்நியாச மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுவர் தேசிய ரீதியாக பொதுநிலையினருக்கு ஆன்மீக, வேதாகம பயிற்சிகளை வழங்கும் நிறுவனமாகவும் இது செயற்படும்.

(ம-3)

# அந்தியேட்டி அறிவித்தலும் நன்றி நவிலலும்



## அமரர் செகராஜரத்தினம் ஜெகநாதன

*(மொன்றியல் திருமுருகன் ஆலய முகாமையாளர்)*

தோற்றம் 29.07.1937 மறைவு 17.01.2003

திதி : 16.02.2003

*"மலர்வும் உதிர்வும் காலத்தின் கட்டளை ஆனால் நீங்கள் எம் நெஞ்சத்தில் நீறாக வாழ்கின்றீர்கள்"*

**அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் மொன்றியலில் இன்று நடைபெறுகின்றன. அதனையொட்டி எமது இல்லத்தில் இன்று (16.02.2003) காலை 11 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்திப் பூசையிலும் அதனைத் தொடர்ந்து சந்நிதி கோவிலில் நடைபெறும் விஷேட அபிஷேகத்திலும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் அன்னதான நிகழ்விலும் பங்குபற்றுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும அழைக்கின்றோம்.**

*கொத்தியகாடு,*
*தொண்டைமானாறு.* (14572)

பிரிவால் துயருறும்
சி.சிவானந்தம் குடும்பத்தினர்.

# செல்வி துஷ்யந்தி இரவீந்திரா
# அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்வுக்கான
# நன்றி நவிலல்



மங்களகரமான தைப்பூச நன்னாளில் (19.01.2003) வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்ற எமது அருமை மகள் துஷ்யந்தியின் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்விற்கு வருகை தந்தவர்களுக்கும் நிகழ்வு சிறப்புற பல்வேறுவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

அரங்கேற்றம் குறித்த திகதியில் நடத்த முடியுமா என்று கலங்கிய நிலையில் இருந்த எமக்கு தைரியமூட்டி வல்லமை தந்து இறையருளாசி வழங்கிய எமது முருகபக்தர் பழநிமாமா அவர்களின் பாதங்களை முதற்கண் நன்றிப்பெருக்கோடு வணங்குகின்றோம்.

அன்றையதினம் நிகழ்வினைக் கண்டுகளிக்கும் ஆர்வத்துடன் பெரும் திரளாக வருகை தந்து தங்களது கலாரசனையை வெளிப்படுத்திய அனைவருக்கும் எமது நன்றிகள். அரங்கேற்ற நிகழ்வினைப் பார்க்கவேண்டும் என்ற ஆர்வத்தினால் பல பெரியோர்களும் கலாரசிகர்களும் மண்டப இருமருங்கிலும் நின்றபடியே பார்வையிட்டார்கள். மண்டபத்தில் நிரம்பி வழிந்த சனநெருக்கடியினால் அவர்களுக்கு ஏற்பட்ட எதிர்பாராத இந்த அசௌகரியங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கோருகிறோம்.

மங்கள விளக்கினை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்த பிரதம விருந்தினர் பத்மஸ்ரீ அடையாறு கே.லக்ஷ்மணன் அவர்கள், சிறப்பு விருந்தினர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள், கௌரவ விருந்தினர்களான பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயா அவர்கள், திருமதி சாந்தினி சிவநேசன் அவர்கள் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

அரங்க பூஜையை சிறப்பாக ஆற்றிய துர்க்கை அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சுந்தரேஸ்வரக்குருக்கள் அவர்களுக்கும், இணுவில் காயத்ரிபீடம் பிரம்மஸ்ரீ சோமசுந்தர சர்மா குருக்கள் அவர்களுக்கும் மற்றும் பூஜை நிகழ்வில் பங்குகொண்ட அனைவருக்கும் வணக்கத்துடன் கூடிய நன்றிகள்.

அருளாசி வழங்கிய நல்லை ஆதீன இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு எமது பணிவான வணக்கங்களையும் நன்றியினையும் சமர்ப்பிக்கின்றோம்.

அருளாசி வழங்கவிருந்த அருட்திரு செல்வராசா அடிகளார் வேறோர் நிகழ்விற்கு செல்லவேண்டியிருந்தும் எமது அழைப்பினை மதித்து வருகை தந்து நேரில் வந்து வாழ்த்திச் சென்றமைக்காக பேராயர் இல்லப் பெரியோர்க்கும் அருட் சகோதரிகளுக்கும் எமது வணக்கங்களையும் நன்றியினையும் தெரிவிக்கின்றோம்.

நேரில் வரமுடியாமையால் நல்லாசிகளைத் தெரிவித்த துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும், வாழ்த்துப் பாமாலை அனுப்பிய அருட்கவி விநாசித்தம்பி ஐயா அவர்களுக்கும், மேலும் அரங்கேற்ற வெளியீட்டு மலரினுக்கு ஆசியுரைகளையும் வாழ்த்துரைகளையும் வழங்கிய பெரியோர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

ஆரம்ப உரையை நிகழ்த்தியவர் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள். பிரதம விருந்தினரை முறையாக அறிமுகம் செய்து கனதியான ஒரு தொடக்கவுரையை ஆற்றியதோடு நிகழ்வின் இறுதிவரை எம் குடும்பத்தில் ஒருவர் போன்று பங்குகொண்டு வழிநடத்திய பேராசிரியரை நன்றிப் பெருக்கோடு பணிகின்றோம்.

நிகழ்வினைத் தலைமைதாங்கி உரைஆற்றியவர் நடனத் துறைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள். எமக்கு எவ்வழியில் உதவலாம் என்று அன்போடு கேட்டு, தைரியமூட்டி தனது குடும்பத்தில் ஒருவரது அரங்கேற்றம் போன்று நிகழ்வு சிறப்பிக்க மனதார விரும்பிய பெரியவர். அவர்களுடைய தலைமையில் அரங்கேற்றம் நிகழ்ந்ததையிட்டு பெருமை கொள்கிறோம். அன்புடனும் பணிவுடனும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்தவர் நடனத்துறை வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியவரான துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள். அன்றைய தினம் பல முக்கிய கருமங்கள் இருந்த போதிலும் எமது அழைப்பினுக்கு மதிப்பளித்து வருகை தந்து சிறப்புரை நிகழ்த்தி சிறப்பித்த பெருமகனாருக்கு எமது மனம் நிறைந்த நன்றிகள்.

யாழ்ப்பாணத்திலும், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் பரதநாட்டிய வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றிவரும் எம்மண்ணின் நடன ஆசிரியர்கள் பலருக்கு குருவாயமைந்தவர் அரங்கேற்ற நிகழ்வின் பிரதமவிருந்தினர் பத்மஸ்ரீ அடையாறு கே.லக்ஷ்மணன் அவர்கள். முதல்நாள் மாலை இந்தியாவில் அரங்கேற்ற நிகழ்வொன்றினில் பங்குபற்ற வேண்டியிருந்தும் எமது அழைப்பினுக்கு மதிப்பளித்து இம்மண்ணில் தனது பாதத்தைப் பதித்து அரங்கேற்ற நிகழ்வினை ஆரம்பித்து வைத்து சிறப்பித்தார். பல கால இடைவேளையின் பின்னர் நாட்டியம், நட்டுவாங்கம், சங்கீதம், மிருதங்கம் என்ற பல்கலைகளில் விற்பன்னரான ஒரு பெருங்கலைஞரின் யாழ்ப்பாண வருகைக்கு எமது புதல்வியின் அரங்கேற்ற நிகழ்வு காரணமாய் அமைந்தமையையிட்டு நாம் பெருமையடைகிறோம். அவருக்கு எமது குடும்பத்தின் சார்பாகவும் நாட்டிய ஆர்வலர்கள் சார்பாகவும் யாழ் மக்கள் சார்பாகவும் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இம்மண்ணின் கலைஞர்களின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஸாகித்ய ஸாகரம் இயலிசைவாரிதி பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் அவர்கள் கௌரவ விருந்தினராகக் கலந்து அரங்கேற்ற நிகழ்வின் சிறப்புக்களை தனதுரையில் குறிப்பிட்டார். ஈழத்து நாட்டிய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகின்ற மூத்த கலைஞரான இவர் எமது கலைப்பணிக்கு என்றும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற ஒரு பெருங்கலைஞர் பரமரசிகர். அரங்கேற்ற நிகழ்வில் பங்குபற்றவேண்டும் என்பதற்காக இந்தியாவில் வேறு அலுவல்கள் இருந்த போதிலும் அவற்றைத் தவிர்த்து தந்தைபோல் வந்திருந்து அரங்கேற்றத்தை சிறப்பித்தார். கலைஞர்களை மனங்குளிர வாழ்த்தும் ஐயா அவர்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றிகள்.

அணிசெய் கலைஞர்களாக ஒன்றிணைந்தவர்கள் எவ்வாறு அரங்கேற்றத்தின் வெற்றிக்கு பங்களித்தார்கள் என்பதை பார்வையாளர்களே அறிவர்.

தனது இசைப்புலமையின் மூலம் இசைநுட்பங்களை உட்புகுத்தி நாட்டியம் ஆடுபவர் பாவத்தை இலகுவில் வெளிப்படுத்தக்கூடியவாறு பாவத்துடன் பாடி அரங்கச்சூழலில் தெய்வீக அநுபவத்தை உணரவைத்த இசைக்கலைமாணி செல்வன் தவநாதன் றொபேட்டின் திறமையினைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. நிகழ்ச்சி சிறப்புற வேண்டும் என றொபேட் அவர்கள் ஒத்திகையின்போது எடுத்த முயற்சிகளையும் ஒத்துழைத்த பாங்கினையும் நன்றிப் பெருக்கோடு நினைவிற் கொண்டு எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

நிகழ்வு சிறப்புற வேண்டும் என்ற ஒரே சிந்தனையில், தனது காத்தில் ஏற்பட்ட தாக்கத்தையும் பொருட்படுத்தாது, லயஞானவாரிதி திரு எஸ். மகேந்திரன் அவர்கள் மிருதங்கத்தினூடாகச் செய்த சாதனைகள் அவரின் வித்துவத்தை வெளிப்படுத்தியது. உடல்நலங் குன்றியிருந்த நிலையிலும், ஒத்திகையின்போதும் நிகழ்வின்போதும் அவர் தந்த ஒத்துழைப்பை நினைந்து மனம் நிறைந்து எமது நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

வயலினிசை வழங்கிய செல்வி பாக்கியலஸ்மி நடராசா (முதுதத்துவமாணி - இசை) எமது சகோதரி போன்று ஆரம்பம் முதற்கொண்டே எமது மகளின் அரங்கேற்ற நிகழ்வில் பங்களிப்பு செய்ய வேண்டும் என்று கூறியதன்படியே ஒத்துழைப்பு நல்கினார். அவர்களுக்கு எமது அன்பு கனிந்த நன்றிகள்.

புல்லாங்குழல் இசைத்த நாதஸ்வரக் கலைஞர் திரு இ.வசந்தன் அவர்கள் நாட்டியநிகழ்விற்கு மட்டுமன்றி இசைவேளையின்போதும் குழலிசையை வழங்கி இரசிகர்களை மதுரகானத்தில் திளைக்க வைத்தார். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

வீணாகானம் வழங்கிய பிரம்மஸ்ரீ சோமசுந்தர சர்மா அவர்கள் அணிசெய் கலைஞராக சிறப்பித்தார். அவர் இசைவேளையின்போதும் தனது திறமையை வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் தேவையறிந்து அரங்கபூஜையை ஆரம்பிக்கவும் ஒத்துழைத்தார். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

இளம் மிருதங்கக் கலைஞர் செல்வன் ம.லோகேந்திரன் இசைவேளையில் தனது மிருதங்க வாசிப்பின் மூலம் நிகழ்வை சிறப்பித்தார். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

அரங்கேற்ற நிகழ்வின் தொகுப்பினை ஆரம்பம் முதற்கொண்டு தனது பேச்சாற்றலாலும் சமய அறிவாற்றலாலும் தெய்வீகம் இழையோட தொகுத்து வழங்கியவர் மதிப்பிற்குரிய திரு.ஆறு.திருமுருகன் அவர்கள். "உங்களுக்கு என்ன உதவி வேண்டும்" என்று அவர் கேட்டபோது பொருத்தமான நிகழ்ச்சி அறிவிப்பாளரை முருகனே இனங்காட்டியதாக எண்ணி மகிழ்ந்தோம். அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

அடுத்தடுத்து வரும் நிகழ்ச்சிக்கேற்ப சிறந்த ஒப்பனை செய்து நாட்டிய நங்கையினைத் தயார்படுத்திய திருமதி யோகினி சண்முகநாதன் அவர்களுக்கும் அவருடன் ஒத்துழைத்த சகலருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள். அரங்கேற்றத்திற்கான நடன உடைகளை (costumes) மிக நேர்த்தியாகவும் அழகாகவும் வடிவமைத்துத் தந்த மயிலாப்பூர் சாந்திஸ் டான்ஸ் நீட்ஸ் நிறுவனத்தினர்க்கும், செல்வி தயாளினி பஞ்சலிங்கம் அவர்களுக்கும், திருமதி நிகரா இரட்நாயக்கா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

நாட்டிய அரங்கம் எவ்வாறு அமையவேண்டும் என்ற எமது கற்பனைக்கு வடிவம் கொடுத்து பூஜை நடராஜருக்கான தேரையும் அழகிய மரவடிவங்களையும் வடிவமைத்துத் தந்த ஜீவரத்தினம் சிற்பாச்சாரியாரின் மைந்தர்களுக்கு எமது நன்றிகள்.

அரங்கமண்டப அலங்கரிப்பினை வழிநடத்திய சித்திரமும் வடிவமைப்பும் விரிவுரையாளர் திருமதி சுதா விக்னமோகன் அவர்களுக்கும், செயற்படுத்திய அத்துறைசார்ந்த மாணவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

அரங்கேற்ற வைபவ அழைப்பிதழ் வெளியீட்டுமலர் என்பவற்றை அழகுடன் நேர்த்தியாக பதிப்பித்த மயூரா என்ரபிறைசஸ் நிறுவனத்தினர், ஒளி ஒலி அமைப்பினை வழங்கிய றோஸ் ஆட்ஸ் நிறுவனத்தினர், வீடியோ படப்பிடிப்பினை செய்த சுப்பஸோ நிறுவனத்தினர், புகைப்படம் எடுத்த ஜெகன் போட்டோ நிறுவனத்தினர், மண்டபத்தைத் தந்துதவிய வீரசிங்கமண்டபப் பொறுப்பாளர்கள் உதவியாளர்கள் மற்றும் நிகழ்வினை வீடியோ மூலமும் பேட்டி மூலமும் தாமாகவே முன்வந்து பதிவு செய்த டி.எம்.என் தமிழ் ஒளி நிறுவனத்தினர் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

நிகழ்வின் ஏனைய ஒழுங்குகளான விருந்தினர்களை வரவேற்றல், சிற்றுண்டி பானம் வழங்கல், அரங்கேற்ற வெளியீட்டுமலர் விநியோகித்தல் போன்றவற்றில் ஈடுபட்டு ஒத்துழைத்த நடனத்துறை விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும், யாழ் கொமர்ஷல்வங்கி ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். மண்டபம் நிறைந்த நிலையில் விருந்தினர்களின் மனங்கோணாமல் உபசரிப்பதிலும் ஆசனத்தினை வழங்குவதிலும் இவர்கள் சந்தித்த இக்கட்டான நிலையையும், அதனை எவ்வாறு சிறப்பாக சமாளித்தார்கள் என்பதையும் விளங்கிக் கொள்கிறோம்.

சிற்றுண்டி சுவையுடன் தயாரித்த மணிக்குருக்கள் ஐயா அவர்களுக்கும், சிற்றுண்டி பானம் என்பவற்றிற்குப் பொறுப்பாக இருந்து பகிர்ந்தளித்த திரு.சுகுமாரன் அவரது உதவியாளர்கள் எல்லோருக்கும் எமது நன்றிகள்.

எமது புத்திரி செல்வி துஷ்யந்தியின் அரங்கேற்ற நிகழ்வு எதுவித தடங்கலுமின்றி சிறப்பாக நடைபெற வேண்டும் என மனதார விரும்பி மண்டபத்தில் இருக்கும்போதும் கூட ஆண்டவனை வேண்டியபடி பிரார்த்தனை செய்த அன்பு உள்ளங்களை எம்மால் உணரமுடிகிறது. குறிப்பாக சுன்னாகம் பழநி முருகனின் அருளினை உணரவைத்த எமது பழநி மாமா, சாயிபக்தை கண்ணன் அம்மா அவர்களின் பாதங்களை நன்றியுடன் வணங்குகின்றோம். மேலும் அரங்கேற்றம் செய்ய எண்ணிய நாள் தொடக்கம் எமது சகல செயற்பாடுகளிலும் ஒத்துழைத்த நடனத்துறை விரிவுரையாளர் செல்வி.மைதிலி அருளையா அவர்களுக்கு எமது இதயபூர்வமான நன்றிகள். அத்துடன் நடனவிரிவுரையாளர்களான திருமதி சீதாலஷ்மி பிரபாகரன், செல்வி அருட்செல்வி அருட்சேகரம், செல்வி சியாமளா பாலசிங்கம் மற்றும் ஏனைய விரிவுரையாளர்களுக்கும் நடனத்துறை கல்விசாரா ஊழியர்களுக்கும் அரங்கேற்றம் சிறப்புற ஒத்துழைத்தமைக்காக எமது உளப்பூர்வமான நன்றிகள்.

அரங்கேற்ற நிகழ்வின் சிறப்பினை வாழ்த்திப் பாராட்டியவர்களுக்கும் கடிதம்மூலம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

நன்றி ! வணக்கம் !

**திரு.ச.இரவீந்திரா - திருமதி கிருஷாந்தி இரவீந்திரா**
**105, சாமுவேல் மான் வீதி,**
**உடுவில் சுன்னாகம்.**

(சி-26567)

# பங்களாதேஷ்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)
அல்லாஹ்வே இது என்ன சோதனை என்று அவர்கள் முறையிட்ட குரல் அவருக்குக் கேட்க முன்னரே வீழ்ந்தது அடுத்த விக்கெட். வாஸின் 5 ஆவது பந்தில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார் சன்வார் ஹூசைன். முதலாவது ஓவரிலேயே வெறும் 5 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து விழிபிதுங்கி திண்டாடிக்கொண்டிருந்தது பங்களாதேஷ். தொடர்ந்து வந்த பங்களாதேஷ் வீரர்களில் கபாலியும் மொர்டுஷாவையும் தவிர ஏனைய வீரர்கள் எவரும் சொல்லிக்கொள்ளும்படி ஆடவில்லை. கபாலி 37 பந்துகளில் 2 பௌண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 32 ஓட்டங்களை விளாசினார். மொர்டுஷா 23 பந்துகளில் 4 பௌண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட 28 ஓட்டங்களைக் குவித்தார். 31.1 ஓவர்களில் 124 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷ் அணியை சுருட்டிக்கட்டி 'பெவிலியனு'க்கு அனுப்பியது இலங்கை. 2 'மெய்டின்'கள் உட்பட 9.1 ஓவர்கள் பந்து வீசிய வாஸ் வெறும் 25 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்டுக்களைப் பறித்தார். அவரும் முரளிதரனுமே பங்களாதேஷின் 10 விக்கெட்டுக்களில் 9 விக்கெட்டுக்களை தமக்குள் பகிர்ந்து கொண்டனர். முரளி 2 'மெய்டின்'கள் உட்பட 10 ஓவர்கள் வீசி 25 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி 21.1 ஓவர்களில் வெகு இலகுவாக வெற்றி பெற்றது. 71 பந்துகளில 11 பௌண்டரிகளை விளாசி, 69 ஓட்டங்களைக் குவித்தார் அத்தப்பத்து.

வழமைக்கு மாறாக நிதானமாக ஆடிய ஜெயசூரிய 57 பந்துகளில் 7 பௌண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட 55 ஓட்டங்களைக் குவித்தார். விக்கெட் இழப்பின்றி 126 ஓட்டங்களைப் பெற்று வென்றது இலங்கை. பங்களாதேஷ் அணியை தன் வேகத்தால் தகர்த்து தூள்தூளாக்கிய வாஸ் அன்றைய ஆட்டநாயகன்.

- கனிமொழி.






## வை.அர்ஜன்

ஞாபகார்த்தமாக
லெவின்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும்
மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி - 2003
இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும்

பிரதம விருந்தினர்:- திரு.நா.வேதநாயகன்
(மேலதிக அரச அதிபர், கிளிநொச்சி)

இறுதியாட்டம்
லெவின்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் பஷன் விளையாட்டுக் கழகம்

காட்சி ஆட்டம்
லெவின்ஸ்ரார் திருமணமானவர் அணி எதிர் யாழ்.கல்வி நிலைய ஆசிரியர் அணி

இடம்:- லெவின் ஸ்ரார் மைதானம்
பொன்னையா லேன், ஆனைக்கோட்டை.
நாள் : இன்று (16.02.2003) ஞாயிறு
நேரம் : பி.ப. 2.30 (புதிய நேரம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(14560) - லெவின்ஸ்ரார் விளையாட்டுக் கழகம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மீசாலை வடக்கு (J/321)
கிராம உத்தியோகத்தர்

### கந்தையா சுந்தர்ராஜா

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் Iஇற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்வுடன் பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும் உயர் பதவிகளைப் பெறவேண்டுமெனவும் அவரது சேவை எமது பகுதி மக்களுக்கு தொடர்ந்தும் கிடைக்கவேண்டுமெனவும் வீரகத்தி விநாயகரை வேண்டி வாழ்த்துகிறோம்.

*மீசாலை வடக்கு, மீசாலை.* (17579)
தர்மகர்த்தா சபை, நடராஜ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.


## கார் விற்பனைக்கு

பாங்க் மனேஜர் ஒருவர் பாவித்த மிகச் சிறந்த நிலையில் உள்ள MIDNIGHT Blue நிற FIATREGATA பெற்றோல் கார் 16 - XXXX விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:*
Mr. K.M.தில்லைநாதன்
(கொழும்பு)
T.P.: 622856, 078-654187
(14570)


## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

வித்தாய் 25 . 10 . 1932



வேராய் 27 . 02 . 2002

### அமரர் முருகேசு சோமசுந்தரம்

(முன்னாள் உரிமையாளர், ராசன் மர அரிவு ஆலை)

திதி: சதுர்த்தி

அன்புத் தந்தையே! எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே!
எம்மைப் பண்போடும் பாசத்தோடும் வாழவைத்த அன்புத் தெய்வமே!
அப்பா! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இன்று
ஆண்டு ஒன்று ஆனாலும் எங்கள் நெஞ்சிருக்கும் வரை
உங்கள் நினைவும் இருக்கும் அந்த நினைவில்
உங்கள் முகம் நிறைந்திருக்கும் அப்பா!

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி திருமதி சோ.இராஜலட்சுமி,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*11A, ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (14525)

உ
அன்பே சிவம்

## மானிப்பாய் கோயில்பற்று இந்துசமய விருத்திச் சங்கம்

### திருமுறை விழா - 2003

இடம் : மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
காலம் : இன்று (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி
தலைவர் : செல்வி இ.சுப்பையாபிள்ளை

முதன்மை விருந்தினர்கள்:-
பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்
(தலைவர் - தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்

சிறப்பு விருந்தினர்கள்:-
செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள்
ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்கள்

கலை நிகழ்வுகள்

*அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.*

மா.கோ.இ.ச.வி.சங்கம்.


அன்பு உள்ளங்கள் அன்புடன் நாடுவது
அன்பு ஜுவலேர்ஸ்,
*யாழ்.வீதி, மானிப்பாய்.*
(14567)


## கண்ணீர் அஞ்சலி

யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய பழைய மாணவர்சங்க முன்னாள் செயலாளரும் காரைநகர் சிதம்பராமூர்த்தி கேணியடியைச்சேர்ந்த

### நாகலிங்கம் தர்மையா (குணம்)

*(ஓய்வுபெற்ற எழுது வினைஞர், புகையிரதத் திணைக்களம்)*

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எமத்துச் சிதம்பரக் கூத்தானை இறைஞ்சுகின்றோம்.

*யா/கலாநிதி.ஆ.தியாகராசா ம.ம.வி., காரைநகர்.* (14576)
அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சபை.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மார்க்கண்டு செல்லம்மா

இளவாலை, கல்லூரி வீதியை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மார்க்கண்டு செல்லம்மா நேற்றுமுன்தினம் (14.02.2003) வெள்ளிகிழமை காலமானார்.

அன்னார் கதிரேசு - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகளும் சின்னத்தம்பி மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம், கமலாதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புச்சகோதரியும் கேதீஸ்வரன் (கனடா), சாந்தீஸ்வரன், யோகேஸ்வரன் (கனடா), ரமேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் அஜந்தா (கனடா), சோபனா, கலைபரசி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுரேன், சஞ்சய், ஜெனோத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (17.02.2003) திங்கட்கிழமை பி.ப.4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சின்னத்தம்பி மார்க்கண்டு, கல்லூரி வீதி, இளவாலை.* (14577)
தகவல்: க.சுப்பிரமணியம் (சகோதரர்).

### திருமதி பொன்னு சீதேவி

*(பிரபல மரக்கறி வியாபாரி, பெரியகடை, யாழ்ப்பாணம்.)*

காரைநகரைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடம், 15/8, செபஸ்தியார் லேனை வசிப்பிடமாகவும் தற்போது விக்கினேஸ்வரா வீதி, சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னு சீதேவி அவர்கள் நேற்று (15.02.2003) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சாமி - வைரவன் தம்பதிகளின் அருமை மகளும் கந்தர் பொன்னுவின் அன்பு மனைவியும் திருமதி தம்பு தங்கம்மா, கந்தசாமி அன்னலட்சுமி, வசந்தராசா மீனாட்சி, தர்மராசா பவளம், மகேந்திரன் கனகாம்பிகை ஆகியோரின் அருமைத் தாயாரும் தரவீந்திரன் த.இளங்கோ, த.சுகந்தி, த.மயூரன், க.பாஸ்கரன் (இந்தியா), க.விஜயகரன் (தெ.ப.பொ.அ.கூ.ச.சங்கானை, நிர்.உறுப்பினர்), க.மாயாகரன் (வலி.மேற்கு கலைகலாசார சமூக மேம்பாட்டு நிறுவனத் தொடர்பாளர், சங்கானை), வ.அனிதா, வ.ரதிகுமார், வ.ரஜிதா (மாணவி, பெரியபுலம் ம.வி., யாழ்ப்பாணம்), ம.சாளினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் விளாவெளி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், சகவர்த்தகர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிற்சாமம், சங்கானை.* (C-26572)
தகவல்: க.மாயாகரன் (பேரன்)

### திருமதி சின்னத்துரை நல்லம்மா

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை நல்லம்மா அவர்கள் நேற்று (15.02.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் மனைவியும், காலஞ்சென்ற புவனராசாவின் பாசமிகு தாயாரும் சர்வகலாநிதியின் (London) மாமியாரும் வனஜா (London), வனிதா (London), காங்கேசன் (London) ஆகியோரின் பேர்த்தியும் பவன், துர்க்கா, அபினயா, அபிராம், அபிலாஷா, அஸ்விதன், அஸ்விதா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வெம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மில் ஒழுங்கை (பலாலி வீதி), உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.* (14580)
தகவல்: நவரட்ணம் சிவநேசமலர்


இல.21, நவீனசந்தை மேல்மாடியில் இயங்கிவரும்
சோதி ரெக்ஸ்ரைல்ஸின்
மலிவு விற்பனை
இந்தியன் சாறிவகைகள் மற்றும் றெடிமேட் வகைகளை திங்கள் முதல் பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் சகலவிதமான சாறிவகைகளுக்கும் ஏற்ற பிளவுஸ் பீஸ் வகைகளையும் தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
(C-26569)

## ஈ.பி.டி.பி முகாம் சேதம்

அச்சுவேலியில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்துள் நேற்று முன்தினம் நுழைந்த இனந்தெரியாதவர்கள் அங்குள்ள உடைமைகளை அடித்து நொருக்கியதாகக் கூறப்படுகின்றது.

அலுவலகத்துக்கு முன்பாகவுள்ள காவலரண்களும் சேதமாக்கப்பட்டுக் காணப்பட்டன. (ம-3-11)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமிழ்களின் சட்டபூர்வமான அபிலாஷைகள் புறக்கணிக்கப்படுவதையும் அமெரிக்கா ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. ஆனாலும், விடுதலைப் புலிகள் தமது கடந்தகால பயங்கரவாத நடவடிக்கைகளை முற்றுமுழுதாகவே கைவிட்டு தங்கள் நடத்தைகள் மூலமும் செயல்பாடுகள் மூலமும் தாங்கள் உளப்பூர்வமாக ஓர் அரசியல் தீர்வினை எட்டுவதற்கும் சமாதானத்தை அடைவதற்கும் தம்மை அர்ப்பணித்துள்ளமையை காட்ட வேண்டும். அப்போது வெளிநாட்டுப் பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகளை நீக்குவது பற்றி கட்டாயமாக அமெரிக்கா சிந்திக்கும். பயங்கரவாதப் பட்டியலில் இருந்து மட்டு மன்றி பயங்கரவாதம் சம்பந்தமான வேறெந்த பெயர் வரிசைகளிலிருந்தும் புலிகளின் பெயரை அமெரிக்கா நீக்கிவிடும்.

அதேவேளை -

இலங்கை அரசாங்கமும் தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை நிறைவுசெய்யவேண்டும். அதாவது, தமிழர்கள் தமது சொந்த வதிவிடங்களில் வசிப்பதற்கும் அவர்கள் மீன்பிடி போன்ற தொழில்களிலும் தமது சுய தொழில்களிலும் எதுவித பாகுபாடின்றியும் தொல்லைகளின்றியும் ஈடுபடக் கூடிய சூழலை உறுதிபடுத்திக்கொடுக்கவேண்டும்.

அதேவேளை - இலங்கையில் வாழும் அனைத்து மக்களதும் மனித உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். குறிப்பாக வடக்கு - கிழக்கிலுள்ள அகதிகள் உட்பட சகல தமிழ் மக்களுக்கும் அவர்களது உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தினதும் படைப் பிரிவினரதும் பொது நிர்வாக உத்தியோகத்தர்களினதும் முக்கிய கடமையாகும், - என்றார்.(ம-3)

## அமெரிக்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) திருப்தியடைகிறேன்.

குறிப்பாக ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்ளவிருப்பதும் எனது விருப்பமாகையில் அதற்காக நான் மீண்டும் வரவுள்ளேன்.

அந்தச் சந்தர்ப்பத்தில், இலங்கைக்கு மேலும் மனிதாபிமான மற்றும் பொருளாதார உதவிகளை நாங்கள் வழங்கமுடியும் என்பதை உறுதியாகக் கூறுவேன் - என்றார். (ம-3)

## மானிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வைரவப்புளியங்குளத்தில் உள்ள யுத்த நிறுத்தக்கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் முடிவடைந்தது. அங்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

வவுனியா வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேரணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றினர். பெரும் அளவில் பெண்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை-

தென்மராட்சி மாணவர் ஒன்றியத்தின ஏற்பாட்டில் சாவகச்சேரி வேம்படி சந்தியில் மறியல் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. நண்பகல் 12 மணிமுதல் ஒரு மணிநேரம் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

அந்தப் பகுதியில் ரயர்கள் எரியூட்டப்பட்டிருந்தன. அனைத்து வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டுக்கிடந்தன.

இந்தப் போராட்டம் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. (ம-3-117-164)

## இந்திய...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி) ஆகக் குறைந்த ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்த அணி என்ற புதிய சாதனையை இந்தியா ஏற்படுத்தியது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, கில்கிறிஸ்டின் விக்கெட்டை மட்டும் இழந்து 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

"அடித்து ஆடுவதற்கு ஆசைப்பட்டு பொறுப்பற்ற முறையில் ஆடி மிகமோசமாகத் தோற்றது இந்திய அணி" - என்று இந்தியப் பத்திரிகைகள் திட்டித் தீர்த்துள்ளன. (ம)

## World Cup Score card - 2003



ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி: இந்தியா
ஆட்டநாயகன்: கில்லெஸ்பி
முடிவு: 9விக்கெட்டுக்களால் ஆஸி.வெற்றி

### இந்தியா

துடுப்பாட்டம்

| | | | |
|---|---|---|---|
| எஸ்.கங்குலி | c/கில்கிறிஸ்ட் | b/லீ | 09 |
| எஸ்.டெண்டுல்கர் | lbw | b/கில்லெஸ்பி | 36 |
| வி.ஷேவாக் | c/கில்கிறிஸ்ட் | b/லீ | 04 |
| ஆர்.திராவிட் | | b/கில்லெஸ்பி | 01 |
| யுவராஜ் சிங் | lbw | b/மெக்ராத் | 00 |
| எம்.கைவ் | c/சீமொன்ஸ் | b/கில்லெஸ்பி | 01 |
| டி.மொங்கியா | c/சீமொன்ஸ் | b/லீ | 13 |
| அனில் கும்ளே | not out | | 16 |
| ஹர்பஜன் சிங் | lbw | b/ஹொக் | 28 |
| சஹீர்கான் | lbw | b/லெஹ்மன் | 01 |
| ஸ்ரீநாத் | run out(லெஹ்மன்) | | 00 |
| உதிரிகள் | | | 16 |
| மொத்தம் | (41.4ஓவர்கள்) | | 125/10 |

பந்துவீச்சு

மெக்ராத் : 8-3-23-1, லீ : 9-1-36-3, கில்லெஸ்பி : 10-2-13-3, சிமொன்ஸ் : 6-0-25-0, ஹொக் : 4.4-0-16-1, லெக்மன் : 4-0-7-1

### ஆஸ்திரேலியா

துடுப்பாட்டம்

| | | | |
|---|---|---|---|
| ஏ.கில்கிறிஸ்ட் | st/திராவிட் | b/கும்ளே | 48 |
| எம்.ஹைடன் | not out | | 45 |
| ஆர்.பொன்டிங் | not out | | 24 |
| உதிரிகள் | | | 11 |
| மொத்தம் | (22.2 ஓவர்கள்) | | 128/1 |

களம் இறங்காதவர்: டி.மார்டின், ஜி.மஹேர், ஏ.சிமொன்ஸ், ஜி.ஹொக், ஐ.ஹார்வி, பி.லீ, ஜே.கில்லெஸ்பி, ஜி.மெக்ராத்,எம்.பெவன்

பந்துவீச்சு

ஸ்ரீநாத்: 4-0-26-0, ஷகீர்கான்: 4-0-26-0, ஹர்பஜன்சிங்: 7.2-0-49-0, கும்ளே: 7-0-24-1.

### இன்றைய ஆட்டங்கள் - பெப். 16

| | | | | |
|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | Vs | நியூசிலாந்து | ஜொஹானஸ்பேர்க் | 2.00p.m. |
| இங்கிலாந்து | Vs | நெதர்லாந்து | ஈஸ்ற்லண்டன் | 2.00p.m. |
| பாகிஸ்தான் | Vs | நமீபியா | கிம்பர்லி | 2.00p.m. |

# ஆரம்பத்தில் இருந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொய்வு நிலை ஏற்பட்டுள்ளது. சமாதானப் பேச்சுக்களில் இடையில் இந்நிலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அதற்காக இருதரப்பினரும் சந்தேகங்களை வளர்க்கக்கூடாது.

நெடுந்தீவு, மானிப்பாய் ஆகிய இடங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் பேச்சுக்களில் பின்னடைவு ஏற்பட இடம் அளிக்கக் கூடாது. இரு தரப்புகளும் புரிந்துணர்வுடனும் பரஸ்பரஉறவுடனும் செயற்பட வேண்டும். சகல தரப்புகளும் பேச்சு வெற்றிபெற உதவ வேண்டும்.

இலங்கையில் பேச்சுக்கள் மூலம் சமாதானம் ஏற்பட வேண்டும் என்று இந்தியா விரும்புகின்றது. போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜப்பான் தேவையான உதவிகளை வழங்க இந்தியா அங்கீகாரம் தந்துள்ளது.

இந்தியா பேச்சைக் குழப்புவதாக கருதத்தேவையில்லை. இந்தியா மீது சந்தேகம் கொள்ளவும் தேவையில்லை. பேச்சு வெற்றிபெற இந்தியா தனது முழு ஆதரவையும் வழங்குகின்றது - என்றார்.

இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றிரவு இந்தியா புறப்பட்ட அவர் அங்கு பிரதமர் மற்றும் உயர் மட்டத் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார். (ம-3)

## மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சோதனை செய்யப்பட்டது.

பேரவையின் உறுப்பினர் ஒருவரும் மற்றிரு மாணவர்களும் அவருடன் வந்திருந்தனர். அவர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். (ம-3)

## பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர்களை அமைப்பில் சேர்க்க முடியாது எனத் தெரிவித்த போராளிகள் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைப்பதற்காக அவர்களைத் திருமலைக்கு அழைத்து வந்தனர். வரும் வழியில் உப்புவெளியில் வைத்து அவர்கள் நால்வரையும் மறித்து விசாரணை செய்த பொலீஸார், இரு சிறுமிகளையும் அவர்களின் பெற்றோரிடம் கையளித்தனர்.

போராளிகள் இருவரையும் திருமலை நீதிவான் எஸ்.தியாகேந்திரன் முன் ஆஜர் செய்தனர். இருவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக புலிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை - இரு பெண் போராளிகளும் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து திருகோணமலையில் நாளை ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(ம-3-290)

## கிளாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவத் தலைமையக அதிகாரி ஒருவர் தகவல் தெரிவிக்கையில், சிப்பாய் ஒருவர் கடந்த வெள்ளிக் கிழமை. முதல் காணாமற்போனார் என்றும் -

அவர் சூட்டுக்கு இலக்காகி மரணமாகியுள்ளதாக நேற்றுத் தகவல் கிடைத்தது என்றும் - சொன்னார். (ம-3)

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு கிருஷ்ணன்

(கட்டட ஒப்பந்தகாரர்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கிருஷ்ணன் நேற்று (15.02.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - லக்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் பிரபாகரனின் (கனடா) பாசமிகு தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2003) திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி: பாக்கியலட்சுமி
மகன்: பிரபாகரன் (கனடா)

"சரவணம்"
இணுவில் மேற்கு, இணுவில். (14582)

### செல்வன் டானியேல் சயனன்

அல்வாய் வடமேற்கைச் சேர்ந்த திரு.திருமதி றோஸ் ஜெயராணி அருட்செல்லத்தின் மகன் செல்வன் டானியேல் சயனன் கொழும்பில் காலமானார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
S.R.கணேசராசா (சகோதரன்)
070-212590, 21-0226-3199

கொழும்பு
01-685697

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

## 4ஆவது ஆண்டு நினைவுப் பூக்கள்



மடியில் 01 . 06 . 1949

மண்ணில் 01 . 03 . 1999

### அமரர் இராமகிருஷ்ணன் நாகராசா

திதி: சதுர்த்தசி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள், வைக்கப்படுவர்"

ஆண்டுகள் நான்கு ஆனதே அப்பா!
ஆறவில்லையே எமது துன்பம்
காலமெல்லாம் வாடுகின்றோம் உம் நினைவில்!
எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே!

"லெட்சுமி இல்லம்"
88/5c கேசாவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
0777 038772

தங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்
ஸ்ரீ லக்சுமி ஜுவல்லறி,
220A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (14519)

## மரண அறிவித்தல்கள்

### வித்துவான் சோமாஸ்கந்தமூர்த்தி திலகவதி

காரைநகர், சின்னாலடி தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கெருடாவில் தெற்கு, பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற வித்துவான் சோமாஸ்கந்தமூர்த்தியின் பாரியார் திலகவதி 14.02.2003 ஆம் திகதி சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகளும் பரமு - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வித்துவான் சோமாஸ்கந்தமூர்த்தியின் அன்பு மனைவியும் கணேசமூர்த்தி (உதயன் பணிமனை) அவர்களின் அன்புத் தாயும் நாகேஸ்வரி அவர்களின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (வைத்திய அதிகாரி), காலஞ்சென்ற திருநாவுக்கரசு (அதிபர்), தங்கம்மா அவர்களின் அன்புச் சகோதரியும் மரகதம்மா, பரமேஸ்வரி, கந்தசாமி ஆகியோரின் மைத்துனியும் குலேந்திரன் (கிராம சேவையாளர்), பிரபாகரன், ஏகாம்பரநாதன் (வ.பி. போக்குவரத்துச்சபை) ஆகியோரின் அன்பு மாமியும் சத்திதேவி (பிரான்ஸ்), மங்கையற்கரசி (கொழும்பு) ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் திரியம்பகன், தயாபரன், அகிலரூபன், விக்கினேஸ்வரன், கருணாகரன், அம்புஜாசினி, ரேவதி, தயாபரி, நிமலன், பகீரதி ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பாடசாலையடி கெருடாவில் தெற்கில் இன்று (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காட்டுப்புலம் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலையடி
கெருடாவில் தெற்கு,
தொண்டமனாறு
T.P 070-212692

(சி-26573)

தகவல்:
சோ.கணேசமூர்த்தி
(மகன்)

### திருமதி டொமினிக்கா வேதநாயகம்

சில்லாலையைச் சேர்ந்த திருமதி டொமினிக்கா வேதநாயகம் நேற்று (15.02.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிராமசேவையாளர் வேதநாயகத்தின் அன்பு மனைவியும் திருமதி மேரி றெஜினா இம்மானுவேல் (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி மேரி மாக்கிறீட் ஏபிரகாம் (ஓய்வுபெற்ற புள்ளிவிவர உத்தியோகத்தர், வவுனியா), செல்வி டொமற்றில்டா ஜோனாஸ், பிரான்சிஸ் சேவியர் வில்சன் ஜோனாஸ் (கிறின்லி வங்கி, கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி மற்றில்டா ஜோசப்பின் (நியூஸிலாண்ட்) அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது அடக்க ஆராதனைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை

(சி-26574)

தகவல்:
சு.இம்மானுவேல்.

### திருமதி சிவசம்பு அன்னம்மா

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசம்பு அன்னம்மா நேற்று (15.02.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்புவின் மனைவியும் குமார் (கொழும்பு), சாந்தி (சுவிஸ்), சிவகுமார் (இந்தியா), காலஞ்சென்ற வசந்தி மற்றும் அனந்தி (முல்லைத்தீவு, கச்சேரி), கிரிகுமார்(யாழ். A.K.S அரிசி ஆலை நிர்வாகி, வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு தாயும் கந்தையா, சபேஸ்வரன், எழிலன் ஆகியோரின் மாமியும் சஞ்சிவ்குமார், மதுரா, நல்விழி, எழில்விழி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

(14581)

தகவல்:
கிரிகுமார் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.